குறுந்தொகை விருந்து

டாக்டர் மு. வரதராசன்

குறுந்தொகை விருந்து

டாக்டர் - மு. வரதராசன், எம்.ஏ., எம்.ஓ. எல்., பிஎச். டி.
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி

விற்பனை உரிமை

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை - 1.

ரூ. 1-8-0

ஏப்ரல் 1956
உரிமை ஆசிரியர்க்கு

சென்னை அரசாங்கத்தின் பரிசு பெற்றவை :

கள்ளோ ? காவியமோ ? (புனைகதை)
அரசியல் அலைகள் (கட்டுரைகள்)

தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பெற்றவை :

திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் (ஆராய்ச்சி)
விடுதலையா ? (சிறுகதைகள்)
மொழிநூல் (ஆராய்ச்சி)

தாயக வெளியீடு
சென்னை–30

காக்ஸ்டன் அச்சகம்,
சென்னை - 1.

முன்னுரை

மனோரஞ்சிதம் சிறந்த மணம் உள்ள மலர்தான். அதற்காகப் பவழமல்லிகையை மணமற்றது எனப் பழித்தல் கூடாது. பலாப்பழத்தைத் தின்ற நாவால் தக்காளியைத் தின்று அதனைச் சுவையற்றது எனக் குறை கூறலாகாது. மணமும் சுவையும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வகையாக அமைந்திருக்கும். மனோரஞ்சிதத்தில் உள்ளதைவிட நுட்பமான வகையில் பவழமல்லிகையில் மணம் அமைந்துள்ளது. பலாப்பழத்தில் உள்ள சுவையைவிடத் தக்காளிப் பழச்சுவை நுட்பமானது. மனோரஞ்சித மலரையும் பலாப்பழத்தையும் நுகர்வதற்குப் புலனுட்பம் தேவையில்லை. நீர்க்கோவையால் அடைப்பட்ட மூக்கும் வெற்றிலைபாக்கால் காவி ஏறிய நாக்கும் இவற்றை உணர்தலும் முடியும். ஆயின் இத்தகைய பொறிகளைக்கொண்டு பவழமல்லிகை மணத்தையும் தக்காளிப்பழச் சுவையையும் உணர்தல் இயலாது. பொறி புலன்கள் நுண்ணியவாய் நலனுற அமைந்திருந்தால் தான் இவற்றை உணர்தல் இயலும்.

கலைகளிலும் இவ்வாறு நுட்பமுடையனவாய் அமைந்தவை உண்டு. அவற்றை உணர்ந்து பயன் பெற ஓரளவு பயிற்சியும் பண்பாடும் தேவை.

நுண்கலை வளர்வதற்குக் குடியாட்சியைவிட முடியாட்சி உகந்ததாக இருந்தது என்பதற்குப் பல நாடுகளின் வரலாறுகள் சான்றாக உள்ளன. நுட்பம் இல்லாத கலை பலரும் உணர்வதற்கு எளியது. ஆதலால், குடியாட்சிக் காலத்தில் அது எளிதில் பரவி விடும்; அதனால் கலையின் சிறப்புக் குன்றுவதற்கும்

இடம் உண்டு. முடியாட்சிக் காலத்தில் அரசன் எவ்வழியோ அவ்வழியே குடிகளும் வாழ்தல் இயற்கை. முடியுடை வேந்தர் கலைத்துறையில் போதிய ஆர்வமும் பயிற்சியும் உடையவராயின், அவர் உயர்ந்த நுண்கலையையே போற்றுவர். அவரைப் பின்பற்றிக் குடிமக்களும் அந்த நுண்கலையைப் போற்றிடுவர். இந்த நாட்டில் கூத்து இசை முதலிய கலைகள் பல ஒவ்வொரு காலத்தில் உயர்ந்தோங்கி வளர்ந்தமைக்குக் காரணம் அவ்வக்காலத்து முடிமன்னர் அவற்றைக் கற்றுத் தேர்ந்து போற்றியதே ஆகும். மன்னர் கலைஞரை ஓம்பி அவரிடம் கலையுள்ளத்தோடு ஈடுபட்டிருந்தனர். நுண்கலையையே மன்னர் பலர் தம் பொழுதுபோக்காகக் கொண்டிருந்தனர். அதனால் அவை நாட்டில் விரைந்து பரவுதல் முடிந்தது. குடியரசில் மக்கள் பலர் இத்தகைய நுண்கலையுணர்வு பெற்றவர்களாக விளங்கும் காலம் வரையில், இந்த நல்ல நிலை நிலவுதல் அரிது. (அதனால் பெறற்கரிதாய்ப் பெற்ற குடியரசு வேண்டா என்பதும், பழங்கால முடியரசு வேண்டும் என்பதும் கருத்து அல்ல. கலையைப் பொறுத்தவரையில் நேரும் மாறுதலை எடுத்துக்காட்டுவதே இங்கு நோக்கமாகும்.) இக்காலத்தில் கலைஞர் தாமே நுட்பமானவற்றை இயற்ற வேண்டும் என ஆர்வம் கொள்வாராயினும், ஓரளவு புகழ் பெற்றுப் பொதுமக்களின் உள்ளத்தில் நிலையான இடம்பெற்று உயர்ந்த பிறகு அவற்றை இயற்றினால்தான் பயன் விளையும்.

நுண்கலையை உணர்ந்து போற்றுவதற்கு நுட்பமான உணர்வும் வேண்டும்; ஓய்வான அமைதியும் வேண்டும். மக்கள் நுண்கலையைப் பெரிதும் போற்றவில்லை எனின், அது அவர்களின் குறை அன்று;

கலைக்கு உரிய அளவில் அவர்களுக்கு ஓய்வும் அமைதியும் நல்காத காலத்தின் குறை அது; வாழ்க்கைப் போக்கின் குறை அது. காலம் இன்று வேகமாகச் சுழல்கிறது. இந்நூற்றாண்டின் நாகரிகத்தையே 'வேகம்' என்ற ஒரு சொல்லால் குறிக்கலாம். விரைந்து இயங்குதல், விரைந்து அறிவித்தல் அறிதல், தட்ப வெப்பத்தை விரைவில் மாற்றுதல், பகைவர் நாடுகளை ஒரு நொடியில் அழித்தல் முதலாகப் பல வகையிலும் நம் வாழ்க்கைப் போக்கு வேகம் பெற்றுள்ளது. பயன் காண்பதிலும் இதுவே குறிக்கோளாக உள்ளது. மின் பொத்தானைத் தொட்டவுடனே விளக்கு ஒளி வீசுதல் போல், மின்விசிறி காற்று வீசுதல் போல், பாட்டைப் படித்தவுடனே அதன் பயன் முழுமையும் பெற்றிட வேண்டும் என இன்று நாடுகின்றனர். பாட்டு, இவ்வாறு யந்திர நாகரிகத்திற்குக் கட்டுப்பட்டுப் பயன் தருவது அன்று; அறிவியல் எவ்வளவு முன்னேறினும் கதிரவன் தன் போக்கை மாற்றிக்கொள்ளாதது போல், நுண்கலையும் வாழ்க்கை வேகத்தைக் கருதித் தன் இயல்பை மாற்றிக் கொள்ளாமல் ஒரு தன்மையதாக உள்ளது. ஆகவே, மின்விளக்கும் மின்விசிறியும் போல், உடன் பயன் தரும் எனப் பாட்டினிடம் எதிர்பார்த்தல் கூடாது.

குறுந்தொகையில் ஒரு பாட்டு: தலைவி தினைப் புனத்தில் கிளி ஓட்டிக்கொண்டிருக்கிறாள். தலைவன் அவளை அணுகி அவளுடைய அழகைப் பாராட்டுகிறான். அவளுடைய கையில் உள்ள குளிர் என்னும் கருவியால் ஒலி எழுப்புகிறாள். அவள் அதை ஒலிப்பது இசை போல் நயமுற அமைந்து இனிய தாளம் உடையதாக இருக்கிறது என்கிறான். அவளுடைய இனிய பாட்டு என விரும்பிக் கேட்டுக்

கிளிகள் தினைக்கதிர்களை விட்டு எழாமல் உள்ளன என்கிறான். கிளி ஓட்ட முடியாமையால் வருந்திக் கலங்கிய அவளுடைய கண்கள், மலைச்சாரலில் சுனையில் பூத்த குவளைமலர்கள் மழைநீரை ஏற்று இதழ் கலைந்து விளங்குதல் போல் உள்ளன என்கிறான். இவ்வாறு கூறுமளவில் தலைவனுடைய பாராட்டு அமைந்துள்ளது. இதனால் அவளுடைய இளமையையும் அழகையும் தோன்றவைக்கின்றது புலவருடைய பாட்டு.

சுடுபுன மருங்கிற் கலித்த ஏனல்
படுகிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே
இசையின் இசையா இன்பா ணித்தே ;
கிளிஅவள் விளிஎன எழல்ஒல் லாவே ;
அதுபுலந்து அழுத கண்ணே, சாரல்
குண்டுநீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை
வண்டுபடு பல்இதழ் கலைஇத்
தண்துளிக்கு ஏற்ற மலர்போன் றவ்வே.

(குறுந். 291)

பிற்காலப் புலவர் சிலர், இதற்காக முப்பது நாற்பது செய்யுள் இயற்றி, உடல் உறுப்புக்கள் எல்லாவற்றையும் பற்பலவாறு புகழ்ந்து, தெரிந்த உவமைகள் வருணனைகள் எல்லாவற்றையும் விடாமல் கொட்டிச் சலிப்புறச் செய்வர். தம் திறமையைக் காட்டும் நோக்கத்துடன் தொடங்கிக் காமச்சுவை பெருகச் செய்திருப்பர்.

இச் சிறு பாட்டைப் பாடிய பெரும்புலவர் கபிலர் இரண்டொன்றை எடுத்துக் கூறித் தலைவியின் இளமையையும் அழகையும் அவற்றைக் கண்டு போற்றும் காதலனுள்ளத்து உணர்வையும் தூய சொற்களால் வடித்துள்ளார். இப்பாட்டில் எல்லாம்

உள்ளன. பாட்டுக்கு இன்றியமையாத உணர்ச்சி, கற்பனை, ஒலிநயம் மூன்றும் உள்ளன. ஆயினும் பிற்காலத்து உலா தூது முதலியவற்றின் வருணனைகளில் மகிழ்ந்து அமிழும் உள்ளம், இவற்றை உணர்தல் அரிது. பாட்டில் உணர்த்தப்படும் உணர்ச்சி நுண்ணியது; அமைந்துள்ள கற்பனை நுண்ணியது; இயைந்துள்ள ஒலிநயமும் நுண்ணியது. நுண்ணிய உணர்வுடன் பண்பட்ட உள்ளமே இவற்றை உணர்தல் இயலும்.

நான்கடி முதல் எட்டடி வரையில் அமைந்த இத்தகைய பழங்காலத்து அகப்பொருட் பாட்டுக்களின் தொகுப்பே குறுந்தொகை. பலமுறை பயின்று நுகரத்தக்க கலைவிருந்து இப்பாட்டுக்களில் உள்ளது. பலமுறை பயில்வதற்கு உரிய சிறிய உதவியாகப் பாட்டின்முன் தரப்படும் சிறு விளக்கத்துடன் நூறு பாட்டுக்கள் இந்நூலில் உள்ளன.

சங்கப் பாட்டுக்கள் தமிழர் பலர் அறிந்த இலக்கியச் செல்வமாக விளங்கினால்தான் எதிர்காலத்தில் வாழ்தல் இயலும். பலர் போற்றாத எதற்கும் இனி வாழ்வு அரிதாகும். அதனால் எளிதில் கற்பதற்கு உரிய வகையில் இப்பாட்டுக்களை அமைத்தல் வேண்டுவதாயிற்று.

அரிய தொரு நூலை, எளிய முறையில், வேறு வடிவில், சுருக்கமான விளக்கத்துடன், தொடர்ச்சியான கதை போன்ற போக்கில் தர முயன்றபோது பெரிதும் தயங்கினேன். காரணம் கருதித் தமிழகம் இந்தச் சிறிய முயற்சியை ஏற்றருளும் என நம்புகிறேன்.

மு. வரதராசன்

பொருள்

			பாட்டுஎண்	பக்கஎண்
1.	அறிந்தாளோ? இல்லையோ?	...	142	13
2.	வாழ்தலும் பழியே	...	32	14
3.	அன்புடை நெஞ்சம்	...	40	15
4.	ஊமன் காவல்	...	58	16
5.	தீ அவித்த நீர்	...	95	17
6.	கலங்கும் நெஞ்சம்	...	176	18
7.	பார்வையை நினைக்க	...	298	19
8.	அரியதை விரும்பினுய்	...	120	20
9.	யாம் உறங்கவில்லையே	...	138	21
10.	நெஞ்சம் செல்கின்றது	...	153	22
11.	அவள் கள்வி	...	312	23
12.	இரக்கம் இல்லையோ?	...	158	24
13.	எவ்வாறு வந்தாயோ?	...	355	25
14.	தோள் மெலிவது ஏன்?	...	299	26
15.	வெள்ளத்தின் கொடுமை?	...	327	27
16.	நட்பின் பெருமை	...	3	28
17.	வேலன் காரணமா?	...	111	29
18.	இன்று வாராதிருப்பாளுக	...	360	30
19.	தலைவன் மார்புக்கா?	...	362	31
20.	இன்னும் பாடுக	...	23	32
21.	இன்று எங்கே?	...	379	33
22.	களைவோர் இல்லை	...	305	34
23.	உயிர் மிகச்சிறிது	...	18	35
24.	யான் அஞ்சுகிறேன்	...	324	36
25.	உன் பொறுப்பே	...	397	37

			பாட்டுஎண்	பக்கஎண்
26.	ஞாயிறும் நெருஞ்சியும்	...	315	38
27.	உயிர்தானே போகும்?	...	334	39
28.	பசலை போனதோ?	...	249	40
29.	அவர் தவறு அன்று	...	87	41
30.	பொறுக்க வல்லவர்க்கே நல்லது	...	38	42
31.	மருட்டிய கனவு	...	30	43
32.	பகையாய் முடிந்தது	...	394	44
33.	இதுதான் பயனோ?	...	381	45
34.	அலர்க்கு அஞ்சினனோ?	...	302	46
35.	மலையை வந்து பார்	...	367	47
36.	ஒடிந்த கிளை	...	112	48
37.	வேங்கையை மறந்தாரோ?	...	266	49
38.	சொல்வோர் இல்லையே	...	310	50
39.	வாழத் தகாத ஊர்	...	145	51
40.	யான் ஒருத்தியே	...	6	52
41.	என்ன செய்யட்டும்	...	28	53
42.	யாரும் இல்லை	...	25	54
43.	அன்னை அறிந்தால்—!	...	316	55
44.	எங்கும் அலர் பரவியதே	...	97	56
45.	கண்ணீரும் நினைப்பும்	...	105	57
46.	நீ சொல் தும்பி!	...	392	58
47.	அவள் வருவதா?	...	56	59
48.	வீடு இன்பமானதோ?	...	124	60
49.	பழியும் உண்டு	...	217	61
50.	அந்தோ நாணமே!	...	149	62
51.	கைவிடாமல் காப்பாற்று	...	115	63
52.	எவ்வாறு துணிந்தாளோ?	...	396	64
53.	அதையும் குடிப்பாளோ?	...	356	65
54.	மழை பெய்து குளிர்க	...	378	66

			பாட்டுஎண்	பக்கஎண்
55.	களைத்தேன் ; கண்டிலேன்	...	44	67
56.	இவர்கள் யாரோ ?	...	7	68
57.	நல்ல ஊழ் !	...	229	69
58.	அன்னை வாழ்க !	...	83	70
59.	அன்னையின் அரிய உதவி	...	361	71
60.	மகள் முகம் மகிழ்ந்தது	...	157	72
61.	எங்கும் தங்காத தேர்	...	242	73
62.	மிகப் பொறுத்தீர் !	...	178	74
63.	தேரைத் தடுத்த கண்ணீர்	...	256	75
64.	அந்த அறிவு வேண்டா	...	20	76
65.	அவரே உரைத்தார்	...	135	77
66.	வேடிக்கையாய்ச் சொன்னேன் !	...	325	78
67.	இரு பேராண்மை	...	43	79
68.	யானையின் அன்பு	...	37	80
69.	பொல்லாத வழி	...	283	81
70.	வீண் ஆரவாரம்	...	12	82
71.	பசலை அழித்தது	...	27	83
72.	பாழடைந்த ஊர்	...	41	84
73.	அவரும் அறிவாரோ ?	...	190	85
74.	பிறர்க்கும் கேட்குமோ ?	...	87	86
75.	எப்படியும் காண்போம்	...	130	87
76.	அழியும் சிறு நுரை	...	290	88
77.	ஊமன் துயரம்	...	224	89
78.	நல்வினை உடையவர்கள் !	...	344	90
79.	சொல்வார் உண்டோ ?	...	98	91
80.	கனவே வாழ்க !	...	147	92
81.	பழிக்க வேண்டா	...	252	93
82.	இத்துன்பமே இனியது	...	288	94
83.	வெள்ளம் வற்றியது	...	99	95

			பாட்டுஎண்	பக்கஎண்
84.	அன்பு அவ்வளவுதான்	...	196	96
85.	மலர் தந்த முள்	...	202	97
86.	உன்னை விட்டு வாழோம்	...	309	98
87.	எம் வீட்டில் சேர்த்துவிடு	...	354	99
88.	மறுமையில் ஆகுக	...	49	100
89.	மான் பிரியுமோ?	...	183	101
90.	கார் நகைக்கின்றதே!	...	126	102
91.	மயிலுக்கு அறிவில்லை	...	251	103
92.	தேர்மணியின் ஒலியோ!	...	275	104
93.	எல்லாம் மாலையே!	...	234	105
94.	நெஞ்சம் விரைகின்றது	...	131	106
95.	நகைப்பது தகுமோ?	...	162	107
96.	பதரான நாட்கள்	...	323	108
97.	பாணன் வாழ்க!	...	75	109
98.	அரிய உதவி!	...	400	110
99.	காக்கைக்குக் கைம்மாறு	...	210	111
100.	பெய்க மழையே!	...	270	112

1. அறிந்தாளோ? இல்லையோ?

தினைப்புனத்தில் தலைவன் தலைவியைக் கண்டு காதல் கொண்டான்; அவளுடைய அன்பைப் பெற முடியாமல் ஏங்கினான். அவளோடு நெருங்கிப் பழகும் தோழியிடம் தன் குறையைச்சொல்லத் துணிந்தான். தோழியை அணுகி,தான் அவள்பொருட்டு இரவெல்லாம் உறங்காமல் பெருமூச்சு விட்டு வருந்துவதையும், தினைப்புனத்தைவிட்டு நீங்கிய பிறகும் தன்நெஞ்சம் அவளிடமே சென்றிருப்பதையும் கூறினான்:

"சுனையில் பூக்களைப் பறித்து, மாலைகளைத் தொடுத்து, தினைப்புனத்தில் கிளி ஓட்டி இங்கெல்லாம் காட்சி அளிக்கும் அந்த அழகி என் காதலை அறிந்தாளோ, இல்லையோ? நள்ளிரவிலும் யான் கண்ணுறங்குவதில்லை; தூங்கும் யானை போல் பெருமூச்சு விட்டு வருந்துகின்றேன். தினைப் புனத்தை விட்டு நீங்கி என் ஊருக்குச் சென்ற பிறகும் என் நெஞ்சம் அவளிடமே உள்ளது."

சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனக்கிளி கடியும் பூங்கண் பேதை
தான்அறிந் தனளோ! இலளோ? பானாள்
பள்ளி யானையின் உயிர்த்துஎன்
உள்ளம் பின்னும் தன்னுழை யதுவே.*

---

*குறுந்தொகை, 142. கபிலர்.

குற்று - பறித்து. தொடலை - மாலை. தைஇ - செய்து. பூங்கண் - மலர் போன்ற கண்களை உடைய. பேதை - இளம்பெண். பானாள் - நள்ளிரவு. பள்ளி - படுக்கை. உயிர்த்து - பெருமூச்சு விட்டு. உழை - இடம். தன்உழையது - தன்னிடத்தது.

2. வாழ்தலும் பழியே

தலைவன் தலைவியிடம் காதல் கொண்டபின் அவளைப் பெறுவதற்குத் தோழியின் உதவியை நாடினன். தோழியோ அவனை நெருங்கவிடாமல் மறுத்துவந்தாள். அவள் மனம் மாறி இசையும்படியாகத் தலைவன் அவளிடம் தன் காதலின் சிறப்பை எடுத்துரைத்தான். உண்மையான காதலால் வருந்தும் தனக்கு உதவி செய்யாவிட்டால், மடல் ஏறித் தன்னை வருத்திக்கொள்ளத் துணிந்திருப்பதாகவும் கூறினன்.

" காலை, நண்பகல், துன்புற்றுச் சோரும் மாலை, ஊரெல்லாம் உறங்கும் நள்ளிரவு, விடியற்காலம் என்னும் இப் பொழுதுகள் ஒருவனுக்கு வேறுபடத் தெரியுமானால், அவனுடைய காதல் உண்மை அன்று. உண்மைக் காதலுடைய யான், குதிரை என்று மடல்மேல் ஏறித் தெருவில் வந்து நின்று யாவரும் தெளியுமாறு இதை வெளிப்படுத்தினாலும் பழியாகும். அவ்வாறு செய்யாமல் தலைவியைப் பெறாமல் பிரிந்திருக்க நேரும்போது யான் உயிருடன் வாழ்தலும் பழியாகும். "

காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றுஇப்
பொழுதிடை தெரியின் பொய்யே காமம் ;
மாஎன மடலொடு மறுகின் தோன்றித்
தெற்றெனத் தூற்றலும் பழியே ;
வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே.*

---

*குறுந். 32.

கையறு - செயலற்று வருந்துகின்ற. மா - குதிரை. மடல் ஏறல் — பனைமடலால் குதிரைபோல் செய்து, அதன்மேல் ஏறி நாற்சந்தியில் நின்று தன் காதலைப் பிறர் உணருமாறு செய்து தன்னைத் தானே வருத்திக்கொள்ளல். மறுகு - தெரு. தெற்றென — தெளிவாக. தலைவரின் — வரின்.

3. அன்புடை நெஞ்சம்

தலைவன் தன் காதலியின் பொருட்டு ஏங்கிய ஏக்கம் தீர்ந்தது. விரும்பியவாறு அவளுடைய நட்பைப் பெற்று மகிழ்ந்தான். பெற்றோர் அறியாமல் பெற்ற உறவு ஆகையால் தலைவியின் உள்ளத்தில் ஒருவகைக் கலக்கம் இருந்தது. தலைவன் தன்னை விட்டுப் பிரிந்து சென்றால் என்னசெய்வது என்ற ஏக்கம் அவளுடைய மகிழ்ச்சியில் கலந்திருந்தது. இதை உணர்ந்த தலைவன், தம் உள்ளம் கலந்த கலப்பு எத்தகையது என்பதை எடுத்துக்காட்டி, இனித் தம் வாழ்வில் பிரிவு இல்லை என நம்புமாறு தேற்றினான்.

“என் தாயும் உன் தாயும் ஒருவர்க்கு ஒருவர் யார் யாரோ? என் தந்தையும் உன் தந்தையும் எந்த முறை உடைய சுற்றத்தார்? யானும் நீயும் இதற்குமுன் எவ்வாறு ஒருவரை ஒருவர் அறிவோம். ஒருவகை உறவும் தொடர்பும் இல்லாதிருக்க, செம்புலத்தில் பெய்த நீர் பிரிவுக்கு இடம் இல்லாமல் கலந்துவிடுதல்போல், நம் அன்புடைய நெஞ்சங்கள் கலந்து விட்டனவே!”

யாயும் ஞாயும் யாரா கியரோ ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர் ?
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே.*

---

*குறுந். 40. செம்புலப் பெயனீரார்.

பாட்டில் அமைந்துள்ள உவமைச் சிறப்பால் வழங்கியது இப் பெயர்.

யாய் - என் தாய் (தன்மை). ஞாய் - உன் தாய் (முன்னிலை). எந்தை, நுந்தை: அவ்வாறே. கேளிர் - சுற்றத்தார். பெயல் — மழை. புலம் — நிலம்.

4. ஊமன் காவல்

தலைவன் முன்போல் தன்னிடம் நெருங்கிப் பழகாமல் வாடி மெலிவதைக் கண்டான் பாங்கன் (அவனுடைய நண்பன்). "உன் கவலையை என்னிடம் மறைக்கின்றாயே, காரணம் என்ன?" என்று கேட்டான். தலைவன் தன் காதலைப் பற்றிக் கூறினான். இதற்காகவா வீரன் ஒருவன் வாடிவருந்துவது என்று பாங்கன் கடிந்துரைத்தான். தலைவன் அவனுக்கு மறுமொழியாகப் பின்வருமாறு கூறினான்.

"இடித்துரைக்கும் கேளிரே! இதை உம் சொந்தக் கடமையாகக் கருதி நிறைவேற்றினால் நல்லது. இதுவே யான் விரும்புவது. கதிரவன் காய்கின்ற வெப்பம்கொண்ட பாறையில் கை இல்லாத ஊமை (வேறு ஒன்றும் செய்ய முடியாமல், பிறர்க்குச் சொல்லவும் முடியாமல்) தன் கண்ணால் மட்டும் காவல் காக்கின்ற வெண்ணெய் உருகுதல் போல், இந்தக் காதல்நோய் பரவி வருத்துகின்றது. பொறுத்துத் தாங்க முடியாததாக உள்ளது."

இடிக்கும் கேளிர்! நும்குறை யாக
நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல ;
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கின்
கைஇல் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பாந்தன்று இந்நோய் நோன்றுகொளற்கு அரிதே.*

---

*குறுந். 58. வெள்ளிவீதியார்.

கேளிர் - சுற்றத்தார் - பாங்கன். குறை - இன்றியமையாத ஒன்று. தில்ல - விருப்பம் எனத் தெரிவிக்கும் இடைச்சொல். அறை - பாறை. மருங்கின் - இடத்தில். பரந்தன்று - பரந்தது. நோன்றுகொளல் - பொறுத்துக்கொளல். அந்த ஊமன்போல், தன் காதலை எவரிடமும் சொல்ல முடியாமல் தான் வருந்துவதாகத் தலைவன் குறிப்பிட்டான்.

5. தீ அவித்த நீர்

"நண்பனே! நீ வலியவன்; வலிமைக்குப் பெயர் பெற்றவன்; பகைவரைத் தாக்கி அழிப்பதில் தீயைப் போன்றவன், இப்படிப்பட்ட நீ ஒரு பெண்ணின் காரண மாகக் கவலைப்பட்டு வாடுகின்றாயே. இது உனக்குத் தகுமா?" என்று நண்பன் தலைவனைக் கேட்டான். அவ் வாறு கேட்பதன் வாயிலாக, அவனுடைய உள்ளத்தின் சோர்வைப் போக்கித் தேற்ற எண்ணினான். தலைவன் அதை உடன்பட்டு, மேற்கொண்டு தலைவியின் ஆற்றலை விளக்கித் தன் துயரைப் புலப்படுத்தினான். அவள் தீயைப் போன்ற ஆற்றலால் எதிர்க்கத் தக்கவள் அல்லள் என்றும் நீரைப் போன்ற மென்மைத் தன்மை உடையவள் என்றும், பெண்மையின் அந்த மென்மைக்கு முன்னே ஆண்மையின் வன்மை நிற்காது என்றும் கூறினான்.

"மலைநாட்டுத் தலைவனுடைய மகளாகிய அவளுடைய மென்மை, நீரைப் போன்றது. அந்த நீர் போன்ற மென்மை, தீயைப் போன்ற என் வலிமையை அவித்துவிட்டதே! என்ன செய்வேன்?"

சிறுகுடிக் குறவன் பெருந்தோள் குறுமகள்
நீர்ஓ ரன்ன சாயல்
தீஓ ரன்னஎன் உரன்அவித் தன்றே.*

---

* குறுந். 95. கபிலர்.

சிறுகுடி - மலைநாட்டு ஊர். குறவன் - குன்றவன். ஓரன்ன- ஒரு தன்மையான - போன்ற. சாயல் - மென்மை. உரன் - வலிமை. அவித்தன்று - அவித்தது.

6. கலங்கும் நெஞ்சம்

தலைவனுடைய வேண்டுகோளுக்குத் தோழி இசைந்தாள். பிறகு தோழி தலைவியை அணுகி அவனுடைய அன்பைத் தெரிவித்தாள். தலைவன் பலநாளும் வந்து வந்து பணிவாக வேண்டிக்கொண்டதையும், அதைக் கேட்டுக் கேட்டுத் தன் நெஞ்சம் நெகிழ்ந்துவிட்டதையும், இப்போது அவன் வாராமல் நின்றுவிட்டதால் தன் நெஞ்சம் கலங்குவதையும் எடுத்துரைத்தாள்.

“அவன் ஒருநாள் வரவில்லை; இருநாள் வரவில்லை; பலநாளும் வந்தான். பணிவான சொற்களைத் திரும்பத் திரும்பச் சொன்னான். அதனால் என் நல்ல நெஞ்சம் நெகிழுமாறு செய்தான். இவ்வாறு செய்துவிட்ட பிறகு மலையில் முதிர்ந்து விழும் தேன்கூட்டைப் போல் போய் விட்டான். நமக்குப் பற்றுக்கோடாக உள்ள அத் தலைவன் எங்கே இருக்கின்றானோ? வேறு நல்ல நாட்டில் பெய்த மழைநீர் இங்குக் கலங்கி ஓடிவருவதுபோல் என் நெஞ்சம் கலங்குகின்றது.”

ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றிஎன்
நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை
வரைமுதிர் தேனின் போகி யோனே;
ஆசுஆகு எந்தை யாண்டுஉளன் கொல்லோ?
வேறுபுலன் நன்னாட்டுப் பெய்த
ஏறுடை மழையின் கலிழும்என் நெஞ்சே.*

---

*குறுந். 176. வருமுலையாரித்தி.

பயிற்றி – பலமுறை சொல்லி. நன்னர் – நல்ல. பின்றை– பிறகு. ஆசு – பற்றுகோடு. எந்தை – நம் தலைவன். புலன் – நிலம். ஏறுஉடை – பெரிய இடியோடு கூடிய. கலிழும் – கலங்கும்.

7. பார்வையை நினைக்க

தலைவனுடைய உண்மையான அன்பைத் தோழி உணர்ந்தாள். உணர்ந்தபிறகு தலைவியிடம் அதை எடுத்துரைத்தாள். காதலால் அவன் வருந்துவதையும், நல்ல பண்பாடு உடையவனுகையால் வாய்விட்டுக் கூறவும் தயங்குவதையும், நாள்தோறும் வாடி மெலிவதையும் விளக்கினுள். அவன்பார்வையே துன்பம் நிறைந்ததாய் இருத்தலைக் குறிப்பிட்டாள். அவனுடைய அன்புக்கு இணங்காவிட்டால் தன்னைத் தான் வருத்திக்கொள்வான் என்றும், அதற்குத் துணிந்தவனுய்த் தோன்றுகிறுன் என்றும் கூறித் தலைவியின் மனத்தை மாற்ற முயன்றுள்.

“ நம்முடைய தெருவை அணுகி மெல்ல வந்து வந்து, வாய் திறக்காமலே இருந்து எப்போதோ ஒருமுறை பேசுகிறுன். இனிய சொற்களாகக் கூறுகிறுன். கவலையால் நாள்தோறும் ஒளி குறைந்து தோன்றுகிறுன். அவனுடைய துயரம் பொருந்திய பார்வையை நினைத்துப்பார், தோழி! அவன் இவ்வாறு நெடுநேரம் நமக்குப் பின் நிற்கும் செயல் வேறு எந்தத் துணிவையோ கருதியதாக உள்ளது!”

சேரி சேர மெல்ல வந்துவந்து
அரிது வாய்விட்டு இனிய கூறி
வைகல் தோறும் நிறம்பெயர்ந்து உறையும்அவன்
பைதல் நோக்கம் நினையாய் தோழி!...
பிறிதுஒன்று குறித்தது அவன் நெடும்புற நிலையே.*

---

*குறுந். 293. பரணர்.

சேரி — ஊரின் ஒரு பகுதி — தெரு. வைகல் — நாள். நிறம் — மேனிஒளி. பெயர்ந்து — மாறி. பைதல் — வருத்தம். பிறிது — வேறு. நிலை — நிற்றல்.

8. அரியதை விரும்பினுய்

தலைவி முந்திய நாள் வந்திருந்த இடத்தில் வரவில்லை. அவளைக் காண விழைந்து அங்கு வந்தான் தலைவன்; காணுமல் ஏங்கினுன். வருந்தும் தன் நெஞ்சினை நோக்கிப் பின் வருமாறு கூறினுன்.

"பொருள் இல்லாத வறியவன் இன்பத்தைப் பெற விரும்பியதுபோல், கிடைத்தற்கு அரியதை நீ விரும்பினுய் நெஞ்சே! நீ விரும்பிய காதலி நல்லவளாக இருத்தலை மட்டும் அறிந்தாய். அதுபோல், அவள் கிடைத்தற்கு அரியவளாகவும் இருத்தலை நீ அறியவில்லையே."

இல்லோன் இன்பம் காமுற் ருஅங்கு
அரிதுவேட் டனையால் நெஞ்சே! காதலி
நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு
அரியள் ஆகுதல் அறியா தோயே.*

குறுந். 120. பரணர்.

இல்லோன் — இல்லாதவன் — வறுமையுடையவன். காமுற்ரு அங்கு-விரும்பினுற்போல். அரிது-கிடைத்தற்கு அருமையானது. வேட்டனை - விரும்பினை. ஆல் - அசை. அறிந்தாங்கு - அறிந்தாற்போல்.

9. யாம் உறங்கவில்லையே

இரவில் வருவதாகச் சொல்லிச் சென்றான் தலைவன். அவ்வாறே வந்தான். ஏற்பாடு செய்தவாறு காண முடிய வில்லை. இயற்கையில் நிகழ்ந்த வேறு சில ஒலிகளால் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. அவன் வந்ததைத் தலைவியும் தோழியும் உணர்ந்துகொள்ள முடியவில்லை. மறுநாள் தலைவன் வந்து, தான் வந்து காத்திருந்து ஏமாற்றம் அடைந்ததைக் கூறி வருந்தினான். தாம் இரவெல்லாம் அவனுக்காக விழித்திருந்ததைத் தோழி கூறித் தம்மேல் பழி இல்லை என்றாள்.

"இந்தப் பெரிய ஊரெல்லாம் உறங்கினாலும் யாங்கள் உறங்கவில்லையே. எம் வீட்டிற்குப் பக்கத்தில் ஏழில் குன்றத்தின்மேல் உள்ள நொச்சியின் அழகு மிகுந்த மெல்லிய கிளைகள் உதிர்க்கும் பூக்கள் விழும் ஓசையையும் நன்றாகக் கேட்டுக்கொண்டு உறங்காமலிருந்தோமே."

கொன்ஊர் துஞ்சினும் யாம்துஞ் சலமே;
எம்இல் அயலது ஏழில் உம்பர்
மயில்அடி இலைய மாக்குரல் நொச்சி
அணிமிகு மென்கொம்பு ஊழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே.*

குறுந். 138. கொல்லன் அழிசி.

கொன் - பெருமை. ஏழில் - ஒரு மலை. மயில்அடி இலைய - மயில் அடி போன்ற இலையை உடைய. மாக்குரல் - கரிய பூங் கொத்துக்களை உடைய. ஊழ்த்த - உதிர்த்த. மணி மருள் பூ - நீல மணி போன்ற பூக்கள். பாடு - உதிரும் ஓசை.

10. நெஞ்சம் செல்கின்றது

தலைவன் இரவில் வந்து செல்லத் தலைப்பட்டான். இரவில் அவன் பொல்லாத மலைவழிகளில் வருவதை நினைந்து தலைவி கவலைப்பட்டாள். அவன் அவ்வாறு வராமல் தடுக்க வேண்டும் என்று எண்ணித் தோழியிடம் அதைத் தெரிவித்தாள். தன் மனம் எதற்கும் அஞ்சி நடுங்கும் அச்சம் நிறைந்த மனம் என்றும், அப்படிப்பட்ட மனம் இப்போது இரவெல்லாம் மலைவழியில் சென்று சென்று அவர்க்காக வருந்துகின்றது என்றும் கூறினாள். இவ்வாறு தலைவன் வரும் வழியை நினைந்து தன் மனம் படும் துயரைத் தோழிக்குப் புலப்படுத்தினாள்.

"மலையில் ஆந்தை ஒலித்தாலும், வீட்டு முற்றத்தில் உள்ள பலாமரத்தின் பெரிய கிளையில் ஆண்குரங்கு பாய்ந்து துள்ளினாலும், என் நெஞ்சம் அஞ்சுகின்ற காலம் ஒன்று இருந்தது. அந்தோ! இப்போது, இருள் மிகுந்த இராக் காலத்தில் வரும் அவருக்காக, மலைச்சாரலில் நீண்ட வழிகளில் என்நெஞ்சம் தவறாமல் செல்கின்றதே."

குன்றக் கூகை குழறினும் முன்றில்
பலவின் இருஞ்சினைக் கலைபாய்ந்து உகளினும்
அஞ்சுமன் அளித்துஎன் நெஞ்சம் ; இனியே
ஆர்இருள் கங்குல் அவர்வயின்
சாரல் நீளிடைச் செலவுஆ னாதே.*

---

*குறுந். 153. கபிலர்.

முன்றில் - வீட்டு முற்றம். இருஞ் சினை - பெரிய கிளை. கலை - ஆண் குரங்கு. உகளினும் - துள்ளினாலும். மன் - அந்த நிலை கழிந்தது என்னும் பொருள்தரும் இடைச்சொல். அளித்து - இரக்கப் பொருள். வயின் - இடத்தில். நீளிடை - நீண்ட வழி. செலவு - செல்லுதல். ஆனாது - ஓயாது.

11. அவள் கள்வி

இரவில் தலைவியைக் கண்டு பழகி மகிழ்ந்த தலைவன், ஒருநாள் பகலில் அவளுடைய வீட்டிற்கு விருந்தினனாய்ச் சென்றான். தலைவி அவன் யார் என்று அறியாதவள் போல் நடித்தாள்; தன் குடும்பத்தார் புதியவரிடத்தில் அயலாரிடத்தில் எப்படிப் பழகுவார்களோ அப்படியே அவளும் தலைவனிடம் பழகினாள். குடும்பத்தார்க்கு அஞ்சித் தன் காதலை இவ்வாறு மறைத்து நடக்கும் அவளுடைய பண்பைத் தலைவன் போற்றினான். தன் நெஞ்சினுள் பின் வருமாறு சொல்லிக்கொண்டான்.

" நம் காதலி இருவகையாக நடத்தலை அறிந்த கள்வி. நள்ளிரவில் நம்முடன் ஒன்றுபட்டவளாய்ப் பழகினாள். பொழுது விடிந்ததும், கூந்தலில் சூடியிருந்த பலவகை மலரையும் உதிர்த்துவிட்டு, மயிர்ச்சாந்து பூசிக் கோதி, எண்ணெய் தடவி, வேறுபட்ட முகம் உடையவளாய், தன் குடும்பத்தாருடன் ஒன்றுபட்டவளாக இருக்கின்றாள். "

இரண்டறி கள்விநம் காத லோளே ;...
நள்ளென் கங்குல் நம்ஓ ரன்னள் ;
கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்துச்
சாந்துஉளர் நறுங்கதுப்பு எண்ணெய் நீவி
அமரா முகத்தள் ஆகித்
*தமர்ஓ ரன்னள் வைகறை யானே.**

---

*குறுந். 312. கபிலர்.

கள்வி - கள்ளத் தன்மை உடையவள். காதலோள் - காதலி. ஓரன்னள் - ஒரு தன்மையானவள். விரவு - பலவகை கலந்த. சாந்து - மயிர்க்கு இடும் நறுமணப் பொருள். கதுப்பு - கூந்தல். நீவி - தடவி. அமரா - பொருந்தாத் - வேறுபட்ட - பழகாதது போன்ற. வைகறையான் — வைகறையில்.

12. இரக்கம் இல்லையோ?

தலைவன் இரவில் வந்து காண்பதாகக் கூறினான். அவன் வருவதை எதிர்பார்த்துக் காத்திருந்தனர் தலைவியும் தோழியும். அன்று இரவு இடியும் மழையும் ஆரவாரம் செய்தன. தலைவனும் அப்போது மெல்ல வந்து வேலிப் புறமாக நின்றான். அவன் இரவில் வருவதில் எவ்வளவு இடையூறு என்று அஞ்சிய தலைவி, அவனைக் காணாதவள் போல் நடித்து, மழையை நோக்கிப் பின்வருமாறு கூறினாள்.

"பெரிய மலைப் பக்கத்தில் உள்ள பாம்புகள் அழியும்படி வேகம் மிகுந்த இடியின் குரலோடு கலந்து காற்றோடு வந்த நீர் நிறைந்த பெரிய மழையே! உனக்கு இரக்கம் இல்லையோ? பெரிய புகழை உடைய இமய மலையையும் அசைக்கின்ற தன்மையுடன் வருகின்றாய். உன்னால் துன்புறும் பெண்கள் துணை இல்லாதவர், இரங்கத் தக்கவர்; இந்தக் கொடுமை ஏன்?"

நெடுவரை மருங்கின் பாம்புபட இடிக்கும்
கடுவிசை உருமின் கழறுகுரல் அளைஇக்
காலொடு வந்த கமஞ்சூல் மாமழை!
ஆரளி இலையோ நீயே; பேரிசை
இமயமும் துளக்கும் பண்பினை;
துணையிலர் அளியர் பெண்டிர்இஃது எவனே?*

---

*குறுந். 158. அவ்வையார்.

வரை - மலை. விசை - வேகம். உருமின் - இடியின். கழறு - கடுமையாக முழங்கும். அளைஇ - கலந்து. கால் - காற்று. கமம் - நிறைந்த. சூல் - உட்கொண்ட நீர். ஆர்அளி - நிறைந்த அருள். இசை - புகழ். துளக்கும் - அசைக்கும். அளியர் - இரங்கத் தக்கவர். எவன் - என்ன காரணம்.

13. எவ்வாறு வந்தாயோ?

தலைவன் நள்ளிரவில் வந்து நின்றான். அன்று வருவதற்கு இடையூறுகள் பல நிகழ்ந்தன. ஆயினும் அவன் அவற்றைப் பொருட்படுத்தாமல் தலைவியை நாடி வந்தான். அவனைக் கண்டதும் தோழி திகைத்தாள்; அவன் வருவதற்கு இசைவு தந்த தன்னையே நொந்துகொண்டாள்.

“மேகம் இடத்தை எல்லாம் மறைப்பதால் நீ வானத்தைக் காணமுடியாது. மழைநீர் பரந்து ஓடுவதால் நிலத்தையும் காண முடியாது. கதிரவன் ஒளி போய் நெடுநேரம் ஆனபடியால் இருள் மிகுந்துவிட்டது. பலரும் உறங்கும் நள்ளிரவில் எவ்வாறு வந்தாயோ? மலைநாட்டுத் தலைவனே! ஒளியற்ற இந்த இராக்காலத்தில் வேங்கை மலர்கள் மணம் கமழ்கின்ற எம் ஊரை நீ எவ்வாறு அறிந்தாயோ? (ஒருகால் அந்த மணம் வரும் திசையை அறிந்துதான் வந்து சேர்ந்தாயோ?) நான் இதற்காக மிக வருந்துகிறேன்.”

பெயல்கண் மறைத்தலின் விசும்புகா ணலையே;
நீர்பரந்து ஒழுகலின் நிலம்கா ணலையே;
எல்லை சேறலின் இருள்பெரிது பட்டன்று;
பல்லோர் துஞ்சும் பாஒள் கங்குல்
யாங்குவந் தனையோ? ஓங்கல் வெற்ப!
வேங்கை கமழும்எம் சிறுகுடி
யாங்குஅறிந் தனையோ? நோகோ யானே.*

---

*குறுந். 355.

பெயல் - மழை. கண் - இடம். எல்லை - கதிரவன் (ஒளி). சேறலின் - செல்லுதலின் - சென்றுவிட்டதனால். பெரிது - மிக. பட்டன்று - பட்டது - ஏற்பட்டது. பாஒள் - நடுநாள் - நள்ளிரவு. ஓங்கல் - உயர்ந்த உச்சி. சிறுகுடி - மலைநாட்டு ஊர். நோகோ யான் - யான் நோகு - நோகின்றேன் - வருந்துகிறேன்.

14. தோள் மெலிவது ஏன் ?

தலைவன் சில நாள் வராமல் நிற்க நேர்ந்தது. அந்நாட்களில் தலைவி பிரிவாற்றாமல் வருந்தி மெலிந்தாள். அவளுடைய மெலிவைக் கண்ட தோழியும் வருந்தினாள். அப்போது தோழியிடம் தலைவி தன் நிலையை எடுத்துரைத்தாள்.

"இது என்ன காரணம், தோழி! கடலின் அலைகள் அலைத்து மகிழும் கடற்கரைச் சோலையில் பூங்கொத்துக்கள் மலர்ந்துள்ள புன்னைமரத்தின் மேட்டில் உள்ள நிழலில் தலைவனோடு கூடி மகிழும் வாய்ப்புக் கிடைத்த நாட்களில், அவனைக் கண்டவை எம் கண்களே; அவன் சொன்ன சொற்களைக் கேட்டவை எம் செவிகளே. அவ்வாறு இருக்க, என் மெல்லிய தோள்கள் அவன் கூடியபோது சிறந்த அழகைப் பெற்று, பிரிந்தபோது நெகிழ்ந்து மெலிகின்றனவே! காரணம் என்னவோ?"

இதுமற்று எவனோ தோழி! முதுநீர்ப்
புணரி திளைக்கும் புள்இமிழ் கானல்
இணர்அவிழ் புன்னை எக்கர் நீழல்
புணர்குறி வாய்த்த ஞான்றைக் கொண்கன்
கண்டன மன்எம் கண்ணே; அவன்சொல்
கேட்டன மன்எம் செவியே; மற்று அவன்
மணப்பின் மாண்நலம் எய்தித்
தணப்பின் ஞெகிழ்பஎம் தடமென் தோளே.*

---

* குறுந். 299. வெண்மணிப் பூதி.

எவனோ - என்னவோ. முதுநீர் - கடல். புணரி - அலை. புள் இமிழ் - பறவைகள் ஒலிக்கின்ற. கானல் - கடற்கரைச் சோலை. இணர் - மலர்க்கொத்து. அவிழ் - மலரும். எக்கர் - மணல்மேடு. ஞான்றை - பொழுது. கொண்கன் - கணவனை. நலம் - அழகு. தணப்பின் - பிரிந்தால். ஞெகிழ்ப - நெகிழ்வன. தட - பெரிய.

15. வெள்ளத்தின் கொடுமை

தலைவன் சிலநாள் பிரிந்திருந்து வந்தான். அவனுடைய பிரிவை நினைந்து வருந்தினாள் தலைவி. அவன் மீண்டும் வந்தபோது, தான் பட்ட துன்பத்தையும், அவனுடைய அன்பற்ற கொடுமையையும் உணர்த்த விரும்பினாள் தலைவி. அவன் வந்து வேலிப்புறமாக நின்றபோது அவனைக் காணாதவள்போல் நடித்து, அருகே சென்ற வெள்ளத்தை நோக்கிக் கூறினாள். அந்த வெள்ளம் வாழைமரத்தின் மென்மையை அறியாமல் அதை அடித்துவந்து விட்டதாகக் கூறினாள்; அதன் வாயிலாகத் தலைவன் தன் மென்மையை அறியாமல் கொடுமைப் படுத்துவதை உணர்த்தினாள்.

"அருள் செய்தால்தான் வாழக் கூடிய அவ்வளவு மெலிந்தவர்களிடத்தில் அன்பு இல்லாமல் நடத்தல் நல்லது என்று உணர்ந்த தலைவனைவிட உன் தன்மை மிகக் கொடியது ஆகும்; தீய வெள்ளமே! நம் வீட்டின் இளமகள் இந்த வாழை போன்ற மென்மையான சாயலை உடையவள் இரங்கத்தக்கவள் என்று கருதாமல், மலை பொலிவழியும்படியாக அங்கிருந்த வாழையை அடித்து வந்துவிட்டாயே."

நல்கின் வாழும் நல்கூர்ந் தோர்வயின்
நயனிலர் ஆகுதல் நன்றுஎன உணர்ந்த
குன்ற நாடன் தன்னினும் நன்றும்
நின்நிலை கொடிதால்; தீய கலுழி!
நம்மனை மடமகள் இன்ன மென்மைச்
சாயல் அளியள் என்னாய்
வாழைதந் தனையால் சிலம்புபுல் லெனவே.*

---

*குறுந். 327. அம்மூவனார்.

நல்கின் - அருள்புரிந்தால். நல்கூர்ந்தோர் - திக்கற்று மெலிந்தவர். வயின் - இடத்தில். நயன் - அன்பு. நன்றும் - மிகவும். கலுழி - வெள்ளம். மட - மடப்பம் உடைய. சிலம்பு - மலை.

16. நட்பின் பெருமை

தலைமகளின் உள்ளத்து அன்பை வெளிப்படுத்துவதற்காகத் தோழி வேண்டுமென்றே ஒருநாள் அவளிடம் தலைவனைப் பழித்துரைத்தாள். இந்தப் பழியுரையைக் கேட்க மனம் இல்லாமல் தலைவி உடனே, அவனுடைய உறவு எத்தகையது என்பதைப் புகழ்ந்துரைத்துப் போற்றினாள். வேலிப்புறமாக வந்து நின்று மறைந்திருந்த தலைவன் இதைக் கேட்டு மகிழ்ந்தான்.

"நிலத்தைவிடப் பெருமை உடையது; வானத்தைவிட உயர்வு உடையது; கடல் நீரைவிட அளக்க முடியாத ஆழம் உடையது; மலைச்சாரலில் கரிய கொம்புகளை உடைய குறிஞ்சிப் பூக்களைக் கொண்டு வண்டுகள் பெருந்தேன் இழைக்கின்ற மலைநாட்டுத் தலைவனோடு ஏற்பட்டுள்ள நட்பு இத்தகையது ஆகும்."

நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.*

---

*குறுந். 3. தேவகுலத்தார்.

உயர்ந்தன்று - உயர்ந்தது. ஆர்அளவின்று - அளப்பதற்கு அரிய அளவு உடையது. இழைக்கும் - தேன்கூடு கட்டும்.

17. வேலன் காரணமா?

தலைவன் கடமைகளின் காரணமாகச் சில நாள் பிரிந்திருந்தபோது தலைவி வருந்தி மெலிந்தாள். தாய் அவளுடைய மெலிவுக்காகக் கவலைப்பட்டாள். அவள் முருக பூசாரியாகிய வேலனை வருவித்துக் காரணம் என்ன என்று கேட்டாள். அந்த வேலன் வந்து தெய்வக் குற்றமே காரணம் என்று சொல்லிவிட்டால், பிறகு தாய் வெறியாடலுக்கு ஏற்பாடு செய்வாளே என்று தலைவி மிக வருந்தினாள். அவளுடைய துயரத்தை மாற்றுவதற்காகத் தோழி அதையே வேறு வகையாகத் திரித்துக் கூறினாள். தலைவன் வந்து வெறியாடலைப் பார்த்து நகைக்க வேண்டும் என்றாள். இதனால் தலைவன் வருவான் என்பதைக் குறிப்பிட்டு, வந்தால் மெலிவு தீர்ந்துவிடும் என்று உணர்த்தினாள்.

"உன் மெல்லிய தோள்கள் நெகிழுமாறு செய்த பிரிவுத் துன்பம் முருகனால் வந்ததென்று வெறியாடும் பூசாரி சொல்வான். அன்னையும் அதுவே காரணம் என்று உணர்வாளானால், அப்போது, தலைவன் விரைவில் இங்கே வருவானாக, தோழி! நம் வீட்டாரின் பெரிய நகைப்புக்கு இடமான இந்தச் செயலைச் சிறிது காண்பதற்காகவாவது வருவானாக."

மென்றோள் நெகிழ்த்த செல்லல் வேலன்
வென்றி நெடுவேள் என்னும்; அன்னையும்
அதுஎன உணரு மாயின் ஆயிடை......நாடன்
வல்லே வருக தோழிநம்
இல்லோர் பெருநகை காணிய சிறிதே.*

---

*குறுந். 111. தீன்மதி நாகனார்.

செல்லல் - துன்பம். வென்றி - வெற்றியை உடைய. நெடுவேள் - முருகன். என்னும் - என்பான். வல்லே - விரைவில். நகை - சிரிக்கத் தகுந்த செயல் - உண்மைக் காரணம் அறியாமல் செய்யும் வெறியாடல். காணிய - காண்பதற்காக.

18. இன்று வராதிருப்பானாக

தலைவியின் மெலிவுக்குக் காரணம் தெய்வக் குற்றமே என்று உணர்ந்து அன்னை வெறியாடலுக்கு ஏற்பாடு செய்தாள். வருவான் என்று தோழி எதிர்பார்த்தபடி தலைவனோ வரவில்லை. அப்போது தலைவியின் துயரம் மிகுந்தது. அதை மாற்றுவதற்காகத் தோழி வேறுவகையாகப் பேசத் தலைப்பட்டாள். தலைவன் வந்தால் மெலிவு தீர்ந்துவிடும் என்றும், அதை உணராத அன்னை வேலன்பூசையால் தீர்ந்ததாகத் தவறாகக் கருதி உண்மை அறியமாட்டாள் என்றும், அவள் உண்மை அறிவதற்காகவாவது தலைவன் அன்று இரவு வராமல் இருக்க வேண்டும் என்றும் தோழி கூறினாள். அன்னை உண்மை உணர்ந்தால், திருமணத்திற்கு ஏற்பாடு செய்வாள் என்று தலைவியின் உள்ளத்தில் நம்பிக்கை ஏற்படுமாறு முயன்றாள்.

"வெறியாடுவதே வழி என்று உணர்ந்த வேலன் உன் காதல்நோய்க்கு மருந்து அறியாதவன். இதை அன்னை உணர வேண்டும். அவள் அவ்வாறு உணர்ந்து உண்மை அறியுமாறு, மிகப் பெருந்துன்பம் உற்று இன்று ஒருநாள் நாம் வருந்திய போதிலும், தலைவன் வராமல் இருப்பானாக என்று யான் விரும்புகின்றேன். மலைநாடனாகிய தலைவன் இரவு வராமலிருப்பானாக."

வெறியென உணர்ந்த வேலன் நோய்மருந்து
அறியான் ஆகுதல் அன்னை காணிய
அரும்படர் எவ்வம் இன்றுநாம் உழப்பினும்
வாரற்க தில்ல தோழி...
இலங்குமலை நாடன் இரவி னானே.*

---

*குறுந். 360, மதுரை ஈழத்துப் பூதனதேவன்.

வெறி - முருகனுக்குப் பூசைசெய்து தெய்வம் வந்து ஆடுதல். காணிய - காணும்பொருட்டு. படர் - நினைப்பால் வரும் துன்பம். எவ்வம் - துன்பம். இரவினான் - இரவில்.

19. தலைவன் மார்புக்கா ?

தலைவியின் மெலிவைத் தீர்ப்பதற்காக வெறியாடலுக்கு ஏற்பாடு செய்து, பூசை செய்யும் வேலனும் வந்து விட்டான். அப்போதேனும், அன்னைக்கு உண்மையைத் தெரிவிக்க வேண்டும் என்று கருதினாள் தோழி. வேலனைப் பார்த்தே ஒன்று கேட்பதுபோல் கேட்டு, காதல் நோய் இதனால் தீராது என்பதைப் புலப்படுத்தினாள். பூசைக்காக வைத்திட்ட பொருள்களைப் பார்த்து, காதலனுடைய மார்பு இவற்றை ஏற்றுக்கொள்வதும் உண்டோ என்றாள்.

"முருகக் கடவுளை வழிபட்டுக் கொண்டுவந்த அனுபவம் முதிர்ந்த வேலனே! சினம் கொள்ள வேண்டா. ஒன்று கேட்க விரும்புகின்றேன். பல வேறு நிறம் உடைய சோற்றுடன் சிறிய ஆட்டுக்குட்டியையும் கொன்று, இவளுடைய நெற்றியைத் தடவி, தெய்வத்தை வணங்கி நீ பலியாகக் கொடுப்பாயானால், இவள் துன்பத்திற்குக் காரணமாகப் பிரிந்துள்ள மலைநாட்டுத் தலைவனுடைய மாலை அணிந்த மார்பு இந்தப் பலியையும் உண்ணுமோ?"

முருகுஅயர்ந்து வந்த முதுவாய் வேல!
சினவல் ஓம்புமதி ; வினவுவது உடையேன் ;
பல்வேறு உருவின் சில்அவிழ் மடையொடு
சிறுமறி கொன்றுஇவள் நறுநுதல் நீவி
வணங்கினை கொடுத்தி யாயின் அணங்கிய
விண்தோய் மாமலைச் சிலம்பன்
ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே.*

---

*குறுந். 362. வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தன்.

அயர்ந்து - (வழிபாடு) நிகழ்த்தி. முதுவாய் - முதுமை வாய்ந்த. சினவல் ஓம்பு - சினம் கொள்ளுதலை விடுக. சில் அவிழ் - சில சோற்றுப் பருக்கை. மடை - பலியாகக் கொடுக்கும் பொருள். மறி - ஆட்டுக்குட்டி. அகலம் - மார்பு.

20. இன்னும் பாடுக

தலைவியின் மெலிவுக்குக் காரணம் என்னவோ என்று வருந்திய தாய், குறிசொல்லும் அகவல்மகள் தெருவழியாகப் போனபோது, அவளை அழைத்து உட்காரவைத்து, முறத்தில் நெல்லை வைத்துக் குறி சொல்லும்படி கேட்டாள். அவள் தெய்வத்தைப் பாடி, அந்தத் தெய்வம் வாழும் மலையைப் பாடி, பிறகு பிடிநெல்லை எண்ணிப் பார்த்து நோயின் காரணத்தைச் சொல்வது வழக்கம். அவள் மலையைப் பாடத் தொடங்கியபோது, தோழி அங்கே வந்து குறுக்கிட்டு, 'பாடு, பாடு, இன்னும் பாடு' என்றாள். தலைவனுடைய அந்த மலையைப் பாடினால், அந்த நினைவினாலாவது இவளுடைய காதல்நோய் தீரும் என்ற குறிப்பு வீட்டார்க்கு விளங்கும்படியாகச் சொன்னாள். அதைக் கேட்டதும், தலைவியின் காதலைப் பெற்றோர் உணர்வார்கள் என நம்பி இவ்வாறு முயன்றாள்.

"அகவல்மகளே! அகவல்மகளே! சங்குமணிக் கோவை போல் நரைத்த கூந்தலை உடைய அகவல்மகளே! பாடு அந்தப் பாட்டை. இன்னும் பாடு; அவருடைய நல்ல நெடிய மலையைப் பாடிய பாட்டை இன்னும் பாடு."

அகவல் மகளே! அகவல் மகளே!
மனவுக்கோப்பு அன்ன நன்னெடுங் கூந்தல்
அகவல் மகளே! பாடுக பாட்டே;
இன்னும் பாடுக பாட்டே அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே.*

---

*குறுந். 23. ஔவையார்.

அகவல் - குறிசொல்லிப் பாடுதல். மனவு - சங்குமணி. கோப்பு - கோத்தது.

21. இன்று எங்கே ?

அயலார் பெண் கேட்பதற்காக வீட்டிற்குள் வந்து விட்டார்கள். ஒருகால் தலைவியை அவர்களுக்குத் தருவதாகப் பெற்ருேர் இசைந்துவிட்டால், காதல் வாழ்வு என்ன ஆவது என்று தோழி கலங்கினள். அவளுக்கு ஒரு காதலன் அமைந்திருக்கும் உண்மையை எப்படியாவது பெற்ருேர்க்கு அறிவித்துவிடுவதே கடமை என்று துணிந்தாள். தலைவியிடம் பேசுவதுபோல் நடித்துக் காதல்வாழ்வைப் பற்றிப் பெற்ருேர்க்கு அறிவித்துவிட்டாள்.

" இன்று எங்கே இருக்கின்ருனே, தோழி! உனக்கு அறிவு நிரம்பும் பருவத்தில் நீ எம் வீட்டுக்கு வருக என்று சொல்லி அன்று கூந்தலைத் தடவிச் சென்ற காதலன் இன்று எங்கே இருக்கின்ருனோ ?"

இன்றுயாண் டையனே தோழி !......
அறிவுகாழ்க் கொள்ளும் அளவைச் செறிதொடி
எம்இல் வருகுவை நீஎனப்
பொம்மல் ஓதி நீவி யோனே.*

---

*குறுந். 379.

யாண்டையனே - எங்கே உள்ளானே, காழ்க்கொள்ளல் - முற்றுதல். அளவை - அளவில் - காலத்தில். செறி தொடி - நெருங்கிய வளை அணிந்தவளே. பொம்மல் - பெருகுதல், நெருங்குதல். ஓதி - கூந்தல்.

22. களைவோர் இல்லை

தலைவியைப் பற்றி ஐயுற்ற பெற்றோர் அவளை வெளியே செல்லாதவாறு தடுத்தனர். வீட்டினுள் கிடந்து வருந்திய தலைவி, தலைவன் திருமண முயற்சி செய்வான் என்று எதிர் பார்த்து எதிர்பார்த்து ஏங்கினாள். தலைவன் ஒரு முயற்சியும் செய்யவில்லையே என்று நாளுக்குநாள் வருந்தித் துயருற்றாள். தன் துயரத்தைத் தோழியிடம் எடுத்துரைத்தாள்.

"காதலரைக் கண்ட கண்களால் ஏற்பட்ட காதல் என்னும் தீ என் எலும்பையும் தாக்கி வருத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு இருந்தும், நாமே அவரை விரும்பிச் சென்று கூடுவதற்கு வழி இல்லாமல், ஒருவரை ஒருவர் காண முடியாதவர்களாக இருக்கின்றோம். தாமே வந்து நம் துன்பத்தை நீக்குதலை அவரும் செய்ய வில்லை. பிறர் செலுத்திவிடாமல், இடையே எவரும் போய்ப் பிரித்தும் நீக்காமல், குப்பையில் உள்ள கோழிகள் தாமே செய்யும் போர் போல் உள்ளது இந்த நிலைமை. தானே அழியும் வகையில் அழிந்தால் அல்லாமல், யான் உற்ற இந்த நோயைக் களைபவர் எவரும் இல்லை."

கண்தர வந்த காம ஒள்ளெரி
என்புஉற நலியினும் அவரொடு பேணிச்
சென்றுநாம் முயங்கற்கு அருங்காட் சியமே ;
வந்துஅஞர் களைதலை அவர்ஆற் றலரே ;
உய்த்தனர் விடாஅர் பிரித்துஇடை களையார்
குப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிவாங்கு விளியின் அல்லது
களைவோர் இலையான் உற்ற நோயே.*

---

*குறுந். 305. குப்பைக் கோழியார்.

அருங்காட்சியம் - காட்சி அரியம் - காணமுடியாத நிலையில் உள்ளேம். அஞர்-துன்பம். ஆற்றலர்-செய்யார். உய்த்தனர்-செலுத்தினராகி. விளிவாங்கு - முடியும் வகையில், அழியும் வகையில்.

23. உயிர் மிகச் சிறிது

தலைவன் வந்து வந்து தலைவியைக் கண்டு மகிழ்ந்து திரும்பினான். திருமணம் செய்துகொண்டு அமைதியாக வாழுமாறு தோழி அறிவுரை கூறத் துணிந்தாள். தலைவனும் தலைவியும் ஒன்றுபட்டு மகிழும் நேரத்தைவிடப் பிரிந்து வருந்தும் நேரமே மிகுதி ஆகையால், இது வாழ்வுக்கே தீங்கு என்பதை அறிவுறுத்த முனைந்தாள். மலைநாட்டில் வாழ்ந்து பழகிய அவளுக்குப் பலாமரங்களில் இரு வகை நினைவுக்கு வந்தன. திருமணம் செய்துகொள்ளாமல் அஞ்சி அஞ்சி வாழும் காதல் வாழ்க்கை, கிளைகளில் பலாப் பழங்கள் தொங்கும் மரம்போல் இடையூறு மிக்கது; திருமணம் செய்துகொண்டு அமைதியாக வாழும் இல்வாழ்க்கை, வேர்களில் பல பழங்கள் பழுத்துள்ள வேர்ப்பலாப் போல் இடையூறு இல்லாதது என்று தெளிவித்தாள்.

" சிறு மூங்கிலே வேலியாக உடைய, வேரிலே பழங்களை உடைய வேர்ப்பலா மிகுந்த மலைநாட்டுத் தலைவ! திருமணம் செய்துகொள்ளும் நல்ல மனம் பெறுக. இவள் நிலையை அறிந்தவர் யார்? மலைச்சாரலில் சிறிய கிளையில் பெரிய பலாப்பழம் தொங்குவது போல், இவளுடைய உயிரோ மிகச் சிறிது; காதலோ பெரிது."

வேரல் வேலி வேர்க்கோள் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி;
யார்அஃது அறிந்திசி னோரே; சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்குஇவள்
உயிர்தவச் சிறிது; காமமோ பெரிதே.*

---

*குறுந். 18. கபிலர்

வேரல் - மூங்கிலில் ஒருவகை. கோள் - காய் கொள்ளுதல். செவ்வி - நல்ல நிலை. மதி - முன்னிலை அசை. அறிந்திசினோர் - அறிந்தோர். தூங்கியாங்கு - தொங்கினாற்போல். தவ - மிக.

24. யான் அஞ்சுகிறேன்

தலைவன் இராக்காலத்தில் முதலைகள் வாழும் வழியில் வருதல் இடர் மிகுந்தது என்று வருந்தித் தோழி அவனைத் தடுக்க எண்ணினாள். அவன் வராமல் நின்றாலோ, பிரிவாற்றாமல் தலைவி வருந்தும் வருத்தத்தையும் தோழியால் காண முடியவில்லை. இருவகையிலும் வருந்திக் கலங்கிய பின், தன் கருத்தைத் தலைவனிடம் எடுத்துரைத்து, திருமணம் செய்துகொள்வதே வழி என உணருமாறு செய்தாள்.

"வளைந்த கால்களை உடைய கொடிய ஆண்முதலை வழியில் மக்கள் செல்ல முடியாமல் இடையூறு செய்யும் கடற்கரையில் கரிய கழிகளை நீந்திக் கடந்து நீ உன் அன்பு மிகுதியால் இங்கே வருகின்றாய். இவளோ, தன் அறியாமையால் வருந்துகின்றாள். யானோ, இரட்டைக் குழந்தைகள் நஞ்சு உண்டால், இரண்டையும் பார்த்து வருந்தும் தாய் போல், என் மனத்திற்குள்ளே இருவர்பொருட்டாகவும் அஞ்சுகின்றேன்."

கொடுங்கால் முதலைக் கோள்வல் ஏற்றை
வழிவழக்கு அறுக்கும் கானலம் பெருந்துறை
இனமீன் இருங்கழி நீந்தி நீநின்
நயனுடை மையின் வருதி ; இவள்தன்
மடனுடை மையின் உயங்கும் ; யான்அது
கவைமக நஞ்சுஉண் டாஅங்கு
அஞ்சுவல் பெருமஎன் நெஞ்சத் தானே.*

---

*குறுந். 324. கவைமகன்.

கொடு - வளைவான. கோள் - கொல்லுதல். வல் - வல்ல. ஏற்றை - ஆண். வழக்கு - மக்களின் போக்குவரவு. கானல் - கடற்கரைச்சோலை. இரு - கரிய. நயன் - அன்பு. உடைமையின் - உடைமையால், மடன் - அறியாமை. உயங்கும் - வருந்துகிறாள். கவை - இரட்டை. உண்டாஅங்கு : உண்டாற்போல்.

பாட்டில் வரும் உவமை நயம் புலவர்க்குப் பெயர் தந்தது.

25. உன் பொறுப்பே

தலைவன் தன் சுற்றத்தார் வாழும் ஊர்க்குச் சென்று, அங்கே பொருள்தேடிக் கொண்டுவந்து திருமணம் செய்து கொள்வதாக அறிவித்தான். இரண்டு திங்கள் பொறுத்திருக்குமாறும் அதற்குள் விரைந்து பொருள்தேடி முடித்துத் திருமண ஏற்பாடு செய்வதாகவும் கூறினான். அதைக் கேட்ட தோழி, தலைவன் தலைவியை மறவாமல் போற்றுமாறும், விரைவில் திரும்பிவருமாறும் சில சொல் கூறி உணர்த்தினாள்.

"தாய் சினம்கொண்டு அடிக்கும் பொழுதும் வாய் திறந்து அம்மா அம்மா என்று அவளையே விளித்து அழும் குழந்தைபோல, நீ கொடுமை செய்தாலும் சரி, இனிய வகையில் காத்தருளினாலும் சரி, என் தோழி உன் பொறுப்பில் உள்ளவள். அவளுடைய துன்பத்தைத் தீர்ப்பவர் உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை."

தாய்உடன்று அலைக்கும் காலையும் வாய்விட்டு
அன்னா என்னும் குழவி போல
இன்னா செயினும் இனிதுதலை யளிப்பினும்
நின்வரைப் பினள்என் தோழி ;
தன்உறு விழுமம் களைஞரோ இலளே.*

---

*குறுந், 397. அம்மூவனார்.

உடன்று - மாறுபட்டு. அலைக்கும் - வருத்தும். காலையும் - காலத்திலும். அன்னா-அன்னையே. தலையளிப்பினும்-அருள்புரிந்தாலும். வரைப்பினள் - எல்லையில் (பொறுப்பில்) உள்ளவள். உறு - மிக்க. விழுமம் - துன்பம். களைஞர் - நீக்குவோர்.

26. ஞாயிறும் நெருஞ்சியும்

தலைவன் திருமண முயற்சிக்காகப் பொருள் தேடி வரப் பிரிந்து செல்வதாகத் தோழியிடம் அறிவித்தான். தோழி மெல்ல வந்து தலைவியிடம் கூறி, "அவர் பிரிந்தால் நீ எவ்வாறு ஆற்றியிருக்கப் போகின்றாய்?" என்றாள். தலைவி நன்கு எண்ணித் தன் கடமை இன்னது என்று தெளிந்தவள்; ஆதலின், தலைவன் முயற்சியைத் தான் தடை செய்யவில்லை என்பதையும், அவன்வழியே தன்வழி என்பதையும் கற்பின் திண்மை விளங்கும் வகையில் எடுத்துரைத்தாள். கதிரவன் உள்ள திசைவழியே சாய்ந்து விளங்கும் நெருஞ்சி போல், தலைவன்நெறியில் தான் நிற்பதாகக் கூறினாள்.

"தோழி! தலைவன் சூரியன் போன்றவன். என் பெரிய மூங்கில் போன்ற தோள்கள், (சூரியனையே நோக்கி நிற்கும்) நெருஞ்சி மலர்களைப் போன்றவை."

...நாடன்
ஞாயிறு அனையன் தோழி;
நெருஞ்சி அனையஎன் பெரும்பணைத் தோளே.*

---

*குறுந். 315. மதுரை வேளாதத்தன்.

அனைய - போன்றவை. பணை - மூங்கில் போன்ற.

27. உயிர்தானே போகும்?

திருமணத்திற்காகப் பொருள்தேடிவர வெளியூர்க்குப் பிரிந்து சென்றான் தலைவன். பிரியுமுன் தோழியிடம் தெரிவித்தான்; இரண்டு திங்களுக்குள் விரைந்து திரும்பிவருவதாகவும் உறுதி கூறினான்; தலைவிக்கு உணர்த்துமாறு தோழியையே வேண்டினான். தோழி தலைவியிடம் சென்று, "அவர்பிரிந்து சென்று விரைவில் மீள்வாராம். அதுவரையில் நீ பொறுத்திருக்க வேண்டும்" என்றாள். தோழி அந்தப் பிரிவு முயற்சியை உடனே தடுக்காமல் அதற்கு இடம் கொடுத்துவிட்டாளே என்று தலைவி வருந்தினாள். உடன்படுவது போல் பேசும் சொற்களால், தன் பிரிவாற்றாமை தோன்றக் கூறினாள்.

" தலைவன் பிரிந்தால் நம்முடைய ஓர் உயிர் அல்லாமல், தோழி, வேறு எதை நாம் இழக்கப் போகிறோம்? வேறு ஒன்றும் இழக்கப்போவதில்லை."

அரிநீர்ச் சேர்ப்பன் நீப்பின் ஒருநம்
இன்னுயிர் அல்லது பிறிதொன்று
எவனோ தோழி நாம்இழப் பதுவே.*

---

*குறுந். 334. இளம்பூதனார்.

விரிநீர் - கடல். சேர்ப்பன் - கடற்கரைத் தலைவன். எவனோ - என்னவோ. பிறிதொன்று - வேறொன்று.

28. பசலை போனதோ?

பொருள் தேடி வந்து மணம் செய்துகொள்வதாகக் கூறித் தலைவன் பிரிந்தான். தலைவி பிரிவாற்றாமல் வருந்தத் தலைப்பட்டாள். தொடக்கத்திலேயே இவ்வாறு வருந்தினால், இனி என்ன ஆவாளோ என்று தோழி கவலையுற்றாள். தலைவியை நோக்கி, "பிரிந்த இரண்டொரு நாளிலேயே இவ்வாறு மேனி வாடிப் பசலை உற்றாயே. இனிப் பலநாள் எவ்வாறு ஆற்றியிருக்கப் போகின்றாய்?" என்று நொந்து கூறினாள். அவளுடைய நல்லெண்ணத்தை உணர்ந்த தலைவி ஒருவாறு அமைதியானாள். அன்று பக்கத்து மலையில் நல்ல மழை பொழிந்தது. அது தலைவனுடைய மலை. வெளியே சென்று அந்த மலையைக் கண்டதும் தலைவனைக் கண்டாற்போன்ற ஒரு சிறு மகிழ்ச்சி தலைவிக்கு உண்டானது. உடனே தன் நெற்றியில் இருந்த பசலை போய் விட்டிருக்கும் என்று எண்ணி மகிழ்ந்து விரைந்து தோழியிடம் சென்று கேட்டாள்.

"மிக்க மழை பொழிந்த சாரலை உடைய அவருடைய குன்றத்தை இப்போது பார்த்தேன், தோழி! பசலை வருவதற்குமுன் இருந்த பழைய அழகைப் பெற்றுவிட்டதோ? பார் என் நெற்றியை."

படுமழை பொழிந்த சாரல் அவர்நாட்டுக்
குன்றம் நோக்கினென் தோழி;
பண்டை யற்றோ கண்டிசின் நுதலே.*

---

*குறுந். 249. கபிலர்.

பண்டையற்றோ - பண்டைத்தன்மை உடையதோ? கண்டிசின் - கண்டருள். நுதல் - நெற்றி.

29. அவர்தவறு அன்று

தலைவன் மராமரத்தில் வாழும் தெய்வத்தின் முன்னிலையில் "உன்னை விட்டுப் பிரியேன்; தெய்வம் சான்றாக உறுதி கூறுகிறேன்" என்று சூளுரைத்திருந்தான். அவன் வெளியூர்க்குச் செல்ல நேர்ந்தது. திரும்பிவர நாள் பல ஆயின. பிரிவாற்றாமல் வருந்திய தலைவிக்கு அவன் அன்று தெய்வம் சான்றாக உரைத்த உறுதிமொழி நினைவுக்கு வந்தது. சொன்ன உறுதி தவறி நடந்தால் அந்தத் தெய்வம் அவனை வருத்துமே என எண்ணிக் கலங்கினாள். தலைவன் தனக்கு ஒரு கொடுமையும் செய்யவில்லை என்றும், தன் மெலிவுக்குத் தானே காரணம் என்றும் கூறி, தலைவனைத் தெய்வம் வருத்தலாகாது என வேண்டினாள்.

"மன்றத்தில் உள்ள மராமரத்தில் வாழும் தெய்வம் கொடுமை செய்தவர்களை வருத்தும் என்று கூறுவார்கள். ஒரு சிறிதும் கொடுமை செய்யவில்லை எம் மலைநாட்டுத் தலைவர். யானே அவரை விரும்பியதால் என் நெற்றி பசலையுற்றது. யானே மனம் நெகிழ்ந்தமையால் என் தோள் மெலிவுற்றது. (பசலைக்கும் மெலிவுக்கும் அவர் எவ்வகையிலும் காரணம் அல்லர்)."

மன்ற மராஅத்த பேஎம்முதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப; யாவதும்
கொடியர் அல்லர்எம் குன்றுகெழு நாடர்;
பசைஇப் பசந்தன்று நுதலே;
ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் தோளே.*

---

*குறுந். 87. கபிலர்.

மன்ற - மன்றத்தில் உள்ள - பொதுஇடத்தில் உள்ள. மராத்த - மராமரத்தில் வாழ்கின்ற. பேஎம் - அச்சம், அச்சம் செய்தல். முதிர் - மிகுந்த. தெறூஉம் - தண்டிக்கும். பசைஇ - விரும்பி. பசந்தன்று - பசந்தது - நிறம் மாறியது.

30. பொறுக்க வல்லவர்க்கே நல்லது

திருமண முயற்சிக்காகப் பிரிந்த தலைவன் திரும்பிவர நாள் பல ஆயினமையால், தலைவி பிரிவாற்றாமல் மிக வருந்தினாள். தான் வருந்துவது தவறு என்று அவளுக்கே தெரிந்தது. ஆயினும் தன் நெஞ்சைத் தன்வயப் படுத்த முடியாமல் கலங்கினாள். தலைவனுடைய உறவு இவ்வாறு துயரத்தை விளைக்கக் காரணம் அவனுடைய தவறு அன்று, ஆற்றியிருக்க முடியாத தன் தவறே என்று உணர்ந்தாள். ஆறுதல் கூற வந்த தோழியிடம் பின் வருமாறு கூறினாள்.

"மலைநாடனாகிய தலைவனுடைய உறவு என்றும் மிக நல்லதே ஆகும்; தோழி! மை தீட்டிய கண்கள் நீர் சொரியுமாறு ஒரு நிலையாகக் காதலன் பிரிந்து செல்ல, அதைப் பற்றி நினையாமல் பொறுத்திருக்க வல்லவர்க்கே நல்லதாகும்."

குன்ற நாடன் கேண்மை என்றும்
நன்றுமன் வாழி தோழி ; உண்கண்
நீரொடு ஓராங்குத் தணப்ப
உள்ளாது ஆற்றல் வல்லு வோர்க்கே.*

---

*குறுந். 38. கபிலர்.

கேண்மை - காதல் மன் - மிக. உண் - மை உண்ட - மை தீட்டிய. ஓராங்கு - ஒருதன்மையாக. தணப்ப பிரிய. உள்ளாது - நினைக்காமல். ஆற்றல் - பிரிவைப் பொறுத்திருத்தல். வல்லு வோர்க்கே - வல்லவர்க்கே.

31. மருட்டிய கனவு

திருமண முயற்சிக்காகப் பிரிந்து சென்ற தலைவன் இன்னும் திரும்பிவராமையால் தலைவி வருந்தினாள். தோழி பலவாறு ஆறுதல் கூறப் பொறுத்திருந்தாள். ஒருநாள் தலைவி தனியே இருந்து பெருமூச்சு விட்டு வருந்திக்கொண்டிருந்தாள். தோழி அவளுடைய நிலையை அறிந்து, "உன்னை மணந்து கொள்ளும் முயற்சியின் காரணமாகத்தான் தலைவர் சென்றிருக்கிறார். இந்தக் காரணம் தெரிந்திருந்தும் நீ இவ்வாறு வருந்தலாமா?" என்றாள். அதற்குத் தலைவி, அன்று இரவு தான் கண்ட கனா அத்தகையது என்றும், அந்தக் கனா இல்லையானால் தான் வருந்த நேர்ந்திருக்காது என்றும் கூறினாள்.

"கேள் தோழி! இன்று இரவு, பொய் வல்ல தலைவன் என் உடம்பைத் தழுவிப் பொருந்திய கனா – உண்மை போல் தோன்றிய பொய்யான கனா – என்னை மயக்க, அதனால் விழித்து எழுந்து படுக்கையைத் தடவிப் பார்த்தேன். வண்டு படிந்து வாடிய குவளைமலர் போல் மெலிந்து யான் மட்டும் தனியே கிடந்தேன். என் நிலை இரங்கத்தக்கது."

கேட்டிசின் வாழி தோழி ; அல்கல்
பொய்வ லாளன் மெய்உறல் மரீஇய
வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட ஏற்றுஎழுந்து
அமளி தைவந் தனனே ; குவளை
வண்டுபடு மலரின் சாஅய்த்
தமியேன் மன்ற அளியேன் யானே.*

குறுந். 30. கச்சிப்பேட்டு நன்னாகையார்.

கேட்டிசின் - கேட்டருள்க. அல்கல் - இரவு. வலாளன் - வல்லவன். மரீஇய பொருந்திய. வாய்த்தகை - வாய்மையின் தன்மை உடைய - மெய் போன்ற. அமளி - படுக்கை. தைவந்தனன் – தடவினேன். சாஅய் - மெலிந்து. மன்ற - உறுதியாக, ஐயமின்றி.

32. பகையாய் முடிந்ததே

திருமணத்திற்காகப் பொருள் தேடப் பிரிந்த தலைவன் வராமையால் தலைவி பிரிவாற்றாமல் வருந்தினாள் ; அலர் (பழிச்சொல்) முதலியவற்றிற்கும் ஆளாகித் துன்புற்றாள். அவளைத் தேற்ற முயன்ற தோழி, தலைவனைப் பழிப்பது போல் கூறலானாள். இனிய மகிழ்ச்சியோடு தொடங்கிய அவருடைய நட்பு, தொடக்கத்தில் இன்பம் தந்து, நாளடைவில் இவ்வாறு துன்பம் தரும் பகையாக முடிந்ததே என்றாள். இவ்வாறு தான் கூறினால் அதனை உண்மை அன்று என்று தலைவியின் உள்ளம் மறுக்கும் என்றும், அதுவே துயரத்தைத் தணிப்பதற்கு உதவியாகும் என்றும் கருதினாள் தோழி.

"யானைக்கன்று, கள் மலிந்த ஊரில் குறமகள் பெற்ற பிள்ளைகளோடு சுற்றி ஓடி விளையாடித் தொடக்கத்தில் இனியதாக இருந்து, பிறகு அந்தக் குறவருடைய தினையையே மேய்ந்தாற்போல், தலைவன் மகிழ்ந்து விளையாடித் தொடங்கிய காதல் இப்போது பகையாக முடிந்ததே."

முழந்தாள் இரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறமகள் ஈன்ற
குறியிறைப் புதல்வரொடு மறுவந்து ஓடி
முன்னாள் இனியது ஆகிப் பின்னாள்
அவர்தினை மேய்தந் தாங்குப்
பகைஆ கின்றுஅவர் நகைவிளை யாட்டே.*

---

*குறுந். 394. குறியிறையார்.

முழந்தாள் - முழங்காலை உடைய. இரும்பிடி - கரிய பெண் யானையின். கயந்தலை - மென்மையான தலையை உடைய. குழவி - கன்று. நறவு - கள். பாக்கம் - ஊர். குறியிறை - சிறிய கைச் சந்தை உடைய (புதல்வர்); இந்த அடையின் சிறப்பால் புலவர்க்குப் பெயர் அமைந்தது. மறுவந்து - திரும்பித் திரும்பி வந்து.

33. இதுதான் பயனோ?

திருமணத்திற்கு ஏற்பாடு செய்துவருவதாகப் பிரிந்த தலைவனை நினைந்து நினைந்து தலைவி துயருற்று வருந்தினாள். அவளுடைய அழகு கெடுவதையும், தோள்கள் மெலிவதையும், உள்ளத்தே துயரம் பெருகி உறக்கம் இல்லாமல் வருந்துவதையும், அதனால் பசலை வந்துவிட்டதையும் கண்ட தோழி அவளுக்காகக் கலங்கினாள். இவ்வாறு துயருறக் கூடாது என அவளைக் கடிந்துரைத்தாள். தலைவனிடம் மகிழ்ந்து முறுவல் கொண்டு தொடங்கிய உறவு இப்படி வாடி மெலிவதற்குத்தானா என்றாள்.

"பழைய அழகு கெட்டு, தோள்கள் மெலிந்து, அல்லல் படும் நெஞ்சத்தோடு, இரவெல்லாம் உறங்காமல், பசலை பரவி அழிவதுதானோ? குறுக்கே வரும் அலைகள் உடையும் கடற்கரையை உடைய தலைவனோடு பற்கள் தோன்றச் சிரித்து மகிழ்ந்த அந்த நட்பின் பயன் இவ்வாறு அழிவது தானோ?

தொல்கவின் தொலைந்து தோள்நலம் சாஅய்
அல்லல் நெஞ்சமோடு அல்கலும் துஞ்சாது
பசலை யாகி விளிவது கொல்லோ...
விலங்குதிரை உடைதரும் துறைவனொடு
இலங்குஎயிறு தோன்ற நக்கதன் பயனே.*

---

*குறுந். 381.

தொல் - பழைய. கவின் - அழகு. தொலைந்து - கெட்டு. சாஅய் - மெலிந்து. அல்கலும் - இரவிலும். விளிவது - அழிவது. விலங்கு - குறுக்கே வரும். நக்கதன் - மகிழ்ந்ததனுடைய.

34. அலர்க்கு அஞ்சினனோ?

திருமண முயற்சிக்காகப் பொருள் தேடப் பிரிந்து தலைவன் பலநாள ஆகியும் வராமலிருக்கவே, தலைவி மிக வருந்தினள். ஊரார் தூற்றும் அலருக்கு அஞ்சி வராமல் நின்றுவிட்டானோ, வேறு என்ன காரணமோ என்று கவலையுற்றாள். இரவில் ஊரெல்லாம் உறங்கும் நேரத்திலும் தான் மட்டும் உறங்காமல் அவனுடைய நினைவாகவே இருந்து துயருறுவதைத் தோழியிடம் கூறினாள்.

"சொல் தோழி! இது தகுமோ? தக்கது அன்று. பொறுத்தற்கரிய துயரம் படவும் நம்மால் முடியவில்லை. அதற்குமேல், அந்தத் துயர மிகுதியால் இறந்துபோதலை அதைவிட அஞ்சுகின்றோம். அந்தோ! இன்னும் இவர்கள் இருவரும் நீங்காத காதலுடையவர் என்று ஊரார் கூறும் அலருக்குத் தலைவன் அஞ்சினனோ? ஊரார் பலரும் ஒருசேர உறங்கிக் கிடக்கின்ற நள்ளிரவிலும் என் நெஞ்சில் அல்லாமல், நேரே என் கண் காண வரவில்லையே"

உரைத்திசின் தோழிஅது புரைத்தோ அன்றே;
அருந்துயர் உழைத்தலும் ஆற்றாம்; அதன்தலைப்
பெரும்பிறி தாகல் அதனினும் அஞ்சுதும்;
அன்னோ இன்னும் நன்மலை நாடன்
பிரியா நண்பினர் இருவரும் என்னும்
அலரதற்கு அஞ்சினன் கொல்லோ பலருடன்
துஞ்சுஊர் யாமத் தானும்என்
நெஞ்சத்து அல்லது வரவுஅறி யானே.*

---

*குறுந். 302. மாங்குடிகிழார்.

உரைத்திசின் - சொல்லியருள்க. புரைத்து - தகுதியுடையது. ஆற்றாம் - நம்மால் இயலாது. அதன்தலை - அதற்குமேல். பெரும் பிறிதாகல் - இறத்தல். அன்னோ - அய்யோ. அலரதற்கு - அலர்க்கு. யாமத்தானும் - யாமத்திலும்.

35. மலையை வந்து பார்

திருமணத்திற்காகப் பொருள்தேடும் முயற்சியில் ஈடு பட்ட தலைவன் வெளியூரிலிருந்து இன்னும் திரும்பிவர வில்லை. தலைவியின் துயரைத் தணிக்கும் பொருட்டுத் தோழி தன்னாலான முயற்சி எல்லாம் செய்துவந்தாள். பல நாள் கழிந்தும் திரும்பிவராமையால் தலைவனைக் கொடியவன் எனப் பழித்தாள்; அவனால் தலைவியின் தோள்கள் வாடி மெலிந்தன என்றாள். மெலிந்த தோள்கள் பழைய அழகைப் பெறுவதற்கு ஒருவழி கூறத் தொடங்கி, அவனுடைய மலையைப் பார்த்தால் தோள்கள் நலம் பெறும் என்று கூறி, வெளியே வருமாறு அழைத்தாள்.

"கொடியவர் நமக்கு அருள் செய்யாவிட்டாலும், உன் தோள்கள் இழந்த அழகைப் பெறுவதற்காக, அதோ பார், தோழி, அங்கு வந்து பார்ப்பாயாக; திரட்சியான கற்கள் ஓங்கியுள்ள மலையை வந்து பார்ப்பாயாக."

கொடியோர் நல்கார் ஆயினும் யாழநின்
தொடிவிளங்கு இறைய தோள்கவின் பெறீஇயர்
உவக்காண் தோழி அவ்வந் திசினே...
தண்நறுந் துறுகல் ஓங்கிய மலையே.*

---

*குறுந். 367. மதுரை மருதன் இளநாகன்.

நல்கார் - அருளார். யாழ - முன்னிலை அசை. தொடி - வளையல். இறைய - கைச்சந்துகளை உடைய. கவின் - அழகு. பெறீஇயர் - பெறும் பொருட்டு. உவக்காண் - அதோ பார். அவ்வந்திசின் - அங்கு வருக. துறு கல் - திரட்சியான கல்.

36. ஒடிந்த கிளை

திருமணத்திற்குமுன் வெளியூர்க்குச் சென்ற தலைவன் இன்னும் திரும்பிவராமையால் தலைவி மிகக் கவலையுற்றாள். தன் காதல்துன்பத்தைத் தோழியிடம் தவிர வேறு எவரிடமும் சொல்ல வாய் இல்லாதவளாய்த் தனக்குள் வருந்தினாள். தன் துயர் ஊரார்க்குத் தெரிந்துவிட்டால் அலர் தூற்றுவார்களே என்ற கவலை ஒருபுறம்; அலர் தூற்றுவதற்கு அஞ்சினால், காதல் குறைவுறுமே என்ற ஏக்கம் இன்னொரு புறம்; பிறர் அறிந்து தூற்றாமல் காதலைத் துறந்துவாழ முயல்வதானால், நாணம் ஒன்றுதான் தனக்கு உரியதாய் நிற்குமே என்ற துயரம் மற்றொருபுறம்; இவற்றால் தன் பெண்மையழகு வாடி அழிந்ததே எனத் தோழியிடம் கூறினாள்.

" அலருக்கு அஞ்சினால் காதல் மெலிந்து குறைவுறும். பிறர் இகழ்ச்சி நீங்குமாறு காதலைக் கைவிட்டால், உள்ளது நாணம் ஒன்றுதான். பெரிய யானை வளைத்ததனால் முறிந்து நிலத்தில் படாமல் தொங்குகின்ற நார் உடைய மரக்கிளை போல் வாடுவதாயிற்று அவர் நுகர்ந்த என் அழகு. பார் தோழி!"

கௌவை அஞ்சின் காமம் எய்க்கும் ;
எள்அற விடினே உள்ளது நாணே ;
பெருங்களிறு வாங்க முறிந்துநிலம் படாஅ
நாருடை ஒசியல் அற்றே
கண்டிசின் தோழிஅவர் உண்டஎன் நலனே.*

---

*குறுந். 112. ஆலத்தூர்கிழார்.

கௌவை - அலர். எய்க்கும் - குறையும், மெலியும். எள் - இகழ்ச்சி. அற - நீங்க. வாங்க - வளைக்க. படாஅ - படாத. நார் - பட்டையின் நார். ஒசியல் - ஒடிந்த கிளை. அற்று - போன்றது. கண்டிசின் - கண்டருள்.

37. வேங்கையை மறந்தாரோ ?

திருமண முயற்சியை மேற்கொண்டு பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வராததைக் குறித்துத் தலைவி பற்பல வாறாக எண்ணிக் கவலையுற்றாள். பொருள் தேடச் சென்றவர் அம்முயற்சியில் இன்னும் போதிய வெற்றி பெறவில்லையோ என எண்ணினாள். முயற்சி இன்னும குறையாக இருப்பின், யாரிடமேனும் நிலைமையைச் சொல்லியனுப்பக் கூடாதா என வருந்தினாள். தனக்குச் சொல்லியனுப்பா விட்டாலும், இராக் காலத்தில் அவர் வந்தபோதெல்லாம் தோட்டத்தில் துணையாக இருந்த அந்த வேங்கை மரத்திற் காவது தூது சொல்லி யனுப்பக் கூடாதா என்று தோழியிடம் கூறினாள். தூது சொல்ல மக்களைத் தேடினால் அவர்களின் வாயிலாகக் களவு வெளிப்பட்டுவிடும் என்றால், மரத்தினிடம் உறவு உள்ள பறவைகள் வாயிலாகத் தூது அனுப்பலாமே என்றாள்.

" நமக்கு ஒன்று சொல்லியனுப்பாவிட்டாலும், தமக்குப் பொருந்திய வேங்கைமரத்திற்கு - துன்பமான இராக் காலத்தில் இனிய துணையாக இருந்த தோட்டத்து வேங்கை மரத்திற்கு - தூது அனுப்பவும் மறந்தாரோ ? பிரிந்து செல்லும் கல்நெஞ்சம் உடைய அவர் பறவை வாயிலாக அனுப்பப்படும் தூதும் மறந்தாரோ ?"

நமக்குஒன்று உரையார் ஆயினும் தமக்குஒன்று
இன்னா இரவின் இன்துணை யாகிய
படப்பை வேங்கைக்கும் மறந்தனர் கொல்லோ
துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே.*

---

*குறுந். 266. நக்கீரர்

ஒன்று - 1, ஒருசொல், 2. பொருந்திய. படப்பை-தோட்டம். துறத்தல் வல்லியோர் - பிரிந்து துறக்க வல்லவர், தலைவர். புள் வாய்த் தூது - பறவை வாயிலான தூது.

38. சொல்வோர் இல்லையே

திருமணத்திற்குப் பொருள்தேடச் சென்ற தலைவன் பிரிந்து பல ஆண்டுகள் ஆயின. மாலை நேரங்களில் தலைவியின் துயரம் பெருகிற்று. பறவைகளின் ஒலி, மலர்கள் குவிதல், கடற்கரைச் சோலையின் அமைதி, வானத்தில் ஒளி குறைதல் இவை யாவும் மாலைப்பொழுது வந்ததையும் இன்னும் தலைவன் வராததையும் நினைவூட்டி அவளை மேன் மேலும் கலங்கச் செய்தன. இந்த நிலையில் தலைவி தான் உயிர் வாழப் போவதில்லை என வருந்தினாள். எனினும், தலைவனிடம் தூது சென்று அறிவிப்பவர் யாரேனும் இருந்தால் இன்னும் உயிர்வாழ இயலும் எனத் தோழியிடம் கூறினாள்.

"பறவைகளும் ஒலித்தன. மலர்களும் கூம்பின. கடற்கரைச் சோலையும் தனிமை மிக உடையதாயிற்று. வானமும் நம்மைப் போல் மயக்கம் உடையதாகி, பகலின் ஒளி குறையவே பொலிவு அற்றதாயிற்று. இன்னும் யான் உயிரோடு இருப்பேன் தோழி; இந்த என் நிலைமையைத் தலைவர்க்குத் தூது சொல்வோர் வாய்த்தால் இன்னும் உயிரோடு இருப்பேன்."

புள்ளும் புலம்பின; பூவும் கூம்பின;
கானலும் புலம்புநனி உடைத்தே; வானமும்
நம்மே போலும் மம்மர்த்து ஆகி
எல்லை கழியப் புல்லென் றன்றே;
இன்னும் உளெனே தோழி இந்நிலை...
தண்ணந் துறைவர்க்கு உரைக்குநர்ப் பெறினே.*

---

*குறுந். 310. பெருங்கண்ணன்.

புள் - பறவைகள். புலம்பின - ஒலித்தன. புலம்பு - தனிமை. நனி - மிக. மம்மர்த்து - மயக்கம் உடையது. எல்லை - பகல். புல்லென் றன்று - புல்லென்றது. தண்ணந் துறைவர்க்கு - குளிர்ந்த அழகிய கடல்துறைத் தலைவர்க்கு.

39. வாழத் தகாத ஊர்

விரைவில் திரும்பிவந்து மணந்துகொள்வதாகக் கூறிச் சென்ற தலைவன் இன்னும் வரவில்லை. தலைவி நள்ளிரவிலும் உறங்காமல் வருந்தினாள். ஊரெல்லாம் உறங்கும் நள்ளிரவில், தான் ஒருத்தி மட்டும் வருந்தும் நிலைமை அவளுக்குக் கொடியதாகத் தோன்றியது. தன்னைப் பற்றிக் கவலைப் படாமல் இந்த ஊரார் மட்டும் நன்றாக உறங்குகின்றார்களே என்றும் எண்ணி நொந்தாள். ஊரை வெறுத்துத் தோழியிடம் பின்வருமாறு கூறினாள்.

" கடற்கரையில் அமைந்த இந்த ஊர் வாழ்வதற்குத் தகுதியான இடம் அன்று. தலைவனுடைய கொடுமையை நினைந்து தீராத் துயரத்தோடு வருந்தி நள்ளிரவிலும் உறங்காமலிருக்கின்ற என்னைப் போன்றவர்களை ஏன் என்று கேட்காத மக்களை—தூக்கம் மிகுந்த கண்கள் வாய்ந்த மக்களை—உடையது ; நீண்ட இராக்காலத்தையும் உடையது இந்த ஊர்."

உறைபதி அன்றுஇத் துறைகெழு சிறுகுடி ;
கானலஞ் சேர்ப்பன் கொடுமை எற்றி
ஆனாத் துயரமொடு வருந்திப் பானாள்
துஞ்சாது உறைநரொடு உசாவாத்
துயில்கண் மாக்களொடு நெட்டிரா உடைத்தே.*

---

*குறுந். 145. கொல்லனழிசி.

துறை - கடல்துறை. கெழு - பொருந்திய. சிறுகுடி - சின்ன ஊர். கானல் — கடற்கரைச் சோலை. சேர்ப்பன் - கடற்கரைத் தலைவன். எற்றி - நினைந்து. ஆனா - அமையாத - மிக்க. பானாள் - நள்ளிரவு. துஞ்சாது - தூங்காமல். உறைநர் - வாழ்பவர். உசாவா — ஏன் என்று கேட்காத.

40. யான் ஒருத்தியே

திருமணத்திற்கு ஏற்பாடு செய்வதற்காகப் பிரிந்த தலைவனுடைய வரவை எதிர்பார்த்து ஏங்கியிருந்த தலைவியின் துயரம் வளர்ந்தது. நள்ளிரவிலும உறங்காமல் வருந்தும் நிலைமை உற்ருள். தோழி அவளைத் தேற்ற முயன்றுவந்தாள். ஒருநாள் இரவு முழுதும் உறங்காமல் வருந்திய தலைவி, தோழி உறங்கியதைக் கண்டு, இந்தப் பெரிய உலகத்தில் தன்னோடு பேசத் தோழியின் துணையும் இல்லாமல் தனித்துக் கிடந்து கலங்க நேர்ந்ததே என்று நொந்தாள். தோழியிடமே இதைக் கூறினாள்.

" இருள் செறிந்து அமைதியாய்க் கிடக்கின்றது நள்ளிரவு. பேச்சு ஒழிந்து இனிது அடங்கிவிட்டார்கள் மக்கள். வெறுப்பு இல்லாமல் இந்தப் பரந்த உலகமும் உறங்கிக் கிடக்கின்றது. தனியே யான் ஒருத்திதான் உறங்காமல் வருந்துகின்றேன் "

நள்ளென் றன்றே யாமம் ; சொல்அவிந்து
இனிதுஅடங் கினரே மாக்கள் ; முனிவுஇன்று
நனந்தலை உலகமும் துஞ்சும் ;
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே.*

---

*குறுந். 6. பதுமனார்

நள்ளென்றன்று - நள்ளென்றது - செறிந்து அடங்கியது. சொல்- சொல்லுதல் - பேசுதல். அவிந்து-கெட்டு. முனிவுஇன்று-வெறுப்பு இன்றி. நனந்தலை - அகன்றஇடத்தை உடைய. மன்ற - திண்ணமாக. துஞ்சாதேன் - துஞ்சாதவன் - உறங்காதவள்.

41. என்ன செய்யட்டும் ?

திருமண முயற்சிக்காகப் பிரிந்து சென்ற தலைவனை நினைந்து வருந்திய தலைவியின் துயரம் பெருகிவிட்டது. எல்லாரும் அமைதியாய் உறங்கும் நள்ளிரவில் தான் ஒருத்தி மட்டும் விழித்திருப்பது அவளுக்குப் பெருந்துன்பமாக இருந்தது. ஒவ்வொரு வேளையில் தன் துயர் தாங்க முடியாத காரணத்தால்,ஊராரின் உறக்கத்தைக் கலைத்து நள்ளிரவின் அமைதியைக் குலைக்க ஏதாவது செய்ய வேண்டும் என்றும் தோன்றுமாம். பாம்பு பாம்பு, அல்லது தீ தீ, அல்லது திருடன் திருடன் என்று கூவலாம்போல் இருக்குமாம். இந்த மனநிலையைத் தோழியிடம் எடுத்துக் கூறினாள்.

"எங்காவது முட்டிக்கொள்ளட்டுமா ? எதன் மேலேனும் தாக்குவேனோ ? இன்னது செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. ஏதேனும் ஒரு பொய்க் காரணத்தை மேற்கொண்டு, ஆ ஒல் என்று ஒலி எழுப்பிக் கூவுவேனோ ? சுழன்று அசையும் தென்றல் வந்து வருத்த, என் துன்பமான காதல்நோயை அறியாமல் கவலையற்று உறங்கும் இந்த ஊரை யான் என்ன செய்யட்டும் ?"

முட்டு வேன்கொல் ? தாக்கு வேன்கொல் ?
ஓரேன் யானும்;ஓர் பெற்றி மேலிட்டு
ஆஅ ஒல்எனக் கூவு வேன்கொல் ?
அலமரல் அசைவளி அலைப்பஎன்
உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே.*

---

*குறுந். 28. ஔவையார்.

முட்டுவேன்கொல் - முட்டுவேனோ. ஓரேன் - ஆராய்ந்து அறியேன். பெற்றி - தன்மை - காரணம். மேலிட்டு - பொய்யாக மேற்கொண்டு. அலமரல் - சுழலுதல். வளி - காற்று. அலைப்ப - வருத்த. உயவு - வருந்தல்.

42. யாரும் இல்லை

திருமண முயற்சிக்காகப் பொருள் தேடிவரச் சென்ற தலைவனைப் பற்றித் தலைவியின் உள்ளம் பலவாறு எண்ணி எண்ணிக் கலங்கியது. அன்புடையவன் என்று நம்பிக்கையால் தெளிந்து அவனிடம் கொண்ட உறவு ஏமாற்றமாய் முடியுமோ என்று ஏங்கினாள். அவ்வாறு முடிவதானால் தன் எதிர்காலம் என்ன ஆகும் என்று துயருற்றாள். பெற்றோர்க்கும் சுற்றத்தார்க்கும் உண்மையை எவ்வாறு சொல்வது, என்ன என்று சொல்வது, சான்று யார் எனக் காட்டுவது என்று பலவாறு நொந்தாள். தோழியிடம் பின்வருமாறு கூறினாள்.

" அப்போது யாரும் இல்லையே. கள்வனாகிய அவன் ஒருவனே இருந்தான். அவன் இப்போது தன் உறுதி மொழியிலிருந்து தவறிப் பொய்த்துவிட்டால் யான் என்ன செய்வேன்? தினைத்தாள் போன்ற சிறிய பசிய கால்களை உடைய நாரை — ஓடும் நீரில் ஆரல்மீனைப் பார்த்துக் காத்திருந்த அந்த நாரையும் இருந்தது, அவன் இயற்கையாக எதிர்ப்பட்டுக் கூடிய அப்பொழுது."

யாரும் இல்லைத் தானே கள்வன்;
தான்அது பொய்ப்பின் யான்எவன் செய்கோ?
தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே.*

---

*குறுந். 25.

எவன் - என்ன? செய்கு - செய்வேன். கால - கால்களை உடைய. ஒழுகு - ஓடும். குருகு - நாரை. மணந்த - கூடிய. ஞான்று - பொழுது.

43. அன்னை அறிந்தால்—!

திருமண ஏற்பாட்டுக்காகப் பொருள் தேடிவருவதாகச் சொல்லித் தலைவன் பிரிந்து பல நாள் ஆனமையால் பிரிவுத் துன்பத்தைத் தனக்குள் தாங்கிக்கொள்ள முடியாமல் தலைவி மிகக் கலங்கினாள். 'பிரியேன், மறவேன்' என்று தலைவன் சொன்ன சொற்கள் பொய்யாய்ப் போயின என வருந்தினாள். தன் உடல்மெலிவையும் சோர்வையும் கண்டு தாய் ஐயுற்று அறிந்தால் பிறகு எவ்வாறு தான் உயிர்வாழ்வது என்று தோழியிடம் கலங்கிக் கூறினாள்.

" நுண்ணிய வளைகள் நெகிழுமாறும் உடலில் சோர்வு நிலைக்குமாறும் துன்பம் மிகுந்துள்ள இந்த வருத்தத்தைத் தாய் அறிவாளானால், உயிரோடு வாழ்வேனோ? தோழி! தலைவன் சொன்ன உறுதிமொழிகளோ பொய்யாய்ப் போயின."

ஆய்வளை ஞெகிழவும் அயர்வுமெய் நிறுப்பவும்
நோய்மலி வருத்தம் அன்னை அறியின்
உளெனோ வாழி தோழி!...
துறைவன் சொல்லோ பிறஆ யினவே.*

---

*குறுந். 316. தம்பிசேர்கீரன்.

ஆய் - நுண்ணிய வேலைப்பாடு அமைந்த. அயர்வு - சோர்வு. மலி - மிகுந்த. உளெனோ - உள்ளேனோ - வாழ்வேனோ. பிற - மாறுபட்டன.

44. எங்கும் அலர் பரவியதே

திருமண முயற்சியை மேற்கொண்டு பிரிந்து சென்ற தலைவனுடைய வருகையை எதிர்பார்த்து எதிர்பார்த்துத் தலைவி வாடி மெலிந்தாள்; அழகெல்லாம் இழந்தாள். அதனால், அவளுடைய காதல் பற்றிய செய்தி பலராலும் தூற்றிப் பேசப்பட்டு எல்லாரும் அறிந்ததாகிவிட்டது. அந் நிலையில் மிகச் சோர்ந்தவளாய்த் தோழியிடம் பின்வருமாறு கூறினாள்.

"யான் இங்கே தனியாக இருக்கின்றேன். என் அழகோ, தீராத துன்பத்தோடு கடற்கரைச் சோலையில் சென்றுவிட்டது. தலைவன் தன் ஊரில் உள்ளான். யாரும் அறியாதிருந்த எங்கள் களவுவாழ்க்கையோ, பலராலும் தூற்றப்படும் அலராகி மன்றத்திலும் பரவிவிட்டது."

யானே ஈண்டை யேனே; என்நலனே
ஆனா நோயொடு கான லஃதே;
துறைவன் தம்மூ ரானே;
*மறைஅல ராகி மன்றத் தஃதே.**

---

*குறுந். 97. வெண்பூதி.

ஈண்டையேன்—இவ்விடத்தினேன். நலன்—பெண்மையழகும் பண்பும். ஆனா – அமையாத – தீராத. கானலஃது – கானலது – கானலிடத்தது. மறை – பிறர்க்குத் தெரியாதது – வெளியார் அறியாத காதல். மன்றத்தஃது – மன்றத்திடத்தது.

45. கண்ணீரும் நினைப்பும்

திருமணத்திற்காகப் பொருள் தேடிவரப் பிரிந்து சென்ற தலைவன் திரும்பிவராமையால், நாளுக்குநாள் தலைவிக்குத் துயரம் பெருகியது; ஏமாற்றமும் மிகுந்தது. சென்ற தலைவன் என்ன ஆனான் என்று அறிய முடியவில்லை. பிறர் அறியாமல் கொண்ட களவுக்காதல் ஆகையால், யாரையேனும் கேட்டு அறிவதற்கும் வழி இல்லை. இவ்வாறே தலைவனைப் பற்றி ஒன்றும் அறிய முடியாமற் போய்விட்டால், எதிர்காலம் என்ன ஆவது என்று தலைவி மிகக் கலங்கினாள். காதலாய்த் தொடங்கிய தலைவனுடைய நட்பு, கண்ணீர் சொரிந்து வருந்தும் நினைப்பு என்னும் அளவில் நின்றுவிட்டதே என்று துயருற்றாள். தோழியிடம் சொல்லி வருந்தினாள்.

" தெய்வம் வாழும் மலைநாட்டுத் தலைவனுடைய உறவு, நீர் நிறைந்த கண்களோடு வருந்தும் நினைப்பு ஆகிவிட்டதே."

சூர்மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணொடு நினைப்புஆ கின்றே.*

---

*குறுந். 105. நக்கீரர்.

சூர் - அச்சம்தரும் தெய்வம். மலி - மிக்க. ஆகின்று-ஆயிற்று.

46. நீ சொல் தும்பி !

திருமணத்திற்குப் பொருள் தேடிவரச் சென்ற தலைவன், நெடுநாள் கழித்துத் திரும்பிவந்தான். அவன் திரும்பி வந்ததைக் கண்ட தோழி, காணுதவள் போல் நடித்து அவனுக்குத் தலைவியின் துன்ப நிலையை உணர்த்த விரும்பினுள். அங்குப் பறந்து சென்ற தும்பியைக் கண்டு கூறுபவள்போல் பின்வருமாறு உரைத்தாள்.

"நான் சொல்வதைக் கேள் ; அழகிய சிறகை உடைய தும்பி ! நல்ல மொழியை எடுத்துச் சொல்வதற்கு அச்சம் கொள்ள வேண்டியதில்லை. தலைவர் போயிருக்கும் நாட்டின் சிறந்த நெடு மலைக்கு நீ செல்வாயானுல், கடமைமான்கள் மிகுந்த தோட்டத்துத் தினைப்பயிரில் களைக்கொட்டு எறிந்த நுண்ணிய புழுதி படிந்த குன்றவரின் தங்கை இன்னும் தன் சுற்றத்தாரிடமிருந்து நீங்கவில்லை என்பதைச் சொல் ; தேன் கூடுகள் தொங்கும் மலைநாட்டுத் தலைவர்க்குச் சொல்."

அம்ம வாழியோ அணிச்சிறைத் தும்பி !
நன்மொழிக்கு அச்சம் இல்லை ; அவர்நாட்டு
அண்ணல் நெடுவரைச் சேறி யாயின்
கடமை மிடைந்த துடவையஞ் சிறுதினைத்
துளர்எறி நுண்துகள் களைஞர் தங்கை
தமரின் தீராள் என்மோ......
பிரசம் தூங்கும் மலைகிழ வோர்க்கே.*

---

*குறுந். 392. தும்பிசேர்கீரனுர்.

சிறை - சிறகு. அண்ணல் - தலைமை. சேறி - செல்லுதி - செல்வாய். மிடைந்த - செறிந்த, மிகுந்த. துடவை - புன்செய், துளர் - களை கொட்டும் கருவி. களைஞர் - களை பறிப்பவர். தீராள் - நீங்காள். என்மோ — என்பாய். பிரசம் — தேன்.

47. அவள் வருவதா?

தலைவனுக்குத் தம் மகளை மணம் செய்து கொடுக்கப் பெற்றோர் இணங்கமாட்டார்கள் என்பதைத் தோழி அறிந்தாள். அறிந்தபின், வேறு ஏற்பாடு செய்ய முனைந்தாள். தலைவனிடம் சென்று, "நீ இவளை அழைத்துக்கொண்டு வெளியூர்க்குச் சென்று மணம் செய்துகொள். அதுதான் வழி. இல்லையேல் தலைவி வீட்டினுள் அடைபட்டுக் கிடந்து வருந்தும் துன்பத்தை இனித் தாங்க இயலாது" என்றாள். இதைக் கேட்ட தலைவன், கொடிய பாலைவழியில் அவளை அழைத்துச் செல்வது எவ்வாறு எனக் கலங்கினான். நீரற்ற வழிகளின் வெம்மையால் அவள் வருந்துமாறு செய்வது தகுமோ என்று வருந்தி மறுத்தான்.

" வேட்டையாடும் செந்நாய்கள் தோண்டிக் குடித்து எஞ்சிய நீர்—காட்டு மல்லிகைப் பூக்கள் விழுந்து மூடி அழுகிய சிறிது நீர் — அதுதான் அந்த வழியில் கிடைப்பது. வளை அணிந்த கையினளாய் அதை எடுத்து எம்மோடு இருந்து குடிப்பதற்கு அவள் வருவாளாக; இரங்கத் தக்கவள், மிக இரங்கத்தக்கவள் எம் காதலி."

வேட்டச் செந்நாய் கிளைத்துஊண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகல் சின்னீர்
வளையுடைக் கையள் எம்மொடு உணீஇயர்
வருகதில் அம்ம தானே;
அளியளோ அளியள்எம் நெஞ்சுஅமர்ந் தோளே.*

---

*குறுந். 56. சிறைக்குடியாந்தையார்.

கிளைத்து - மண்ணைக் கிளறி, தோண்டி. ஊண் - உண்ணுதல். மிச்சில் - எஞ்சியது - எச்சில். குளவி — காட்டு மல்லிகை. சின்னீர் - சிறிது நீர். உணீஇயர் - உண்பதற்காக. நெஞ்சு அமர்ந்தோள் - நெஞ்சில் விரும்பிடப் பெற்றோள்.

48. வீடு இன்பமானதோ ?

தலைவியைப் பாலைவழியில் அழைத்துச் செல்ல மறுத்தான் தலைவன். "உப்பு வாணிகர் வேறு வழி இல்லாத காரணத்தால் அந்தப் பாலைநிலத்தில் கூட்டமாகச் செல்கின்றனர். ஓமை மரங்கள் வளர்ந்துள்ள பகுதியில்தான் சிறிது நிழல் இருக்கும். அங்கே அவர்கள் தங்கியிருந்து சமையல் செய்து உண்கின்றனர். அவர்கள் சென்ற பிறகு பார்த்தால் பாழடைந்துபோன ஊர்போல் தோன்றும். இத்தகைய பாலை வழியில் அழைத்துச் செல்ல மாட்டேன்" என்று தோழியிடம் கூறினான். தோழியோ, அந்தப் பாலை வழியில் காதலன் உடன்வருவதால் தலைவி மகிழ்வாள் என்றும், தனியே வீட்டினுள் இருப்பதுதான் அவளுக்குப் பெருந்துன்பமாக உள்ளது என்றும் உணர்த்தினாள்.

"உப்பு வாணிகர் கூட்டமாகச் சேர்ந்து தங்கியிருந்து நீங்கியபோது பரந்த இடத்தை உடைய ஊர் பாழடைந்துவிட்டாற் போல் தோன்றும் அந்தக் காடுகள் — ஓமை மரங்களை உடைய பெரிய காடுகள் — துன்பமானவை என்று சொல்வீரானால், பிரிந்து தனித்திருப்பவர்க்கு வீடுகள் இனியவை ஆகுமோ ? தலைவ !"

> **உமணர், சேர்ந்து கழிந்த மருங்கின் அகன்தலை**
> **ஊர்பாழ்த் தன்ன ஓமையம் பெருங்காடு**
> **இன்னா என்றி ராயின்**
> **இனியவோ பெரும தமியோர்க்கு மனையே.***

---

* குறுந். 124. பாலைபாடிய பெருங்கடுங்கோ.

உமணர் — உப்பு வாணிகர். கழிந்த — நீங்கிச் சென்ற. என்றிர் — என்று சொன்னீர். இவருடைய பாலைநில வருணனைகள் அனுபவ அறிவும் கற்பனை உணர்வும் செறிந்து நயமுற விளங்குதலால், 'பாலைபாடிய' என்று சிறப்பிக்கப் பெற்றார்.

49. பழியும் உண்டு

தலைவியைத் தலைவன் வெளியூர்க்கு அழைத்துச்செல்லுமாறு ஏற்பாடு செய்யத் தொடங்கினாள் தோழி. தலைவனிடம் சென்று அவனை உய்த்துணருமாறு சொன்னாள். தலைவன் உணர்ந்தான்; உடன் அழைத்துச் செல்ல வேண்டுமே என்பதை எண்ணிப் பெருமூச்சு விட்டான். தோழி அவனுடைய கருத்தைப் போற்றி ஊக்கமூட்டினாள். பிறகு தலைவியிடம் சென்று அவனுடைய கருத்தைக் கூறினாள்.

"தினையில் படியும் கிளிகளை ஓட்டுக என்று தாய் தினைப்புனத்துக்கு அனுப்பினால் பகல்காலம் காதலுக்குப் பொருந்திவரும்; இராக்காலத்தில் நீ வருதலால் வழியில் நேரும் இடையூறுகளுக்கு அஞ்சுவேன். இந்நிலையில் யாம் வருந்தும் துன்பத்தினை நீக்க என்ன செய்வோம் என்று யான் தலைவனிடம் சொன்னேன். அதற்கு அவன் வேறொரு வழியை (உடன் அழைத்துச் செல்லுதலை) உள்ளத்தே எண்ணிப் பெருமூச்சு விட்டான். காதல் மிக நுட்பமானது. அவனுடைய எண்ணம் மிக அறிவானது, பழியும் உள்ளது என்று யான் கூறினேன்."

> தினைகிளி கடிகெனின் பகலும் ஒல்லும்;
> இரவுநீ வருதலின் ஊறும் அஞ்சுவல்;
> யாங்குச்செய் வாம்எம் இடும்பை நோய்க்குஎன
> ஆங்குயான் கூறிய அனைத்திற்குப் பிறிதுசெத்து
> ஓங்குமலை நாடன் உயிர்த்தோன் மன்ற;
> ஐதே காமம்; யானே
> கழிமுதுக் குறைமையும் பழியும்என் றிசினே.*

---

*குறுந். 217. தங்கால் முடக்கொல்லனார்.

கடிக — ஓட்டுக. ஒல்லும் — பொருந்தும். ஊறு — இடையூறு. யாங்கு — எவ்வாறு. இடும்பை — துன்பம். நோய் — துன்பம். பிறிது — வேறொன்று. செத்து — கருதி. உயிர்த்தோன் — பெருமூச்சு விட்டான். மன்ற — உறுதியாக. ஐது — நுட்பமானது. கழி — மிக்க. முதுக்குறைமை — அறிவுடைமை. என்றிசின் — என்றேன்.

50. அந்தோ நாணமே !

தோழி தலைவியைத் தலைவனுடன் அனுப்பத் துணிந்து அதற்கு உரிய முயற்சி செய்யத் தொடங்கினாள். தலைவியிடம் சென்று, "வீட்டிலிருந்து நீ இனித் துன்புற வேண்டா. உன் காதலருடன் வெளியூர்க்குச் சென்று அங்கே அவனை மணந்து வாழ்வதே கடமை. உன் காதலரும் அதற்கு இசைந்துள்ளார்" என்றாள். வீட்டை விட்டு வெளியேறுதல் என்றவுடன் தலைவியின் நெஞ்சம் துணுக் குற்றது. காதலின் காரணமாக நாணத்தைத் துறந்து வெளியே செல்ல வேண்டுமோ என வருந்தினாள்.

"அந்தோ ! இரங்கத் தக்கது நாணம் ! நம்மோடு அது மிக நெடுங்காலம் இருந்து வருந்தியது. இனிமேல், கரும்பு வளர்ந்த மணல்கரை நீர் வந்து மோதுதலால் கரைந்து அழிந்தாற்போல், தாங்கும் வரையில் தாங்கி நின்று, காதல் மிகுந்து நெருக்கும்போது நில்லாமல் நீங்கிவிடுகின்றதே."

அளிதோ தானே நாணே ; நம்மொடு
நனிநீடு உழந்தன்று மன்னே இனியே
வான்பூங் கரும்பின் ஓங்குமணல் சிறுசிறை
தீம்புனல் நெரிதர வீய்ந்துஉக் காஅங்குத்
தாங்கும் அளவைத் தாங்கிக்
காமம் நெரிதரக் கைந்நில் லாதே.*

---

*குறுந். 149. வெள்ளிவீதியார்.

அளிது — இரங்கத்தக்கது ; அய்யோ பாவம் என்னும் கருத்து உடையது. நனி — மிக. நீடு — நெடுங்காலம். உழந்தன்று — உழந்தது — வருந்தியது. மன் — இனி அந்த நிலை போயிற்று என்னும் பொருள் தருவது. வான் — வெண்மையான. சிறை — கரை. தீம்புனல் — இனிய ஆற்றுநீர். நெரிதர — நெருக்க. வீய்ந்து — கெட்டு. உக்காங்கு — அழிந்தாற்போல்.

51. கைவிடாமல் காப்பாற்று

தலைவி தலைவனுடன் வெளியூர்க்குப் போய்விடுமாறு ஏற்பாடு செய்த தோழி, தலைவியை அழைத்துச் சென்று அவனிடத்தில் ஒப்படைத்துச் சில சொல் கூறினாள். தலைவியிடம் இன்று அவன் கொண்டுள்ள அன்பும், ஆர்வமும் என்றும் நின்று காக்கவேண்டும் என்பது அவளுடைய ஆவல். தலைவியிடம் அவள் காணும் நன்மை சிறிதே எனினும், அவனுடைய பெருந்தன்மையால் அதைப் போற்றி அவளை என்றும் வெறுக்காமல் காப்பாற்றுமாறு வேண்டிக் கொண்டாள்.

"பெரிய நன்மையை ஒருவர் செய்தால் அவரை விரும்பிப் போற்றாதவர் உண்டோ? அப்போது போற்றுவது எல்லார்க்கும் முடியும். இவள் ஒரு சிறு நன்மை உடையவளே ஆயினும், காதல் சிறந்து வெறுப்பு இல்லாமல் இவளை நீ காப்பாயாக. மலைநாடனே! இவள் உன்னை அல்லாமல் வேறு கதி இல்லாதவள்."

பெருநன்று ஆற்றின் பேணாரும் உளரே?
ஒருநன்று உடையள் ஆயினும் புரிமாண்டு
புலவி தீர அளிமதி......
நன்மலை நாட நின்அலது இலளே.*

---

*குறுந். 115. கபிலர்.

நன்று – நன்மை. ஆற்றின் – செய்தால். பேணார் – விரும்பிப் போற்றாதவர். உளரே – உளரோ. புரி – விருப்பம், காதல். மாண்டு – மாண்பு உற்று. புலவி – வெறுப்பு. அளி – காத்திடு. மதி– முன்னிலை அசை. நின் அலது – உன்னை அல்லாமல்.

52. எவ்வாறு துணிந்தாளோ?

தலைவி தலைவனுடன் புறப்பட்டு வெளியூர்க்குச் சென்ற பின், வீட்டில் அவளைக் காணாமல் எல்லாரும் தேடத் தொடங்கினர். அவள் எவ்வாறு அந்தக் கொடிய பாலை வழியில் போகத் துணிந்தாளோ எனச் செவிலித் தாய் வருந்தினள். தன் மகள் காதலனுடன் செல்லத் துணிந்தது பற்றியும், அந்த நீரற்ற வழியின் கொடுமை பற்றியும் எண்ணித் துன்புற்றாள்.

"பாலும் உண்ணாமல் பந்தையும் விரும்பாமல், விளையாடும் தோழியர்கூட்டத்தோடு மகிழ்ந்திருந்த மகள், இப்பொழுது இதை எளியது என்று உணர்ந்துவிட்டாளோ? உலர்ந்த கிளைகளை உடைய ஓமை மரத்தைக் குத்திய உயர்ந்த கொம்புகளை உடைய ஆண்யானை, வெப்பமான மலைப்பக்கத்தில் மேகம் முழங்கும் கடுமையான இடியோசையை உற்றுக் கேட்கும்படியான நீரற்ற வழியில் — மூங்கில்கள் பசுமையற்று உலர்ந்துபோகும் அரிய வழியில் — அந்தக் காதலனோடு போவதை எளியது என்று உணர்ந்தாளோ?"

பாலும் உண்ணாள் பந்துடன் மேவாள்
விளையாடு ஆயமொடு அயர்வோள் இனியே
எளிதுஎன உணர்ந்தனள் கொல்லோ முளிசினை
ஓமை குத்திய உயர்கோட்டு ஒருத்தல்
வேனில் குன்றத்து வெவ்வரைக் கவாஅன்
மழைமுழங்கு கடுங்குரல் ஓர்க்கும்
கழைதிரங்கு ஆரிடை அவனொடு செலவே.*

---

*குறுந். 396. கயமன்.

மேவாள் - மேவாமல் - விரும்பாமல். ஆயம் - தோழியர் கூட்டம். அயர்வோள் - மகிழ்ந்து விளையாடுகிறவள். முளி - உலர்ந்துகெட்ட. கோடு - கொம்பு. ஒருத்தல் - ஆண்யானை. கவான் - பக்கமலை. ஓர்க்கும் - உற்றுக் கேட்கும். திரங்கு - உலர்ந்த. ஆரிடை - அரிய இடம். செலவு - செல்லுதல்.

53. அதையும் குடிப்பாளோ?

தலைவி வீட்டை விட்டு வெளியேறித் தலைவனுடன் சென்றுவிட்ட பிறகு, செவிலித்தாய் பலவாறு நினைந்து கலங்கினாள். பாலைவனத்தில் செல்லும் தன் மகளுக்கு என்ன உணவு கிடைக்கும் என்று அலமந்தாள். பால் குடிக்கவும் தயங்கி வருந்தும் அருமை மகள் எதை எங்கே எவ்வாறு குடிக்கப்போகிருளோ என்று வருந்தினாள்.

" நிழல் இல்லாமல் அழிந்துபோன நீரற்ற அரிய வழியில், காதலன் காத்துவர, விரைந்து சென்று, நீர் சுருங்கிய சுனையில் காய்ந்து கொதித்து வெப்பம் ஏறிய கலங்கல் நீரைத் தவ்வென்று குடிப்பதற்கு அவளால் எவ்வாறு இயலுமோ? நான் ஏந்திச் செல்லும் பொன்கலத்தில் அழகிய பொரியோடு கலந்த பாலைப் பார்த்து, ' இவ்வளவு பாலா? இது மிகுதி ' என்று கூறி உண்ணாமல் மறுக்கும் என் மகளால் – தளிர்போன்ற மென்மை உடைய என் மகளால் – எவ்வாறு இயலுமோ?"

நிழல்ஆன்று அவிந்த நீர்இல் ஆரிடைக்
கழலோன் காப்பக் கடுகுபு போகி
அறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த
வெவ்வெங் கலுழி தவ்வெனக் குடிக்கிய
யாங்குவல் லுநள்கொல் தானே ஏந்திய
செம்பொன் புனைகலத்து அம்பொரிக் கலந்த
பாலும் பலஎன உண்ணாள்
கோல்அமை குறுந்தொடித் தளிர்அன் னோளே !*

---

*குறுந். 356. கயமன்

ஆன்று - இல்லாமல். கடுகுபு - கடுகி - விரைந்து. மறுகுபு — கெட்டு. வெவ்வெங் கலுழி—மிக வெப்பமான கலங்கல். தவ்வென — குடிக்கும்போது கேட்கும் ஒலி. குடிக்கிய—குடிக்க. பல—மிகுதி.

54. மழைபெய்து குளிர்க

தலைவி தலைவனுடன் வெளியூர்க்குப் புறப்பட்டுப் போய் விட்டதை அறிந்த செவிலி, அவள் போகும் பாலைவழியின் வெப்பத்தை எண்ணிக் கலங்கினாள். வெயில் கடுமையாகக் காய்தலையும், மரங்கள் இலைஇல்லாமல் நிழலற்றிருத்தலையும், வழியெல்லாம் அடியை வருத்தும் பரல்கற்கள் இருத்தலையும் நினைந்து வருந்தினாள். எதிர்பாராமல் மழை பெய்து, நிலத்தின் வெப்பத்தைத் தணித்து வழியின் கடுமையை மாற்றாதா என ஏங்கியது அந்தத் தாயின் உள்ளம்.

"சூரியன் காயாமல், மரங்கள் நிழல் தந்து, மலையிடத்துச் சிறு வழிகளில் மணல் மிகப் பரவி, குளிர்ந்த மழை பெய்வதாகுக. நம்மைத் துறந்து, வேல் ஏந்திய காதலனோடு என் மகள் போன பாலைவழியில் மழை பெய்வதாகுக!"

ஞாயிறு காயாது மரநிழல் பட்டு
மலைமுதல் சிறுநெறி மணல்மிகத் தாஅய்த்
தண்மழை தலையின் றாக நம்நீத்துச்
சுடர்வாய் நெடுவேல் காளையொடு
மடமா அரிவை போகிய சுரனே.*

---

*குறுந். 378. கயமனார்.

காயாது - காயாமல். மலைமுதல் - மலையில். நெறி - வழி. தாஅய்-பரவி. தலையின்று ஆக - பெய்தது ஆகுக. நீத்து - பிரிந்து. சுடர்வாய் - ஒலி பொருந்திய. மட - மடப்பம் உள்ள. மா-மாமை நிறம் உள்ள. அரிவை - பெண். போகிய - போன. சுரன்-பாலைவழி.

55. களைத்தேன் ; கண்டிலேன்

தலைவி தலைவனுடன் போய்விட்டாள் என்று அறிந்தவுடன், செவிலித்தாய் இங்கும் அங்கும் தேடலானாள். எங்கும் காண முடியாமற் போகவே, வெளியூர்க்குச் சென்றிருக்கலாம் என்று உணர்ந்து, ஊர்க்கு அப்பால் சென்று தேடப் புறப்பட்டாள். பல வழிகளிலும் சென்று அலைந்தாள். எதிரே யாரேனும் ஆணும் பெண்ணுமாய் வருவோரையும் தொலைவில் அவ்வாறே செல்வோரையும் காணும் போதெல்லாம், அவர்கள்தாமோ என்று ஆவலுடன் நோக்கி நோக்கி ஏமாற்றம் அடைந்தாள். கடைசியில் எங்கும் காண முடியாமல் சோர்ந்தாள்.

"என் கால்கள் நடந்து நடந்து களைத்துப் போய் நடை தடுமாறலாயின. கண்களோ, வருவார் போவாரைப் பார்த்துப் பார்த்து ஒளி இழந்துவிட்டன. அகன்ற பெரிய வானத்தில் உள்ள (விண்)மீன்களைக் காட்டிலும் மிகப் பலராக உள்ளனர் இந்த உலகத்தில் ஆணும் பெண்ணுமாக வாழும் பிறர்."

காலே பரிதப் பினவே ; கண்ணே
நோக்கி நோக்கி வாள்இழந் தனவே ;
அகல்இரு விசும்பின் மீனினும்
பலரே மன்றஇவ் வுலகத்துப் பிறரே.*

---

*குறுந். 44 வெள்ளிவீதியார்

பரி - நடை. வாள் - ஒளி. மீன் - நட்சத்திரம். மன்ற - திண்ணமாக.

56. இவர்கள் யாரோ?

திருமணத்திற்குரிய முயற்சியைத் தலைவியின் பெற்றோர் வரவேற்பவராக இல்லை. தலைவியோ வீட்டில் அடைபட்டுக் கிடந்து வருந்தும் துன்பத்தைத் தாங்க முடியவில்லை. இந் நிலையை உணர்ந்த தோழி அவளைத் தலைவனுடன் வெளியூர்க்கு அனுப்பிவிட ஏற்பாடு செய்தாள். அவ்வாறே இருவரும் வெளியே சென்றனர். போகும் வழியில் கண்டவர்கள், தலைவியின் காலில் உள்ள சிலம்பைக் கண்டு திருமணம் ஆகாதவர் என்று உணர்ந்தனர்; திருமணம் செய்துகொள்ளாமல் இவ்வாறு பாலைவழியில் நடந்து செல்வதைக் கண்டு யாரோ என எண்ணி வியந்தனர்.

"வில்லை ஏந்திய அந்த இளைஞன்கால்களில் கழல்கள் உள்ளன; தொடி அணிந்த அந்த இளமங்கையின் மெல்லிய அடிகளில் சிலம்புகள் உள்ளன. நல்லவராகத் தோன்றும் இவர்கள் யாரோ? பாவம்! இந்தப் பாலை வழியில் நடக்க முனைந்த இவர்கள் யாரோ?"

வில்லோன் காலன கழலே; தொடியோள்
மெல்லடி மேலவும் சிலம்பே; நல்லோர்
யார்கொல் அளியர் தாமே...
வேய்பயில் அழுவம் முன்னி யோரே.*

---

*குறுந். 7. பெரும்பதுமனார்.

காலன - காலில் அணியப்பட்டவை. அடிமேல - அடிமேல் அணியப்பட்டவை. அளியர்-இரங்கத்தக்கவர் என்று பொருள்படும் இரக்கக் குறிப்பு. வேய் - மூங்கில், பயில் - மிகுந்த. அழுவம் - பாலை. முன்னியோர் - கருதியவர்.

56. நல்ல ஊழ்!

தோழி செய்த ஏற்பாட்டின்படி தலைவன் தலைவியை அழைத்துக்கொண்டு வெளியூர்க்குப் போய்க்கொண்டிருந் தான். போகும் வழியில் பலர் அவர்களைப் பார்த்து ஐயுற் றனர்; பற்பலவாறு பேசிச் சென்றனர். அவர்களில் ஒருவர் தலைவன் தலைவியாகிய இருவரையும் இளமை முதல் கொண்டே அறிந்தவர். இப்போது இருவரும் காதலராய்க் காட்டுவழியே ஒன்றுபட்டுச் செல்வதைக் கண்டு ஊழ் வினையை வியந்தார்.

"இவன் இவளுடைய கூந்தலைப் பற்றி இழுக்கவும், இவள் இவனுடைய தலைமயிரை இழுத்து ஓடவும், அப் போது அன்பான செவிலித்தாயர் விலக்கவும் விலகாமல், அயலார் போல் சிறுசிறு சண்டை செய்துகொண் டிருப் பார்கள். ஊழே! உண்மையாகவே நீ நல்ல ஊழ்! இரட்டை யாய் அமைந்த மலர்மாலை போன்ற இவர்கள் மணந்து மகிழும் இயற்கையை இப்போது காட்டினாய்."

இவன்இவள் ஐம்பால் பற்றவும் இவள்இவன்
புன்தலை ஓரி வாங்குநள் பரியவும்
காதல் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது
ஏதில் சிறுசெரு உறுப மன்னோ;
நல்லைமன் றம்ம பாலே! மெல்லியல்
துணைமலர்ப் பிணையல் அன்னஇவர்
மணமகிழ் இயற்கை காட்டி யோயே.*

---

*குறுந். 229. மோதாசனார்.

ஐம்பால் - ஐந்துபகுதியாய் அமையும் மகளிர் கூந்தல். புன் - சிறிய, அழகற்ற. ஓரி - ஆணின் தலைமயிர். வாங்குநள் - வாங்கி - இழுத்து. பரிய - ஓட. ஏதில் - அயல்தன்மை உடைய. செரு - போர். பால் - ஊழ். பிணையல் - மாலை.

58. அன்னை வாழ்க !

திருமண முயற்சியை மேற்கொள்ளுமாறு தோழி தலைவனுக்குப் பலமுறை அறிவுறுத்தினாள். அவனும் பெற்றோரை அணுகிக் கூறி, பெண் கேட்குமாறு அனுப்பினான். தலைவனுடைய சுற்றத்தார் பெண் கேட்பதற்காகத் தலைவியின் வீட்டிற்கு வரப்போவதை அறிவித்தனர். தாய் இந்தச் செய்தியை அறிந்ததும் புதிய உறவுபோல் உணர்ந்து தோழியிடம் கூறினாள். தோழி தனக்குள் மிக மகிழ்ந்து தலைவிக்கு அதை அறிவித்தாள்; இந்த நல்வரவை அறிவித்ததற்காக மனம் உவந்து தாயை வாழ்த்தினாள்.

“பெறுவதற்கு அரிய அமிழ்தமே உணவாகப் புகழ் மிக்க தேவருலகத்தைப் பெறுவாளாக நம் அன்னை! நம் தலைவனுடைய சுற்றத்தார் பெண் கேட்க வருவதாகக் கூறினாளே.”

அரும்பெறல் அமிழ்தம் ஆர்பதம் ஆகப்
பெரும்பெயர் உலகம் பெறீஇயரோ அன்னை...
ஓங்குமலை நாடனை வரும்என் றோளே.*

---

*குறுந். 83. வெண்பூதன்.

அரும் பெறல் - பெறல் அரிய - பெறுதற்கு அருமையான. ஆர் பதம் - உண்ணும் உணவு. பெயர் - புகழ். உலகம் - துறக்கம். பெறீஇயர் - பெறுக. ஓங்கு - உயர்ந்த.

59. அன்னையின் அரிய உதவி

தலைவனுடைய சுற்றத்தார் தலைவியின் வீட்டுக்கு வந்து பெண் கேட்டுக்கொண்டிருந்தனர்; தலைவியின் சுற்றத்தாரும் அதற்கு இசையும் நிலையில் இருந்தனர். இது இவ்வாறு வீட்டின் ஒருபுறத்தில் நிகழ, மற்றொரு புறத்தில் தோழி தலைவியுடன் இருந்து பேசிக்கொண்டிருந்தாள். "இதுவரையில் தலைவனுடைய பிரிவைத் தாங்கிப் பெற்றோருக்கு அடங்கி நீ தனியே இங்கே இருந்தாய். உன் பொறுமையே பொறுமை" என்று தலைவியைப் பாராட்டுவது போல் கூறினாள். அதற்குத் தலைவி மறுமொழி கூறிய போது, தன் ஆற்றல் காரணம் அன்று என்றும், தலைவனுடைய மலையிலிருந்து வந்து சேர்ந்த ஒரு காந்தளே காரணம் என்றும், தலைவனுடைய நினைவாக அதைத் தழுவிப் போற்றிக்கொண்டு துயரத்தைத் தாங்கியிருக்க முடிந்தது என்றும் கூறினாள்.

"கேள், தோழி! நம் தாய்க்குக் கைம்மாறாகக் கொடுக்கத் தேவருலகமும் சிறியதே. காதலருடைய மலையில் மாலையில் மழை பெய்ததால் மணம் கமழும் வெள்ளத்தில் காலையில் இங்கு வந்த கிழங்கோடு கூடிய முழுக் காந்தளின் மெல்லிய இலை குழையும்படி நான் தழுவியதையும் அதை வீட்டுக்குக் கொண்டுபோய் நட்டதையும் தாய் கடிந்து விலக்கவில்லை."

அம்ம வாழி தோழி! அன்னைக்கு
உயர்நிலை உலகமும் சிறிதால்; அவர்மலை
மாலைப் பெய்த மணம்கமழ் உந்தியொடு
காலை வந்த காந்தள் முழுமுதல்
மெல்லிலை குழைய முயங்கலும்
இல்உய்த்து நடுதலும் கடியா தோளே.*

---

* குறுந். 361. கபிலர்.
உய்த்து – செலுத்தி – கொண்டுபோய்.

60. மகள்முகம் மகிழ்ந்தது

திருமணம் செய்துகொண்டு தலைவனும் தலைவியும் இன்பமாக இல்லறம் நடத்திவந்தனர். அப்போது மகளைப் பார்த்து வருவதற்காகச் செவிலித்தாய் அவர்களின் வீட்டுக்குச் சென்றாள். சென்று திரும்பிவந்தபின் அவர்கள் இருவரும் அன்பாக வாழ்வதைப் பற்றியும், கணவன் இனிது உண்பதற்காக அவள் சமைக்கும் திறத்தைப் பற்றியும், அவள் சமைத்து இட்ட உணவை அவன் மகிழ்ந்து உண்பதைப் பற்றியும் பெற்ற தாயிடம் எடுத்துரைத்தாள்.

“ முற்றிய தயிரைப் பிசைந்த மெல்லிய விரல்களை ஆடையில் துடைத்து அதை அப்படியே உடுத்துக் கொண்டு, குவளைமலர் போன்ற கண்களில் தாளிப்புப் புகை கமழும்படியாகத் தானே துழாவிச் சமைத்த இனிய புளிக் குழம்பு நன்றாக இருக்கின்றது என்று கணவன் உண்பதால், நம் மகளின் முகம் நுட்பமாக மகிழ்ச்சி பெற்றது.”

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதுஎனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.*

---

*குறுந். 157. கூடலூர் கிழார்.

முளி – புளித்து முற்றிப்போன. காந்தள் – காந்தள் மலர் போன்ற. கழுவுறு - கையைத் துடைத்த. கலிங்கம் – ஆடை. கழுவாது - துவைக்காமல். உடீஇ - உடுத்து. உண்கண் - மை தீட்டிய கண். குய் - தாளிப்பு. துழந்து - துழாவி. அட்ட - சமைத்த. தீ - இனிய. பாகர் - குழம்பு. நுண்ணிதின் - நுண்மையாக. மகிழ்ந்தன்று - மகிழ்ந்தது. ஒள்நுதல் - ஒளிபொருந்திய நெற்றியை உடைய. முகன் - முகம்.

61. எங்கும் தங்காத தேர்

தலைவனும் தலைவியும் மணம் செய்துகொண்டு இல்லறம் நடத்தும்போது செவிலித்தாய் அவ்வூருக்குச் சென்று அவர்களின் அன்பான வாழ்க்கையைக் கண்டு வந்தாள். வந்தவுடன் தலைவியின் தாய் கேட்டாள்; தலைவன் தலைவியைத் தனியே விட்டுப் பிரியாமல் துணையாக இருந்து காப்பாற்றுகிறானா என்று கேட்டாள். அரசன் ஆணையால் பிரிய நேரும் போதும் அவன் விரைந்து திரும்பிவிடுகிறான் என்றும், அவ்வளவு பேரன்பு கொண்டு வாழ்கிறான் என்றும் செவிலி கூறினாள்.

"நம் மகள் அந்தச் சிறிய ஊரில் இனிது வாழ்கிறாள். அவளுடைய கணவன் வேறு ஊர்க்கு அரசன் அனுப்பும் கடமையை மேற்கொண்டு சென்ற போதிலும் அவனுடைய தேர் அந்த வெளியூரில் தங்கிவருவதில்லை."

சீறூ ரோளே மடந்தை ; வேறுஊர்
வேந்துவிடு தொழிலொடு செலினும்
சேந்துவரல் அறியாது செம்மல் தேரே.*

---

*குறுந். 242. குழற்றத்தன்.

சீறூரோள் – சின்ன ஊரில் உள்ளவள். சேந்து – தங்கி. வரல் அறியாது – வராது. செம்மல் – தலைவன்.

62. மிகப் பொறுத்தீர் !

தலைவி தலைவனுடன் வாழ்ந்து இல்லறம் நடத்தி வந்தாள். அவளைக் காண்பதற்காகத் தோழி சென்றாள். அவர்களின் அன்பான வாழ்க்கையைக் கண்டு மகிழ்ந்தாள். தலைவன் எந்நாளும் அவளைப் பிரியாமல் உடனிருத்தலைக் கண்டபோது, தோழியின் உள்ளத்தில் பழைய நினைவுகள் வந்தன. இன்று இவ்வாறு பிரியாமல் வாழும் தலைவன், அன்று களவொழுக்கத்தில் எவ்வாறு பிரிந்து பிரிந்து துன்பத்தைத் தாங்கியிருந்தானோ என்று எண்ணி வியந்தாள். தலைவனிடமே தன் வியப்பைத் தெரிவித்தாள்.

"ஆம்பல் பறிப்பவர்கள் நீருள் நின்றபடியே இருந்தும், நீர் வேட்கை அடைவதுபோல், இவளுடைய மார்பிடையே துயிலும் நிலையிலிருந்தும் இன்னும் நடுங்குகின்றீர். தொழுது காணும் பிறை என்றோ ஒருநாள் அரிதில் காணப்படுவது போல் யாம் உமக்குக் காண்பதற்கு அருமையாக இருந்த அந்தக் களவுக்காலத்தில், பிரிவாற்றாத் துன்பத்தை நீர் மிகவும் பொறுத்திருந்தீர் என்று தெரிகிறது. அதை நினைந்து யான் வருந்துகிறேன்."

ஆம்பல் குறுநர் நீர்வேட் டாங்குஇவள்
இடைமுலைக் கிடந்தும் நடுங்க லானீர்
தொழுதுகாண் பிறையின் தோன்றி யாம்நுமக்கு
அரியம் ஆகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோ யானே.*

---

*குறுந். 178. நெடும்பல்லியத்தை.

குறுநர் - பறிப்பவர். வேட்டாங்கு - வேட்கை கொண்டாற் போல். பிறையின் - பிறை போல். அரியம் - அருமை உடையேம். காலை - காலத்தில். பெரிய - பெரிதும் - மிகவும். நோன்றனிர் - பொறுத்தீர். நோகு - வருந்துகிறேன்.

63. தேரைத் தடுத்த கண்ணீர்

தலைவன் தலைவியுடன் இல்லறம் நடத்திவந்த காலத்தில் பொருள் இல்லாத குறை அவனுடைய சுற்றத்தாரை மிக வாட்டியது. சுற்றத்தாரின் வறுமையைத் தீர்ப்பதற்காக வெளிநாட்டுக்குச் சென்று பொருள் தேடி வர வேண்டும் எனத் துணிந்தான். வடநாட்டுக்குப் புறப்பட ஏற்பாடு செய்தான். கூறியவுடனே தலைவி கண் கலங்கினாள். அவளுடைய கண்ணீரைக் கண்ட தலைவன், இன்னும் சிலநாள் கழித்துச் செல்வோம் எனத் தன் பயணத்தை ஒத்திவைத்தான். தன் தேர் அவளுடைய கண்ணீரால் புறப்படாமல் நின்றுவிட்டதை எண்ணி வியந்தான்.

"கடமையை நலமுற முடித்துத் திரும்பிவருவேன், அதுவரையில் பொறுத்திருக்க இயலுமோ என நான் சொல்லாததற்கு முன், நிறுத்த நிற்காதனவாய் நீர் குறுக்கிட்டு அழுதல் ஓயாமல், தேரை விலக்கித் தடுத்துவிட்டன அவளுடைய கண்கள்."

வினைநலம் படீஇ வருதும் அவ்வரைத்
தாங்கல் ஒல்லுமோ பூங்குழை யோய்எனச்
சொல்லா முன்னர் நில்லா ஆகி
நீர்விலங்கு அழுதல் ஆனா
*தேர்விலங் கினவால் தெரிவை கண்ணே.**

---

*குறுந். 256.

வினை - தொழில். படீஇ - ஏற்பட்டு. வருதும் - திரும்பி வருவோம். அவ்வரை - அதுவரையில். ஒல்லுமோ - இயலுமோ. பூங்குழையோய் - அழகிய குழை அணிந்தவளே. விலங்கு - விலங்கி - குறுக்கிட்டு. ஆனா - ஆனாது - ஓயாமல். விலங்கினவால் - விலக்கின ; ஆல் - அசை. தெரிவை - பெண் - துணைவி.

64. அந்த அறிவு வேண்டா

சுற்றத்தாரின் வறுமையைக் களைவதற்காக வட நாட்டுக்குச் சென்று பொருள் தேடிவர முனைந்த தலைவன் தோழியிடம் தெரிவித்தான். அவள் தலைவிக்கு உணர்த்தினாள்; அதுவே அறிவுடையோர் கடமை என்றும் தலைவன் சார்பாக எடுத்துரைத்தாள். தலைவி அதற்கு இசையவில்லை; தன்பால் அன்பு குறைந்ததால்தான் இப்படிப் பிரியத் துணிய முடியும் என்றாள்; பொருளுக்காகப் பிரிதல் அறிவுடைமை என்றால், அத்தகைய அறிவு இல்லாமல் அறியாமையோடு வாழ்தலே நன்று என்றாள்.

"அருளையும் அன்பையும் நீக்கி வாழ்க்கைத் துணையையும் விட்டுப் பொருளுக்காகப் பிரிகின்றவர் அறிவுடையவர் என்றால், அத்தகைய அறிஞர் அறிஞராகவே இருக்கட்டும்; தோழி! அவரைப் பிரியும் நாம் அறிவிலிகளாகவே இருப்போம்."

அருளும் அன்பும் நீக்கித் துணை துறந்து
பொருள்வயின் பிரிவோர் உரவோர் ஆயின்
உரவோர் உரவோர் ஆக;
மடவம் ஆக மடந்தை நாமே.*

---

*குறுந். 20. கோப்பெருஞ் சோழன்.

உரவோர் – அறிவுடையோர். மடவம் – அறியாமை உடையேம்.

65. அவரே உரைத்தார்

தலைவன் சுற்றத்தாரின் வறுமைத் துன்பத்தைத் தீர்ப்பதற்காகப் பொருள்தேடச் செல்வார் என்று தலைவி எவ்வாறோ அறிந்தாள். மிகக் கலங்கினாள். அவளைத் தோழி தேற்ற முயன்றாள். "அவர் பொருள் தேடும் நோக்கம் உடையவர், ஆண் மக்களுக்குக் கடமையே உயிர் என்று ஒரு காலத்தில் என்னிடம் கூறியிருக்கின்றார். கடமையை மறக்கமாட்டார்" என்று தலைவி அவளுக்கு எடுத்துரைத்து வருந்தினாள். இவ்வாறு பிரிவை நினைத்து அவள் கலங்கியதைக் கண்ட தோழிக்கு முன்னொரு முறை தலைவன் கூறிய மற்றொரு கருத்து நினைவுக்கு வந்தது. மனைவியர்க்குக் கணவரே உயிர் என்று முன் ஒருமுறை தலைவன் சொன்னதை நினைவூட்டி, இதை உணர்ந்த தலைவன் பிரியமாட்டான் என்று கூறித் தேற்ற முயன்றாள்.

"கடமையே ஆண்மக்களுக்கு உயிர்; வீட்டிலிருந்து இல்லறம் நடத்தி வாழும் மகளிர்க்கு ஆண்மக்களே உயிர். இதை நமக்குச் சொன்னவரும் அவரே. ஆகையால் அழாதே தோழி. அவர் தம் பயணத்தைக் கைவிடுவார்."

வினையே ஆடவர்க்கு உயிரே; வாள்நுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்என
நமக்குஉரைத் தோரும் தாமே;
அழாஅல் தோழி அழுங்குவர் செலவே.*

---

* குறுந். 135. பாலை பாடிய பெருங்கடுங்கோ.

வினை – தொழில் – கடமை. ஆடவர்க்கு – ஆண்களுக்கு. அழாஅல் – அழாதே. அழுங்குவர் – தவிப்பார். செலவு – பயணம்.

66. வேடிக்கையாய்ச் சொன்னேன் !

தலைவன் பொருள்தேடப் பிரிந்தபோது தலைவி வருந்தாமலிருக்குமாறு தோழி பலவாறு கூறி ஆற்றுவிக்க முயன்றாள். அதனால் தலைவியின் துயரம் குறையவில்லை. அவளுடைய மனம் தலைவனுடைய பிரிவையே திரும்பத் திரும்ப நினைந்தது. முன் சில முறை அவன் பிரிவதாகச் சொல்லிச் சொல்லிப் பிரியாமல் நின்றுவிட்டான். இப்போதும் அவ்வாறே பொய்யாகச் சொல்லுவதாகவும், உண்மையில் பிரிய மாட்டான் என்றும் தலைவி எண்ணிக்கொண்டு, வேடிக்கையாக விடை கொடுத்தாளாம். பிரிவு உண்மையாக நிகழ்ந்துவிடவே, துயரம் தாங்கமுடியாதது ஆயிற்று என்றாள்.

"செல்வேன் செல்வேன் என்று சில முறை சொன்னதால், முன்போல் பொய்யாகக் கூறும் பயணம் என்று கருதி, வேடிக்கைப் பேச்சாக, என்னிடமிருந்து நிலையாகப் பிரிக என்றேன். அந்தோ! பற்றுக்கோடாகிய தலைவன் இப்போது பிரிந்து எங்கே உள்ளானோ? அதை நினைந்து, என் மார்பு கண்ணீரால் நிறைந்து நாரை மேயும் பெருங் குளம் போல் ஆயிற்று."

சேறும் சேறும் என்றலின் பண்டைத்தன்
மாயச் செலவாச் செத்து மருங்குஅற்று
மன்னிக் கழிகஎன் றேனே; அன்னோ!
ஆசுஆகு எந்தை யாண்டுஉளன் கொல்லோ?
கருங்கால் வெண்குருகு மேயும்
பெருங்குளம் ஆயிற்றுஎன் இடைமுலை நிறைந்தே.*

---

*குறுந். 325. நன்னாகையார்.

சேறும் – செல்லுதும் – செல்வோம். செலவுஆ – செலவு ஆக – பயணமாக. செத்து – கருதி. மன்னி – நிலைபெற. கழிக – பிரிக. அன்னோ – அந்தோ. ஆசு – பற்றுக்கோடு.

67. இருபேராண்மை

பொருள் தேட வேண்டும் என்று தலைவன் பிரிய முயன்றபோது தலைவி நம்பவில்லை; தன்னை விட்டுப் பிரிந்து வருந்தச் செய்யும் துணிவு அவருக்கு இருக்காது என்றும், அதனால் பிரிய மாட்டார் என்றும் அவள் எண்ணியிருந்தாள். தன் பிரிவை அவளுக்கு எப்படி முடிவாக அறிவிப்பது. என்று எண்ணித் தலைவனும் தயங்கினான். சொன்னால் அவள் இசைய மாட்டாள் என்று சொல்லாமலே இருந்து வந்தான. இறுதியில் அவன் பிரிந்தான்; அவள் கலங்கினாள். இருவரும ஒருவரிடம் ஒருவர் மறைத்து நடந்த உறுதி துன்பத்திற்குக் காரணமானதை நினைந்து நொந்தாள் தலைவி.

"அவர் பிரிந்து செல்லமாட்டார் என்று யான் உறுதியுடன் தடுக்காமல் இருந்துவிட்டேன். சொன்னால் அவள் உடன்படமாட்டாள் என்று அவர் சொல்லாமல் சோர்ந்து இருந்துவிட்டார். இடையே, இருவகைப் பெரிய உறுதியும் செய்த போரினால், நல்ல பாம்பு கடித்தாற்போல், என் துன்ப நெஞ்சம் மிக வருந்துகின்றது."

செல்வார் அல்லர்என்று யான்இகழ்ந் தனனே;
ஒல்வாள் அல்லள்என்று அவர்இகழ்ந் தனரே;
ஆயிடை, இருபே ராண்மை செய்த பூசல்
நல்லராக் கதுவி யாங்குஎன்
அல்லல் நெஞ்சம் அலமலக்கு உறுமே.*

---

*குறுந். 43. அவ்வையார்.

இகழ்ந்தனன் - கடமையைப் புறக்கணித்து வாளா இருந்தேன். ஒல்வாள் - இசைவாள். ஆண்மை - உறுதி. நல்அரா - நல்ல பாம்பு. கதுவியாங்கு - கடித்தாற் போல். அலமலக்கு - கலங்கி வருந்தல்.

68. யானையின் அன்பு

தலைவன் பொருள் தேடப் பிரிந்தபின் பிரிவாற்றுமல் தலைவி வருந்தினுள். தலைவன் விரைவில் திரும்பிவரக் கூடும் என்று சொல்லியாவது அவளை ஆற்றுவிக்க வேண்டும் எனத் தோழி முயன்றுள். தலைவன் சென்ற வழியில் ஆண் யானை தன் துணைக்காகப் பரிந்து பசிதீர்க்க முயல்வதாகக் குறிப்பிட்டு, விலங்குகள் இவ்வாறு அன்புடன் பிரியாமல் வாழ்க்கை நடத்துவதைத் தலைவர் காண்பார் என்றும், உடனே தம் இல்லறக் கடமையை நினைந்து திரும்பிவருவார் என்றும் கூறினுள்.

" உன்னிடம் அன்பு மிக உடையவராய்த் திரும்பிவந்து அருள் செய்தாலும் செய்வார். பெண் யானையின் பசியைப் போக்குவதற்காகப் பெரிய கையை உடைய ஆண்யானை மெல்லிய கிளைகளை உடைய யாமரத்தைப் பட்டை உரித்துக் கொடுக்கும் அன்பான காட்சிகளை உடையவை, தோழி, அவர் சென்ற வழிகள்."

நசைபெரிது உடையர் நல்கலும் நல்குவர் ;
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழிஅவர் சென்ற ஆறே.*

---

*குறுந். 37. பாலை பாடிய பெருங்கடுங்கோ.

நசை - விருப்பம் - அன்பு. நல்கல் - அருளல். களைஇய - களைவதற்காக, போக்குவதற்காக. வேழம் - ஆண்யானை. யாஅம் - ஒருவகை மரம். பொளிக்கும் - பட்டை உரிக்கும்.

69. பொல்லாத வழி

பொருள் காரணமாகத் தலைவன் பிரிவதற்குமுன் தக்க காரணங்கள் சொல்லிப் பிரிந்தான். ஆகவே தலைவி இசைந்து விடை கொடுத்தாள். ஆனால், பிரிந்த பின், அந்தப் பாலை வழியின் கொடுமையைப் பிறர் சொல்லக் கேட்டபோது கலங்கினாள். தலைவன் பிரிந்ததற்காக வருந்தவில்லை என்றும், வழியின் கொடுமைக்காகவே துயரப்படுவதாகவும் தோழியிடம் கூறினாள்.

"உள்ள செல்வத்தைச் செலவழிப்பவர் வாழ்பவராக மதிக்கப்படமாட்டார்; வறியவரின் வாழ்க்கை பிச்சை எடுத்தலைவிட இழிவானது; இவ்வாறு சொல்லிய உறுதியைத் தெளியுமாறு காட்டிப் பிரிந்து சென்றார் அவர்; தோழி! எந்நாளும் எமன் போன்ற கொலைவேல் ஏந்திய மறக் கூட்டத்தார் வழியிலே இருந்து தங்கி வழிப்போக்கரைக் கொல்ல, அதனால் கிடைக்கும் புலாலைப் பருந்துகள் எதிர்பார்த்துக் காத்திருக்கும் நீண்ட பழைய இடங்களை உடைய நீர் இல்லாத வழிகளில் சென்றாரே!"

உள்ளது சிதைப்போர் உளர்எனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவுஎனச்
சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்
சென்றனர் வாழி தோழி! என்றும்
கூற்றத் தன்ன கொலைவேல் மறவர்
ஆற்றிருந்து அல்கி வழங்குநர்ச் செகுத்த
படுமுடை பருந்துபார்த் திருக்கும்
நெடுமூ திடைய நீர்இல் ஆறே.*

---

*குறுந். 283. பாலை பாடிய பெருங்கடுங்கோ.

ஆற்று - வழியில். அல்கி - தங்கி. வழங்குநர் - வழியில் போவாரை. செகுத்த - கொன்ற. முடை - புலால் (நாற்றம்). மூதிடைய - முதிய (பழைய) இடங்களை உடைய.

70. வீண் ஆரவாரம்

தலைவன் பொருள் தேடிவர வேண்டும் என்று வட நாட்டுக்குச் சென்று நெடுங்காலம் ஆகியும் இன்னும் திரும்பி வரவில்லை. அந்த வழியில் அவருக்கு ஏதேனும் இடையூறு நேர்ந்திருக்குமோ, எதையும் அறிவதற்கு இயலவில்லையே எனத் தலைவியின் நெஞ்சம் மிக மிகக் கலங்கியது. தோழி அவளுடைய துயரத்தைத் தணிப்பதற்கு முயன்று 'நீ இவ் வாறு வருந்துவது தகாது' என்றாள். அதற்கு மறுமொழி யாகத் தலைவி பின்வருமாறு கூறினாள்.

"எறும்புவளைகள் போன்ற சிறிய பல சுனைகளை உடைய (உலைக்களத்துக் கல் போன்ற) பாறையின்மேல் ஏறி எயினர் தம் அம்புகளைத் தீட்டுகின்ற கவர்த்த வழிகளை உடையது அவர் சென்ற நெறி என்று கூறுகின்றனர். அதைப் பற்றி வருத்தம் கொள்ளாமல், அன்பில்லாத சொற்களைச் சொல்லி என்னைக் கடிந்துரைக்கின்றது இந்த ஆரவாரமான ஊர்."

எறும்பி அளையின் குறும்பல் சுனைய
உலைக்கல் அன்ன பாறை ஏறிக்
கொடுவில் எயினர் பகழி மாய்க்கும்
கவலைத்து என்பஅவர் சென்ற ஆறே;
அதுமற்று அவலம் கொள்ளாது
நொதுமல் கழறும்இவ் வழுங்கல் ஊரே.*

---

*குறுந். 12. ஓதலாந்தையார்.

எறும்பி - எறும்பு. அளையின் — வளை போன்ற. பல் — பல. சுனைய — சுனைகளை உடைய. உலைக்கல் — உலைக்களத்துப் பட்டடை. கொடுவில் — வளைந்த வில்லை உடைய. எயினர் — வேடர். பகழி — அம்பு. மாய்க்கும் — கூர்மைப்படுத்தும். கவலைத்து — கவலை உடையது — பலவாகப் பிரியும் வழிகளை உடையது.

71. பசலை அழித்தது

பொருள்தேடப் பிரிந்த தலைவனை நினைந்து நினைந்து மெலிந்தாள் தலைவி. அவளுடைய கவர்ச்சியான மாமை நிறம் கெட்டுப் பசலை வந்து அழகைப் பாழாக்கியது. தோழி அதைக் கண்டு வருந்தினாள்; தலைவன் திரும்பிவரும் வரையில் இவள் எவ்வாறு ஆற்றியிருக்கப் போகின்றாளோ என வருந்தினாள். அப்போது தலைவி அவளை நோக்கித் தன் அழகு வீணே அழிந்ததைக் குறித்துக் கூறினாள்; தான் பொறுத்திருந்தாலும் தன் அழகு மாறியதே என்றாள்.

"கன்றும் குடிக்காமல், கலத்திலும் விழாமல், நல்ல பசுவின்பால் நிலத்தில் சிந்திவிட்டாற்போல், எனக்கும் உரியதாகாமல் என் தலைவனுக்கும் உதவாமல் பசலை உண்ண விரும்புகின்றது என் மாமை நிற அழகை."

கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்ஆன் தீம்பால் நிலத்துஉக் காஅங்கு
எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குல்என் மாமைக் கவினே.*

---

*குறுந். 27. கொல்லன் அழிசி.

உண்ணாது – உண்ணாமல். கலம் – பால் கறக்கும் குடம். ஆன் – பசு. தீ – இனிய. உக்காங்கு – உக்காற்போல், சிந்தினாற்போல். என்னை – என் தலைவன் – கணவன். பசலை – துயரத்தால் குருதி குறைந்து அழகு கெட்டுப் பரவும் மஞ்சள் நிறம். உணீஇயர் – உண்ண. வேண்டும் – விரும்பும். திதலை – தேமல். அல்குல் – அரை (உடைய). கவின் – அழகு. மாமை - மாந்தளிர் நிறம்.

72. பாழடைந்த ஊர்

பிரிந்த தலைவனை நினைந்து நினைந்து துயருற்ருள் தலைவி. தலைவிக்கே தன் நிலைமை நன்கு தெரிந்தது. தலைவன் தன்னுடன் இருந்தபோது தன் உள்ளத்தில் இருந்த மகிழ்ச்சியை நினைந்தாள்; இப்போது அவன் பிரிவால் தன் உள்ளம் சோர்ந்து வருந்தும் துயரையும் நினைந்தாள். சீரும் சிறப்புமாக விளங்கிய ஓர் அழகிய ஊர், மக்கள் கலகலத்து வெளியேறிவிட்டபிறகு பாழடைந்துபோன காட்சி அவளுடைய நினைவுக்கு வந்தது. தன் நிலையை அந்தப் பாழடைந்த ஊரின் நிலையோடு ஒப்பிட்டுக் கூறினாள்.

"காதலர் அருகே உள்ளபோது மிகக் களித்துத் திருவிழாவை மேற்கொண்ட ஊர்போல் மகிழ்ந்திருப்பேன். பாலைநிலத்தின் அருகே அமைந்த அழகிய சிறிய ஊரில் மக்கள் வெளியேறிவிட்டதனால் அணில் கவலையற்று விளையாடுகின்ற முற்றத்தை உடைய பாழடைந்த தனி வீடுபோல் சீரழிந்து வருந்துவேன் தோழி, அவர் பிரிந்தபோது."

காதலர் உழையர் ஆகப் பெரிதுஉவந்து
சாறுகொள் ஊரின் புகல்வேன் மன்ற;
அத்தம் நண்ணிய அம்குடிச் சீறூர்
மக்கள் போகிய அணில்ஆடு முன்றில்
புலப்பில் போலப் புல்லென்று
அலப்பென் தோழிஅவர் அகன்ற ஞான்றே.*

---

*குறுந். 41. அணிலாடு முன்றிலார்.

உவமையின் சிறப்பால் புலவர்க்குப் பெயர் அமைந்தது. —

உழையர் — பக்கத்தார். சாறு — திருவிழா. புகல்வேன் — விரும்பி மகிழ்வேன். மன்ற — திண்ணமாக. அத்தம் — பாலைநிலம். முன்றில் — வீட்டின் முன்புறம் — முற்றம். புலப்பில் — புலம்பு இல், தனித்த வீடு. புல்லென்று — பொலிவழிந்து. அலப்பென் — வருந்துவேன். ஞான்று — பொழுது.

73. அவரும் அறிவாரோ ?

பொருள் தேடப் பிரிந்த தலைவன் பிரிவதற்குமுன் தன் கூந்தலையும் தோளையும் தடவி அன்பு காட்டி விடைபெற்றதை நினைந்தாள் தலைவி. இவ்வாறு அன்புடையவராய்ப் பிரிந்த காதலன் இப்போது தன்னை மறந்திருப்பதாகக் கலங்கினாள். நள்ளிரவில் யாவரும் உறங்கும் அமைதியான நேரத்தில் தான் ஒருத்தி மட்டும் உறங்காமல் துயருறுவதை அவர் அறிந்தால் விரைந்து மீளக்கூடும் என்று ஏங்கினாள். தன்னைப் போல் நள்ளிரவில் தனித்துவருந்தும் நிலை தலைவனுக்கும் உண்டோ எனத் தோழியைக் கேட்டாள்.

“ கூந்தலையும் தோளையும் தடவி, என் வளைகள் நெகிழுமாறு பொருள்தேடப் பிரிந்த தலைவர் இதனை அறிவாரோ, தோழி! புள்ளிகளும் வரிகளும் பொருந்திய கடுஞ்சினம் உடைய பாம்பின் தலை துண்டாகி விழுமாறு வலிய இடி முழங்குகின்ற இருள்மிக்க நள்ளிரவில் பசுத்தொழுவத்தில் நல்ல எருது இயங்கும்போதெல்லாம் ஒலிக்கின்ற ஒற்றை மணியின் குரலை அவர் அறிவாரோ ?”

நெறியிருங் கதுப்பொடு பெருந்தோள் நீவிச்
செறிவளை நெகிழச் செய்பொருட்கு அகன்றோர்
அறிவர்கொல் வாழி தோழி ! பொறிவரி
வெஞ்சின அரவின் பைந்தலை துமிய
உரவுரும் உரறும் அரையிருள் நடுநாள்
நல்லேறு இயங்குதோறு இயம்பும்
பல்ஆன் தொழுவத்து ஒருமணிக் குரலே.*

---

*குறுந். 190. பூதம்புல்லன்.

நெறி - நெறிப்பு உள்ள. இரு - கரிய. கதுப்பு - கூந்தல். செறி - இறுகியிருந்த. பொறி - புள்ளி. பை - பசிய, அழகான. துமிய - துண்டுபட்டு விழுமாறு. உர - வலிய. உரும் - இடி.

74. பிறர்க்கும் கேட்குமோ?

வடநாட்டுக்குச் சென்ற தலைவனை நினைந்து வருந்தினாள் தலைவி. தோழி பலவாறு கூறி அவளை ஆற்றுவிக்க முயன்றாள். தலைவியோ பகற்பொழுதில் ஒருவாறு ஆற்றியிருந்தாலும் இரவில் துயருற்றாள். நள்ளிரவில் எல்லோரும் அமைதியாக உறங்கும்போது தான் ஒருத்திமட்டும் உறங்காமல் கலங்குதல் அவளுடைய துயரத்தை மிகுதிப்படுத்தியது. அத்தகைய தனித்துன்பத்தைப் போக்கிக்கொள்ள வழி இல்லையே என்று ஏங்கித் தோழியிடம் கூறினாள்.

"பொறுக்க முடியாத துன்பத்தோடு தனிமைத் துயர் வருத்துதலால் கலங்கி வேறு யாரேனும் என்னைப் போல் இதைக் கேட்பவர் உள்ளனரோ? மழைத்துளி பெருகி வாடைக்காற்று வீசுகின்ற கூதிர்காலத்து நள்ளிரவில் ஈ ஒலிக்கும்போதெல்லாம் மாடு தலை அசைக்க அதனால் ஒலிக்கின்ற கொடிய மணியின் ஒலியைக் கேட்பவர் பிறரும் உள்ளனரோ?"

பொறையரு நோயொடு புலம்புஅலைக் கலங்கிப்
பிறரும் கேட்குநர் உளர்கொல் உறைசிறந்து
ஊதை தூற்றும் கூதிர் யாமத்து
ஆன்நுளம்பு உலம்புதொறு உளம்பும்
நாநவில் கொடுமணி நல்கூர் குரலே.*

---

*குறுந். 87. வெண்கொற்றன்.

பொறைஅரு - பொறுத்தற்கு அரிய. நோய் - துன்பம். புலம்பு - தனிமை. அலை - வருத்தம். உறை - மழைத்துளி. ஊதை - வாடைக்காற்று. நுளம்பு - ஈ. உலம்பு தொறு - ஒலிக்கும்போதெல்லாம். உளம்பும் - அசையும். நா நவில் - நாவால் ஒலிக்கின்ற. நல்கூர் - வளம் இல்லாத, குறைந்த.

75. எப்படியும் காண்போம்

பொருள் காரணமாகப் பிரிந்த தலைவனை நினைந்து தலைவி மிக வருந்திக் கவலையுற்றாள். தலைவன் எங்கு எந் நிலையில் உள்ளானோ என்றும், மீண்டும் அவனைக் காண இயலுமோ என்றும் பெரிதும் துயருற்றாள். அவளைத் தேற்றுவதற்காகத் தோழி பெரு முயற்சி செய்தாள். இறுதியாக, தலைவன் எங்கிருந்தாலும் தேடிக் கொணர முடியும் என உறுதி கூறினாள். தலைவன் அகழ்ந்தும் பறந்தும் செல்லவில்லை, கப்பலிலும் செல்லவில்லை யாகையால், தேடிக் காண்பது எளிது என்று கூறினாள்.

" நிலத்தைத் தோண்டி உள்ளே புக முடியாது; வானத்தில் ஏறிப் பறக்கவும் முடியாது; குறுக்கிடும் பெரிய கடலில் காலால் நடந்து செல்லவும் முடியாது. ஆகையால் நாடு நாடாக ஊர் ஊராகக் குடிவழி குடிவழியாக நாம் ஆராய்ந்து தேடினால் நம் காதலர் அகப்படாமல் தப்பவும் முடியுமோ?"

நிலம்தொட்டுப் புகாஅர்; வானம் ஏறார்;
விலங்குஇரு முந்நீர் காலின் செல்லார்;
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரின்
கெடுநரும் உளரோநம் காத லோரே.*

---

*குறுந். 130. வெள்ளிவீதியார்.

தொட்டு - தோண்டி. விலங்கு - குறுக்கிடும். இரு - பெரிய. முந்நீர் - கடல். காலின் - கால்களால். தேரின் - ஆராய்ந்தால். கெடுநர் - காணப்படாமல் தப்புவோர்.

76. அழியும் சிறுநுரை

பொருள் தேடும் நோக்கத்தோடு பிரிந்த தலைவனுடைய நினைவால் தலைவியின் துயர் வளர்ந்தது. தோழி அவளை ஆற்றுவிப்பதற்காகப் பல கூறி வற்புறுத்தினள். அவள் கூறியவற்றை ஏற்றுக்கொண்டு பொறுத்திருக்கத் தலைவியால் முடியவில்லை. காதலன் பிரிந்த பிறகு பிரிவுத் துயரத்தைப் பொறுத்திருக்குமாறு கூறுவோர், காதல் வாழ்க்கையின் தன்மையை அறியாதவராக இருக்கவேண்டும்; அல்லது, கல்நெஞ்சம் உடையவராக இருக்கவேண்டும் என்றாள்.

"காதல்நோயைப் பொறுத்திரு என்று கூறுபவர், அதை இன்னது என்று அறியாரோ? அல்லது, அவ்வளவு வன்மையான நெஞ்சம் உடையவரோ? யாம் எம் காதலரைக் காணவிட்டால், துயரம் மிக்க நெஞ்சோடு, வெள்ளத்தில் கல்மேல் மோதி அழியும் சிறிய நுரைபோல், மெல்ல மெல்ல அழகின்றோமே."

காமம் தாங்குமதி என்போர் தாம்அஃது
அறியலர் கொல்லோ? அனைமது கையர்கொல்?
யாம்எம் காதலர்க் காணேம் ஆயின்
செறிதுளி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்ஆ குதுமே.*

---

*குறுந். 290. கல்பொருசிறுநுரையார்.

உவமையின் சிறப்பால் புலவர்க்குப் பெயர் வழங்கலாயிற்று.

மதி – முன்னிலை அசை. அனை - அனைய, அப்படிப்பட்ட. மதுகையர் கொல் - வன்மை உடையவரோ. செறி துனி-நிறைந்த துன்பம். பெருநீர் - கடல். பொரு-தாக்கி, மோதி. இல் ஆகுதும் - இல்லையாவோம், அழிவோம்.

77. ஊமன் துயரம்

தலைவன் பிரிவை நினைந்து தலைவி மிக வருந்துவதைக் கண்டு தோழி துயருற்றாள். தோழியின் துயரத்தைக் கண்ட தலைவி முன்னிலும் மிகுதியாக வருந்தினாள். யாரிடமாவது சொல்லி ஆறுதல் பெறவும் முடியாமல், தனியே இருந்து பொறுக்கவும் முடியாமல், தான் படும் துன்பத்தை ஓர் உவமை வாயிலாகக் கூறினாள்.

"பல பிரிவாகப் பிரிந்து செல்லும் இடங்களில் யாமரங்களை உடைய துன்பமான நெடுவழிகளில் சென்ற தலைவருடைய கொடுமையை நினைந்து உறங்காமல் படும் துன்பத்தை விட இது பெருந்துன்பமாயிற்று. கிணற்றில் விழுந்து குரால்பசு படும் துன்பத்தை இரவில் கண்ட ஊமையன் ஒருவன் (துயரத்தைத் தாங்கவும் முடியாமல் சொல்லவும் முடியாமல் வருந்தல்) போல், யான் படும் துயரம் பொறுக்க முடியாததாக உள்ளது."

கவலை யாத்த அவல நீளிடைச்
சென்றோர் கொடுமை எற்றித் துஞ்சா
நோயினும் நோய்ஆ கின்றே ; கூவல்
குரால்ஆன் படுதுயர் இரவில் கண்ட
உயர்திணை ஊமன் போலத்
துயர்பொறுக் கல்லேன் தோழி நோய்க்கே.*

---

*குறுந். 224. கூவன் மைந்தன்.

கவலை - வழிகள் பிரியும் இடம். யாத்த - யா மரங்களை உடைய. அவல - துன்பமான. நீள் இடை - நீண்டஇடம். எற்றி - நினைந்து. துஞ்சா - உறங்காத. நோயினும் - நோயை விட. ஆகின்று - ஆனது. கூவல் - கிணறு. குரால் - பசுவகை. உயர் திணை ஊமன் - கோட்டான் அல்லாத மனித ஊமை. பொறுக்கல் லேன் - என்றால் பொறுக்க முடியவில்லை.

78. நல்வினை உடையவர்கள் !

மாலைக்காலம், பசுக்கள் கன்றை நினைந்து ஆவலுடன் தொழுவங்களுக்குத் திரும்பிவரும் நேரம். அப்போதுதான் வெளியூர்களுக்குச் சென்றவர்களும் தம் தம் குடும்பங்களுக்கு ஆர்வமுடன் திரும்பிவந்து சேர்வது வழக்கம். தலைவன் பொருள் தேடும்பொருட்டு வெளிநாட்டுக்குப் பிரிந்த போது, தலைவி நாள்தோறும் மாலைக் காலத்தில் அவன் திரும்பி வரக்கூடும் என்று எதிர்பார்த்துவந்தாள். பலநாள் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்து சோர்வுற்றாள். தோழியை நோக்கிப் பின்வருமாறு கூறினாள்.

" தவம் செய்திருக்கவேண்டும், தோழி ! நிலத்தில் அசையும் அலைதாடியுடன் பருத்த மடியை உடைய பசுக்கள் பால் சொரிந்து கன்றை நினைந்து மந்தையையும் கடந்து ஊருக்குள் திரும்பி வருகின்ற துன்பமான மாலைக்காலத்தில், பொருள்முயற்சி காரணமாகச் சென்று பிரிந்து வாழும் காதலர் திரும்பிவருவதைக் காணப்பெறுகின்றவர் தவம் செய்திருக்க வேண்டும்."

நோற்றோர் மன்ற தோழி...
நிலம்தூங்கு அணல வீங்குமுலைச் செருத்தல்
பால்வார்பு குழவி உள்ளி நிரைஇறந்து
ஊர்வயின் பெயரும் புன்கண் மாலை
அரும்பெறல் பொருட்பிணிப் போகிப்
பிரிந்துஉறை காதலர் வரக்காண் போரே*

---

*குறுந். 344. குறுங்குடி மருதன்.

தூங்கு - அசைதல். அணல - அலைதாடி உடையனவாகிய. வீங்கு - பெரிய. செருத்தல் - பசு. வார்பு - ஒழுகி. நிரை - பசுக்கூட்டம். இறந்து - கடந்து. வயின் - இடத்தில். புன்கண் - துன்பம். பிணி - பிணிப்பு - கடமைத் தொடர்பு.

79. சொல்வார் உண்டோ?

வெளிநாட்டுக்குச் சென்ற தலைவன் திரும்பி வரவில்லை. மழைக்காலம் வந்துவிட்டது. மழைக்காலத்தில் வழக்கமாகப் பூக்கும் பீர்க்க மலரும் பூத்துவிட்டது. தலைவியின் மேனியும் பிரிவாற்ருமையால் வாடிப் பீர்க்க மலர்போல் பசலை நிறம் பெற்றுவிட்டது. தலைவனுக்குத் தன் நிலையை அறிவிப்பவர் ஒருவரும் இல்லையே என்று தலைவி ஏங்கினுள்; எவரேனும் அவரிடம் சென்று அறிவித்தால், தோட்டத்தில் பூத்துள்ள பீர்க்க மலர் சிலவற்றைக் கொண்டு சென்று அவர்க்கு அறிவித்தால், நலமாகும் என்று ஏங்கினுள்.

“இந்த மலர்களைப் போன்ற நிறமுடையவளாக மாறினுள் உன் மனைவி என்று அவரிடம் நெருங்கிச் சென்று சொல்வோர் இருந்தால் மிக நல்லதாகும், தோழி! நம் தோட்டத்தில் நீர் ஒழுகும் பசிய புதரில் செழித்துள்ள மழைக்காலத்துப் பீர்க்க மலர் சிலவற்றை எடுத்துக்கொண்டு போய்ச் சொல்வோர் இருந்தால் மிக நல்லதாகும்.”

இன்னள் ஆயினள் நன்னுதல் என்றுஅவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழி! நம்படப்பை
நீர்வார் பைம்புதல் கலித்த
மாரிப் பீரத்து அலர்சில கொண்டே.*

---

*குறுந். 98. கோக்குளமுற்றன்.

இன்னள் - இத்தன்மையானவள். நன்னுதல் - அழகிய நெற்றியை உடையவள் - தலைவி. அவர் - அவரிடம். துன்ன - நெருங்க. செப்புநர்ப் பெறின் - சொல்வோரைப் பெற்ருல் - சொல்வோர் வாய்த்தால். மன் - மிக. படப்பை - தோட்டம். வார் - ஒழுகும். புதல் - புதர். கலித்த - செழித்த.

80. கனவே வாழ்க!

தலைவன் வெளிநாட்டுக்குப் பிரிந்து சென்று அங்கே தங்கியிருந்தபோது அடிக்கடி தலைவியை நினைந்து வருந்தினான். கனவிலும் அவளைக் கண்டு வருந்தினான். ஒரு முறை கனவில் அவளைக் கண்டு விழித்துக்கொண்டு, அந்தக் கனவைப் போற்றினான். கனவு காதலியை அழைத்துக் கொண்டு வந்து தனக்குக் காட்டி உதவியது என்றும், அதனால் துணை பிரிந்து வாழ்கின்றவர்கள் அத்தகைய கனவை இகழ மாட்டார்கள் என்றும் போற்றினான்.

" நுண்ணிய அணிகலன்களை அணிந்த காதலியைக் கொண்டு வந்து தந்ததுபோல் காட்டி, இனிய துயிலிலிருந்து எழுப்புகின்றாய், கனவே! துணையை விட்டுப் பிரிந்தவர்கள் உன்னை இகழமாட்டார்கள்."

நுண்பூண் மடந்தையைத் தந்தோய் போல
இன்துயில் எடுப்புதி கனவே!
எள்ளார் அம்ம துணைப்பிரிந் தோரே.*

---

*குறுந். 147. கோப்பெருஞ் சோழன்.

பூண் - அணிகலம். எடுப்புதி - எழுப்புகிறாய். அம்ம - முன்னிலை அசை; கேள் என்னும் கருத்து உடையது.

81. பழிக்க வேண்டா

தலைவன் திரும்பிவரும்வரையில் தலைவியை ஆற்றுவிக்கப் பெருமுயற்சி செய்தாள் தோழி. அதுவரையில் தலைவனைப் பற்றி ஒருகுறையும் கூறவில்லை. தலைவன் திரும்பிவருதலை அறிந்தவுடன், தலைவியை அணுகினாள். தலைவர் கல்நெஞ்சம் உடையவர் என்றும், அன்பு இல்லாதவர் என்றும் பழித்தாள். இதைக் கேட்ட தலைவி வருந்தினாள். தலைவன் வந்ததும் அவனிடமும் அவ்வாறு உரைத்தால் அவன்மனம் நாணுமே நோகுமே என்று வருந்தினாள். அவ்வாறு அவனிடம் சொல்லாதிருக்குமாறு தோழியிடம் கேட்டுக்கொண்டாள்.

"தோள்வளைகளை நெகிழுமாறு செய்த கொடியவனாகிய தலைவன் திரும்பிவரும்போது இனிய முகம் கோணாமல், தெய்வக் கற்போடு அவனெதிர் சென்று விரும்பிப் பேசு; 'நீ உண்மையாகவே அறிவில்லாய்' என்று அவனைக் கேட்டு வருத்தம் செய்யாதே, தோழி. சான்றோர், தம்மைப் பிறர் புகழ்வதற்கு முன்பே நாணுவார்கள் என்றால், ஆராயுமிடத்து, பழியை எவ்வாறு தாங்குவார்கள்?"

நெடிய திரண்ட தோள்வளை ஞெகிழ்த்த
கொடியன் ஆகிய குன்றுகெழு நாடன்
வருவதோர் காலை இன்முகம் திரியாது
கடவுட் கற்பின் அவனெதிர் பேணி
மடவை மன்ற நீஎனக் கடவுபு
துனியல் வாழி; தோழி! சான்றோர்
புகழு முன்னர் நாணுப;
பழியாங்கு ஒல்பவோ காணுங் காலே.*

---

*குறுந். 252. கிடங்கிற் குலபதி நக்கண்ணனார்.

கெழு - பொருந்திய. திரியாது - கோணாமல். பேணி - விரும்பி. மடவை—அறியாமை உடையாய். மன்ற - திண்ணமாக. கடவுபு - கடவி. துனியல் - துன்புறுத்தாதே. ஒல்ப - பொருந்துவர்.

82. இத் துன்பமே இனியது

தலைமகன் மேற்கொண்ட கடமையை முடித்துத் திரும்பிவருவதை அறிந்தாள் தோழி. அதுவரையில் தலைவியின் துயரத்தை ஆற்றுவதற்காக அவன்மேல் ஒரு குறையும் சொல்லாமலிருந்தாள். அவன் திரும்பிவருவதை அறிந்ததும் தலைவியை அணுகி, “ காதலன் கொடியவன் ; அதனால்தான் நீ இவ்வாறு வருந்துமாறு துன்பம் செய்தான் ” என்றாள். அதைக் கேட்ட தலைவி, தலைவன் கொடியவன் என்பதை மறுத்தாள் ; அவனால் துன்பமே விளைந்தாலும், அந்தத் துன்பம் தேவருலகத்து இன்பத்தினும் சிறந்தது என்றாள்.

“ தலைவன் இனியவன் ஆதலால், அத்தகைய உறவு உடையவரால் விளையும் துன்பத்தைவிட இனியதோ ? இனியது எனக் கூறப்படும் தேவருலகம் அதைவிட இனியதோ ?”

...நாடன்
இனியன் ஆகலின் இனத்தின் இயன்ற
இன்னா மையினும் இனிதோ
இனிதுஎனப் படூஉம் புத்தேள் நாடே.*

---

*குறுந். 288. கபிலர்.

இனத்தின் - இனமாக உள்ளவரால். இயன்ற - நேர்ந்த எனப்படூஉம் - என்று மற்றவர்களால் கூறப்படும். புத்தேள் தேவர்.

83. வெள்ளம் வற்றியது

தலைவன் வெளிநாட்டில் பொருள் தேடும் முயற்சியில் வெற்றி பெற்று நெடுங்காலம் கழித்துத் திரும்பினான். அவன் பிரிந்திருந்த காலத்தில் தலைவியும் தானும் வருந்திய துயரத்தைத் தோழி அவனுக்கு எடுத்துரைத்தாள்; வெளிநாட்டில் இருந்தபோது அவனுக்குத் தம்மைப்பற்றிய நினைவுவந்ததோ எனக் கேட்டாள். அதற்கு மறுமொழி கூறிய தலைவன், பிரிந்திருந்த காலத்தில் வெள்ளம் போல் இருந்த காதல்நோய் திரும்பிவந்து சேர்ந்தபின் கையால் இறைத்து உண்ணும் நீர்போல் குறைந்து போயிற்று என்று கூறினான்.

"நான் உங்களைப் பற்றி எவ்வளவோ எண்ணினேன் அல்லேனோ? எண்ணி மிக மிக நினைத்தேன் அல்லேனோ? இவ்வாறு பிரிந்து வாழச் செய்யும் உலகத்துப் பண்பை நினைத்து மருண்டேன் அல்லேனோ? நீண்ட மரங்களின் கிளைகளில் தோய்ந்த பெரு வெள்ளம், பிறகு கையால் இறைத்து உண்ணுமாறு குறைந்து போனாற்போல் அவ்வளவு பெரிய காதல்நோய் இவ்வாறு குறைந்து முடியுமாறு எண்ணினேன் அல்லேனோ?"

உள்ளினேன் அல்லெனோ யானே; உள்ளி
நினைத்தனென் அல்லெனோ பெரிதே; நினைத்து
மருண்டனென் அல்லெனோ உலகத்துப் பண்பே;
நீடிய மரத்த கோடுதோய் மலிர்நிறை
இறைத்துஉணச் சென்றுஅற் றுஅங்கு
அனைப்பெருங் காமம் ஈண்டுகடைக் கொளவே.*

---

*குறுந். 99. அவ்வையார்.

மரத்த - மரங்களினுடைய. கோடு - கிளை. மலிர்நிறை - வெள்ளம். அனை - அனைய. ஈண்டு - இங்கு. கடைக்கொள - முடிய.

84. அன்பு அவ்வளவுதான்

(தலைவன் ஒரு பரத்தையிடம் உறவுகொண்டு அவளுடைய வீட்டில் தங்கியிருந்து பிறகு திரும்பினான். தலைவி அவனுடைய ஒழுக்கக் கேட்டை உணர்ந்து அவனை வரவேற்காமல் ஊடல் கொண்டிருந்தாள். தலைவன் தோழியை அணுகி ஊடலைத் தணிக்குமாறு அவளை வேண்டினான். அதற்குத் தோழி, அவன் தொடக்கத்தில் தலைவியிடம் கொண்டிருந்த அன்பு முற்றிலும் மாறி அவளை வெறுப்பது தகுமோ என்று கடிந்துரைத்தாள்.

" அந்நாளில் பசிய வேப்பங்காயை என் தோழி உனக்குத் தந்தால், நீர் அதை இனிய அழகிய வெல்லக் கட்டி என்றீர். இப்போதோ, பாரியின் பறம்புமலையில் உள்ள குளிர்ந்த சுனையின் தெளிந்த நீர் தைத்திங்களின் குளிர்ச்சி உடையதாகத் தந்தாலும் வெப்பமாக உள்ளது என்றும், உவர்ப்பாக உள்ளது என்றும் கூறினீர். ஐயா, அப்படிப்பட்டதாக உள்ளது உம் அன்பின் தன்மை!"

**வேம்பின் பைங்காய்என் தோழி தரினே
தேம்பூங் கட்டி என்றனிர் ; இனியே
பாரி பறம்பின் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர் ;
ஐய ! அற்றால் அன்பின் பாலே.***

---

*குறுந். 196. மிளைக்கந்தன்.

தே - இனிய. பூ - அழகிய. தெண்ணீர் - தெளிந்த நீர். தைஇத் திங்கள் - தைமாதத்தின். அற்று — அத்தன்மைத்து பால் - பான்மை - தன்மை.

85. மலர் தந்த முள்

பரத்தையிடம் தங்கியிருந்து வந்த தலைவன் ஊடல் தணிக்குமாறு தோழியை வேண்டினன். அவனுடைய வேண்டுகோளை முதலில் மறுத்த தோழி பிறகு இசைந்தாள். தலைவியிடம் வந்து, முன்போல் தலைவனிடம் அன்பு செலுத்துவதே நல்லது என்றாள். அதற்குத் தலைவி தன் ஊடல் தோன்ற, தலைமகன் முதலில் இனியவனாக இருந்து இப்போது கொடுமை செய்வதை எடுத்துரைத்தாள்.

"வருந்துகின்றது என் நெஞ்சம்; வருந்துகின்றது என் நெஞ்சம். புன்செய் நிலத்தில் நெருங்கி வளர்ந்த சிறிய இலைகளை உடைய நெருஞ்சியின் மலர் – கண்ணுக்கு இனியதாய்த் தோன்றிய புதிய மலர் - பிறகு துன்பமான முள்ளைத் தருவதுபோல், முதலில் இனியவை செய்து அன்பு காட்டிய நம் காதலர் இப்போது துன்பம் செய்தலை நினைந்து வருந்துகின்றது என் நெஞ்சம்."

நோம்என் நெஞ்சே; நோம்என் நெஞ்சே;
புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்குஇன் புதுமலர் முள்பயந் தாஅங்கு
இனிய செய்தநம் காதலர்
இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே.*

---

*குறுந். 202. அள்ளூர் நன்முல்லையார்.

நோம் - வருந்தும். புலம் - நிலம். அமன்ற - நெருங்கி வளர்ந்த. கட்கு - கண்ணுக்கு. இன் - இனிய. பயந்தாஅங்கு - தந்தாற்போல்.

86. உன்னை விட்டு வாழோம்

தலைவன் தலைவியின் ஊடலைக் கண்டு திகைத்தான். தோழியின் உதவியை நாடினான். முதலில் அவள் மறுத்தாள். மீண்டும் பணிமொழி கூறித் தோழியை வேண்டிக் கொள்ளவே, தோழி ஊடல் தணிப்பதாகக் கூறி அவனுக்கு அறிவுரை கூறினாள்.

"தொழில் செய்யும் உழவர் தம் வேலையை முடிப்பதற்காக, வண்டுகள் தேன் உண்ணுமாறு மலர்ந்த நறுமணம் கீழே அழியுமாறு நெய்தலை அறுத்து எறிந்து நீண்ட வரப்புகளிலே வாடவிடுகின்றார்கள். ஆயினும் 'இவர்கள் கொடியவர்கள், வேறு நிலத்திற்குச் சென்று அங்கே வாழ்வோம்' என்று அந்த இடத்தைவிட்டு நீங்காமல் திரும்பவும் களைகட்ட அதே வயலில் வளர்ந்து மலர்கின்ற உன் ஊரின் நெய்தல் போல் உள்ளேம் யாம்; தலைவ! நீ எமக்குத் துன்பமானவை பலவற்றைச் செய்தாலும் உன்னை இன்றி வாழ முடியாத கற்புடையேமாக இருத்தலால்."

கைவினை மாக்கள்தம் செய்வினை முடிமார்
சுரும்புண மலர்ந்த வாசம் கீழ்ப்பட
நீடின வரம்பின் வாடிய விடினும்
கொடியரோ நிலம்பெயர்ந்து உறைவேம் என்னாது
பெயர்த்தும் கடிந்த செறுவில் பூக்கும்
நின்ஊர் நெய்தல் அனையேம் பெரும!
நீஎமக்கு, இன்னா தனபல செய்யினும்
நின்இன்று அமைதல் வல்லா மாறே.*

---

*குறுந். 309. உறையூர்ச் சல்லியன் குமாரனார்.

கைவினை - கையால் செய்யும் தொழில். முடிமார் - முடிக்க. பெயர்ந்து - நீங்கி. பெயர்த்தும் - திரும்பவும். கடிந்த - களையப்பட்ட. செறுவில் - வயலில். வல்லாமாறே - முடியாமையால்.

87. எம் வீட்டில் சேர்த்துவிடு

பரத்தையிடம் உறவுகொண்டு அவளிடம் தங்கியிருந்து வந்த தலைவனைக் கடிந்துரைத்துத் திருத்த முயனாள் தோழி. பழகிய பிறகு இனிய பொருளும் வெறுப்புக்கு இடமாவதுபோல், தலைவி இப்போது அவனுக்கு வேண்டாதவளாக ஆனதுபற்றித் தான் வருந்துவதாகச் சொல்லி, அவ்வாறாயின் தம் தாய்வீட்டுக்குக் கொண்டுபோய் விட்டுவிடுமாறு கூறினாள். தலைவன் முன்பு களவுக்காலத்தில் இராப்பொழுதில் வருந்தி வந்து நின்றபோது அவனுடைய துன்பத்தைத் தீர்த்த தம் உதவியை மட்டும் அப்போது அவனுக்கு நினைவூட்டினாள்.

“நீரில் நெடுநேரம் விளையாடினால் கண்களும் சிவக்கும். நிறைய உண்டவரின் வாயில் தேனும் புளிக்கும். ஆதலின் வெறுத்துப் பிரிந்தாய் என்றால் எம்முடைய தாய்வீட்டுக்குக் கொண்டுபோய் விட்டுவிடுக. அழகிய குளிர்ந்த பொய்கை அமைந்த எம் தந்தையின் ஊரில் (இரவில்) கடுமையான பாம்புகள் ஓடும் தெருவில் நடுங்கி நின்ற உன் துன்பத்தைக் களைந்து உதவிய எம்மைக் கொண்டுபோய் விட்டுவிடுக.”

நீர்நீடு ஆடின் கண்ணும் சிவக்கும்;
ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்;
தணந்தனை ஆயின்எம் இல்உய்த்துக் கொடுமோ
அம்தண் பொய்கை எந்தை எம்ஊர்க்
கடும்பாம்பு வழங்கும் தெருவில்
நடுங்குஅஞர் எவ்வம் களைந்த எம்மே.*

---

*குறுந். 354. கயத்தூர்கிழான்.

நீடு - நெடுநேரம். ஆர்ந்தோர் - வயிறார உண்டவரின். தணந்தனை - பிரிந்தாய். உய்த்து - செலுத்தி. அஞர் - துன்பம். எவ்வம் - துன்பம். எம்(மே) - எம்மை.

88. மறுமையில் ஆகுக

தலைவன் பரத்தையிடமிருந்து திரும்பியபின் தோழியின் உதவியால் தலைவியின் ஊடலைத் தணிக்க முயன்றான்; முயற்சியில் வெற்றியும் பெற்றான். தலைவியின் அன்புக்கு உரியவனாக மகிழ்ந்திருந்தான். ஆயின், அப்போதும் தலைவி அவனுடைய குற்றத்தை மறக்கவில்லை; வாய்ப்புக் கிடைக்கும்போது அதை அன்புடன் எடுத்துரைத்துத் திருத்த வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தாள். தலைவன் முன்போல் மகிழ்ந்திருந்தபோது, அவனிடம் வரம் கேட்பது போல் கூறினாள். இப் பிறப்பில், மனைவியாக இருக்க முடிந்ததே அல்லாமல், மனத்தைக் கவரும் காதலியாக இருக்க முடியவில்லையே என்று வருத்தக் குறிப்பைப் புலப்படுத்தி மறுமையிலேனும் அவ்வாறு அமைய வேண்டும் என்றாள். மனத்தைக் கவரும் காதலியாக இல்லாத காரணத்தால் தலைவன் தன்னை விட்டுப் பரத்தையை நாடினான் என்பதைக் குறிப்பாக உணர்த்தினாள்.

"தலைவ! இப்பிறப்பு மாறி மறுபிறப்பு வாய்த்தாலும், நீ என் கணவனாகவே அமைவாயாக. யான் உன் நெஞ்சத்திற்கு இயைந்த காதலியாக அமைவேனாக."

...சேர்ப்ப !
இம்மை மாறி மறுமை ஆயினும்
நீஆ கியர்என் கணவனை ;
யான்ஆ கியர்நின் நெஞ்சுநேர் பவளே.*

---

*குறுந். 49. அம்மூவனார்.

சேர்ப்ப - கடற்கரைத் தலைவ. ஆகிய - ஆகுக. கணவனை - ஐகாரம் முன்னிலை உணர்த்துவது. நேர்பவள் - இயைந்தவள்.

89. மான் பிரியுமோ?

கார்காலம் வருவதற்குமுன் வெளிநாட்டுக் கடமையை முடித்துத் திரும்பிவந்துவிடுவதாகக் கூறித் தலைவியிடம் விடைபெற்றுச் சென்றான் தலைவன். கார்காலம் வந்த பிறகும் அவன் திரும்பி வரவில்லை. அதனால் தலைவி வருந்தலானாள். அவளுடைய வருத்தத்தைத் தணிக்கத் தோழி பலவாறு முயன்றாள். தலைவன் வந்தால்தான் தன் துன்பம் தீரும் என்னும் குறிப்புடன், கொன்றைமலர்கள் தன் பசலைபோல் பூத்திருப்பதைத் தலைவி தோழிக்குக் காட்டினாள்; காட்டில் மான்கள் பிரிந்து வாழ்வது உண்டோ என்றாள். தலைவன் சென்ற காட்டுவழியில் தன்னைப் போல் பெண்மானைப் பிரிந்த ஆண்மானை அவர் காண்பதும் உண்டோ என்று ஏங்கினாள்.

"அவர் சென்ற நாட்டில் உள்ள கொன்றையின் மலர்கள் நம்மைப்போல் பசலை நிறம் பெற்று விளங்கும் இந்தக் கார்காலத்தில் தம்மைப் போல் பெண்மானைப் பிரிந்து சென்ற ஆண்மானையும் நம் தலைவர் காண்பாரோ?"

சென்ற நாட்ட கொன்றையம் பசுவீ
நம்போல் பசக்குங் காலைத் தம்போல்
சிறுதலைப் பிணையின் தீர்ந்த நெறிகோட்டு
இரலை மானையும் காண்பர்கொல் நமரே?*

---

*குறுந். 183. ஔவையார்.

பசுவீ - அப்போது மலர்ந்த புதிய மலர்கள். பசக்கும் - பசலை நிறம் பெறுகின்ற, பொன் நிறமாக மலர்கின்ற. பிணை - பெண் மான். பிணையின் - பெண்மானிடமிருந்து. தீர்ந்த - பிரிந்த. நெறி கோட்டு - நெறித்த கொம்புகளை உடைய. இரலைமான் - ஆண்மான். காண்பர்கொல் - காண்பாரோ.

90. கார் நகைக்கின்றதே!

கார்காலம் வந்ததும் தலைவன் திரும்பி வந்துவிடுவான் என்று தலைவி எதிர்பார்த்திருந்தாள். கார்காலம் வந்து விட்டது. அந்தக் காலத்தில் மலர்வதற்குரிய முல்லையும் அரும்பெடுத்துவிட்டது. தலைவன் வரவில்லை. தலைவி மிக வருந்தலானாள். எங்கிருக்கின்றார் என்று அறியவும் முடிய வில்லையே என வருந்தினாள். எதிரே இருந்த முல்லைக் கொடியில் கூரிய பற்களைப் போன்ற அரும்புகள் இருப்பது, கார்காலமே தன்னைப் பார்த்து எள்ளி நகைப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. தோழியிடம் இதைக் கூறினாள்.

" இளமை அருமையான பருவம் என்பதையும் கருத வில்லை, பொருள்வளம் விரும்பிச் சென்ற காதலர். அவர் இவ்விடத்திற்குத் திரும்பிவந்து சேரவும் இல்லை. எவ்விடத் தில் உள்ளாரோ என்று யான் வருந்திக்கொண்டிருக்க, மழையால் காக்கப்பட்ட முல்லைக் கொடியின் கூட்டமான அரும்புகளே பற்களாகக் கொண்டு கார் காலம் நகைக் கின்றதே தோழி!"

இளமை பாரார் வளம்நசைஇச் சென்றோர்
இவணும் வாரார் எவண ரோஎனப்
பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை இலங்குஎயிறு ஆக
*நகுமே தோழி நறுந்தண் காரே.**

---

*குறுந். 126. ஒக்கூர் மாசாத்தியார்.

நசைஇ - விரும்பி. இவணும் - இவ்விடத்திலும். எவணரோ - எவ்விடத்தாரோ. பெயல் - மழை. புறந்தந்த - காப்பாற்றிய. முகை - அரும்பு. இலங்கு - விளங்கு. நறுந்தண் கார் - நறுமண முள்ள குளிர்ச்சியான கார்காலம்.

91. மயிலுக்கு அறிவில்லை

தலைவன் கூறிய கார்காலம் வரும்வரையில் பொறுமையுடன் காத்திருந்தாள் தலைவி. கார் வந்துவிட்டது. கூறியவாறு தலைவன் வராமையால், அவன்நிலைமை என்ன ஆயிற்றோ என்று தலைவி வருந்தத்தொடங்கினாள். அவளை ஆற்றுவிக்க முயன்ற தோழி இன்னும் கார்காலம் வரவில்லை என்றே பொய் கூறத் தொடங்கினாள்.

" மயில் கூட்டங்கள் அறியாமை உடையன. கார்கால மழை பெய்தது என்று தவறாகக் கருதி அதன் எதிரே ஆடவும் ஆடின. பிடவ மரங்களும் அவ்வாறே அறியாமையால் பூத்துவிட்டன. இது கார்காலம் அன்று, தோழி! உன் துயரம் தீர்வதாக. கழிந்துபோன மழையில் பெய்யாமல் எஞ்சி நின்ற பழைய நீரை, புதிய நீர் கொள்வதற்காகக் கீழே கொட்டிவிட்டுச் செல்கின்ற அன்பற்ற மேகம் முழங்கும் குரல் அது. அந்தக் குரலைக் கேட்டு அறியாமையால் அவை அவ்வாறு செய்கின்றன."

மடவ வாழி மஞ்ஞை மாயினம்;
கால மாரி பெய்தென அதன்எதிர்
ஆலலும் ஆலின; பிடவும் பூத்தன;
கார்அன்று இகுளை; தீர்கநின் படரே;
கழிந்த மாரிக்கு ஒழிந்த பழநீர்
புதுநீர் கொளீஇய உகுத்தரும்
நொதுமல் வானத்து முழங்குகுரல் கேட்டே.*

---

*குறுந். 251. இடைக்காடனார்.

மடவ - அறியாமை உடையன. மஞ்ஞை - மயில். மா - கரிய. இனம் - கூட்டம். பெய்தென - பெய்தது என்று. ஆலல் - ஆடல். இகுளை - தோழி. படர் - நினைப்புத்துயரம். கொளீஇய - கொள்ள. உகுத்தரும் - சொரியும். நொதுமல் - அயல்தன்மை உடைய - அன்பற்ற.

92. தேர்மணியின் ஒலியோ ?

கார்காலத்திற்குள் திரும்பிவருவதாகக் கூறிச் சென்ற தலைவன் இன்னும் வராமையால், தலைவி மிக வருந்தினாள் ; வராத காரணம் யாதோ, நேர்ந்த இடையூறு என்னவோ என்று துயருற்றாள். அந்தத் துயரத்தை மாற்றுவதற்காகத் தோழி அவளுடைய மனத்தை வேறு வழியில் செலுத்த முயன்றாள். வீட்டை விட்டு வெளியே சென்றால் துயரம் ஓர் அளவு குறையும் என நம்பினாள். தேரின் மணியோசை போல் ஏதோ கேட்பதாகக் கூறி, உயர்ந்த கல் ஒன்றன்மேல் ஏறி அவன் வருவதைக் காணலாம் எனத் தலைவியை அழைத்தாள்.

" முல்லைக் கொடி படர்ந்த கல்லின்மேல் உயர ஏறிப் பார்த்துவருவோம், புறப்பட்டு வா, தோழி ! புல்லை மேய்ந்த நல்ல பசுக்கள் அணிந்த மணியின் ஒலியோ ? செய்யும் கடமையை முடித்த தலைமையான உள்ளத்தோடு, வில்வீரர் பக்கத்தே இருந்து போற்ற, ஈர மணலை உடைய காட்டு வழியில் வருகின்ற தேரின் மணியோசையோ ? அங்கே எவையோ ஒலிக்கின்றன."

முல்லை ஊர்ந்த கல்உயர் ஏறிக்
கண்டனம் வருகம் சென்மோ தோழி !...
புல்ஆர் நல்ஆன் பூண்மணி கொல்லோ ?
செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு
வல்வில் இளையர் பக்கம் போற்ற
ஈர்மணல் காட்டாற்று வருஉம்
தேர்மணி கொல்ஆண்டு இயம்பிய உளவே.*

---

*குறுந். 275. ஒக்கூர் மாசாத்தியார்.

கண்டனம் வருகம் - கண்டு வருவோம். சென்மோ — செல்க. எல் - இரவு — மாலை. ஏறுஉடை - காளையை உடைய. ஆர் - தின்னும், மேயும். செம்மல் - தலைமை. இளையர் - ஏவல் செய்யும் வீரர்.

93. எல்லாம் மாலையே !

கார்காலம் வந்தபின் நாள்தோறும் மாலையில் தலைவன் திரும்பிவருவான் வருவான் என்று தலைவி எதிர்பார்த்து வருந்தினுள். நாள்தோறும் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாற்றம் மிகுந்து துயரம் பெருகியது. அவளை ஆற்றுவிக்கும் நோக்கத்துடன் அணுகிய தோழி, “ இவ்வாறு மாலைப் பொழுது பிரிந்தவர்க்குத் துயரம் தருவது இயற்கை. எவ்வாறேனும் அதைப் பொறுத்துக்கொள்ள வேண்டும் ” என்ருள். மாலைப்பொழுது மட்டும் அல்லாமல், எல்லாப் பொழுதுமே மாலைப்பொழுதுபோல் தனக்குத் துயரம் தருவதால், பொறுத்துக்கொள்ள வழி இல்லை என்ருள் தலைவி.

“ கதிரவன் மறையும் வானம் செந்நிறம் அடைய, துயரம் மிகுந்து ஒளி அற்ற அந்தப்பொழுது முல்லை மலர்கின்ற மாலைப்பொழுது என்று கூறுவர் அறிவு மயங்கியவர். பெரிய வீட்டில் உச்சிக்கொண்டை உடைய கோழி கூவுகின்ற நன்ருகப் புலர்ந்த விடியற் காலமும் (துயரம் தருவதில்) மாலைப்பொழுதே ; பகற்காலமும் மாலைப் பொழுதே, துணை இல்லாதவர்க்கு.”

சுடர்செல் வானம் சேப்பப் படர்கூர்ந்து
எல்அறு பொழுதின் முல்லை மலரும்
மாலை என்மனுர் மயங்கி யோரே ;
குடுமிக் கோழி நெடுநகர் இயம்பும்
பெரும்புலர் விடியலும் மாலை ;
பகலும் மாலை துணைஇ லோர்க்கே.*

*குறுந். 234. மிளைப்பெருங் கந்தன்.

சுடர் - சூரியன். செல் - சென்று மறையும். சேப்ப - சிவப்ப - செக்கர் அடைய. படர் - நினைப்புத்துன்பம். கூர்ந்து - மிகுந்து. எல் - ஒளி. நகர் - பெரிய வீடு.

94. நெஞ்சம் விரைகின்றது

வெளிநாட்டிற்குச் சென்று மேற்கொண்ட கடமை முடிந்தவுடன், தலைவன் தலைவியிடம் விரைந்து சென்று சேர வேண்டும் என்று மிக விழைந்தான். தலைவியோ நெடுந் தொலைவில் தன் ஊரில் இருந்தாள். அவள் உள்ள இடத்திற்குச் சென்று சேர சில நாள் ஆகும். கடமை முடியும் வரையில் ஆற்றியிருந்த தலைவன் இந்தச் சிலநாள் பிரிந்திருக்க முடியாமல் வருந்தினன். தான் திரும்பிவருவதாகக் கூறிப்பிரிந்த கார்காலமும் வந்துவிட்டது. அதனால் தலைவி தன்னை நினைந்து துயரப்படுவதற்கு முன்பே தான் போய்ச் சேர வேண்டுமே என்று உள்ளம் பதைத்து வருந்தினன்.

“தலைவியின் ஊர் நெடுந்தொலைவில் விரைவில் செல்வதற்கு இயலாத இடத்தில் உள்ளது. என் நெஞ்சமோ, ஈரம் ஏற்பட்டுப் பதமாக அமைந்த புன்செய்நிலத்தில் ஒரே ஏர் உடைய உழவன் பதைத்து வருந்துவதுபோல் பெரிதும் பதைத்து விரைகின்றது. யான் துன்புறுகிறேன்.”

பேரமர்க் கண்ணி இருந்த ஊரே
நெடுஞ்சேண் ஆரிடை யதுவே ; நெஞ்சே
ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓர்ஏர் உழவன் போலப்
பெருவிதுப்பு உற்றன்றால் ; நோகோ யானே.*

---

*குறுந். 131. ஓரேருழவனார்.

உவமையின் சிறப்பால் புலவர்க்கு இப்பெயர் அமைந்தது. ஆடு - அசையும். அமை - மூங்கில். புரையும் - போன்ற. பேர் - பெரிய. அமர் - ஒன்றோடொன்று மாறுபடும். சேண் - தொலைவு. ஆரிடை - அரிய இடம். செவ்வி - பதம். விதுப்பு - பதைப்பு. உற்றன்று - உற்றது.

95. நகைப்பது தகுமோ?

தலைவன் கடமையை முடித்துக் கார்காலத்தில் திரும்பி வருவதாகச் சொல்லிப் பிரிந்தபடியே கார்காலம் வந்ததும் திரும்பிவந்தான். வரும் வழியில் கார்காலத்திற்கு உரிய மலர்கள் மலர்ந்து விளங்குவதைக் கண்டான். அவற்றுள் முல்லை ஒன்று. அதில் வெண்ணிறமாய் நிறைந்துள்ள அரும்புகள் நகைக்கும் பற்களைப் போல் தோன்றின. தனித்து வரும் தன்னை நோக்கி முல்லைக்கொடி அவ்வாறு நகைப்பது தகுமோ என்று கேட்டான்.

"மேகம் மழை பெய்து காத்த நீர்வளம் பொருந்திய அகன்ற காட்டு நிலத்தில், பலரும் தம் தம் வீட்டுக்குத் திரும்பிவரும் பொலிவற்ற மாலைக்காலத்தில், முல்லையே நீ உன் சிறிய வெள்ளை அரும்புகளால் புன்சிரிப்புக் கொண்டு எள்ளி நகையாடுவது போல் காட்டுதல் தகுமோ? தனித்து வருந்துவோரிடத்தில் இவ்வாறு செய்தல் தகுமோ?"

கார்புறந் தந்த நீருடை வியன்புலத்துப்
பலர்புகு தரூஉம் புல்லென் மாலை
முல்லை வாழியோ முல்லை நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை
நகுவை போலக் காட்டல்
தகுமோ மற்றுஇது தமியோர் மாட்டே.*

---

*குறுந். 162. கருவூர்ப் பவுத்திரன்.

கார் - கார்காலத்து மேகம். புறந்தந்த - காப்பாற்றிய. வியன்- அகன்ற. புலத்து - நிலத்தில். புகுதரூஉம் - புகும் - திரும்பிவரும். புல்லென் - பொலிவு அற்ற, அழகு அற்ற. முறுவல் - சிரிப்பு. கொண்டனை - கொண்டாயாகி - கொண்டு. மாட்டு - இடத்து.

96. பதரான நாட்கள்

கடமையை முடித்த தலைவன் ஊர் நோக்கித் திரும்பி வந்துகொண்டிருந்தான். தான் தலைவியுடன் வீட்டிலிருந்து மகிழ்ந்த நாட்களும், அதன்பின் அவளைப் பிரிந்து வெளி நாட்டில் கடமையைச் செய்து கழித்த நாட்களும் அவனு டைய நினைவுக்கு வந்தன. எவ்வளவு நாட்கள் கடமைகளை மேற்கொண்டு புகழ் முதலியவற்றைத் தேடிய போதிலும் தலைவியுடன் இன்பமாக வாழும் நாட்களுக்கு ஒப்பாக முடியாது என்ற உணர்வு அவனுக்குத் தோன்றியது. மற்ற நாட்கள் எல்லாம் வீணான நாட்கள், பயனில்லாத நாட்கள் என்று பாகனிடம் உரைத்தான்.

"மற்ற நாட்கள் எல்லாம் என்ன பயன் உடையவை? எல்லாம் பதர் போல் பயனற்ற நாட்கள். துணைவியின் இரண்டு தோளில் துயில்கொண்டு கழிந்த நாட்களே இந்த உலகத்தில் வாழும் நாட்களாகும்."

எல்லாம் எவனோ பதடி வைகல்!...
அரிவை தோளிணைத் துஞ்சிக்
கழிந்த நாள்இவண் வாழும் நாளே.*

---

*குறுந். 323. பதடிவைகலார்.

அடையில் அமைந்த கருத்துச் சிறப்பால் புலவர்க்குப் பெயர் வழங்கியது.

எவனோ – என்ன பயனோ? பதடி - உள்ளே ஒன்றும் இல் லாத பதர். வைகல் – நாள். அரிவை - பெண் - துணைவி. இணை - இரண்டு. துஞ்சி - உறங்கி. இவண் - இவ்வுலகத்தில்.

97. பாணன் வாழ்க !

வெளிநாட்டுக்குச் சென்றிருந்த தலைவன் திரும்பி வருவதாகப் பாணன் கூறினன். அதைக் கேட்டதும் தலைவி பெருமகிழ்ச்சி அடைந்தாள்; வியந்தாள்; உண்மைதானு என்று ஐயுற்ருள்; பாணன் தானே நேரில் கண்டு அறிந்த செய்தியா, அல்லது பிறர் சொல்லக் கேட்டு அறிந்த செய்தியா என்று வினவினுள். எவ்வாறு இருப்பினும், பாணன் கூறிய செய்தி தன் உள்ளத்தை மகிழ்வித்த நற்செய்தி ஆகையால், செல்வ நகராகிய பாடலிபுரத்தையே அவன் பெறுவானுக என்று வாயார வாழ்த்தினுள்.

"நீயே கண்டாயோ? கண்டவர் கூறக் கேட்டாயோ? உண்மையான ஒன்றைத் தெளிந்துகொள்ள விரும்பினேம்; சொல்வாயாக. பொன் மிகுந்த பாடலிபுத்திர நகரத்தைப் பெறுவாயாக. யார் வாயிலாகக் கேட்டறிந்தாய், காதலர் வருவதை?"

நீகண் டனையோ? கண்டார்க்கேட் டனையோ?
ஒன்று தெளிய நசையினம்; மொழிமோ...
பொன்மலி பாடலி பெறீஇயர்;
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே.*

---

*குறுந். 75. படுமரத்து மோசிகீரனுர்.

நசையினம் - விரும்பினேம். மொழிமோ - மொழிக. மலி - மிகுந்த. பாடலி - பாடலிபுத்திரம் - அக்காலத்தே செல்வம் மிக்க தலைநகரங்களில் ஒன்று. பெறீஇயர் – பெறுக. யார்வாய் - யாரிடத்தில்.

98. அரிய உதவி!

வெளிநாட்டுக் கடமையை முடித்தவுடன் விரைந்து ஊர்க்குத் திரும்ப வேண்டும் என முயன்முன் தலைவன். பாகனிடம் தன் கருத்தைத் தெரிவித்தான். மிக விரைந்து செல்லுமாறு பாகன் தேரைச் செலுத்தினன். எதிர்பார்த்ததைவிட முன்னதாகவே நீண்ட வழிகளை எல்லாம் கடந்து வீட்டெதிரே தேர் வந்து நின்றது. தலைவன் பாகனுடைய பெருமுயற்சியைப் பாராட்டினன். பாகன் தேரைக் கொண்டு வந்து சேர்க்கவில்லை; தலைவியின் உயிரையே கொண்டு வந்தாற்போன்ற உதவி செய்ததாகப் போற்றினன்.

"தொலைவான வழியைக் கடந்து போகாவிட்டால் இடர் இல்லாமல் தலைவியின் காதல் நோயைத் தீர்க்கமாட்டோம் என்று நன்மையை விரும்பி எண்ணிய மனத்தை உடையையாகி, முரம்பு உடையுமாறு சென்று கரம்பு நிலத்திலும் புதுவழி ஏற்படுத்திய அறிவுள்ள பாகனே! நீ இன்று எனக்குக் கொண்டுவந்து தந்தது இந்தத் தேரோ! துன்பத்தால் வருந்தியிருக்கும் தலைவியையே தந்தாய் ஆகையால்."

சேயாறு செல்லாம் ஆயின் இடர்இன்று
களைகலம் காமம் பெருந்தோட்கு என்று
நன்றுபுரிந்து எண்ணிய மனத்தை ஆகி
முரம்புகண் உடைய ஏகிக் கரம்பைப்
புதுவழிப் படுத்த மதியுடை வலவோய்!
இன்று தந்தனை தேரோ?
நோய்உழந்து உறைவியை நல்க லானே.*

---

*குறுந். 400. பேயனர்.

சேயாறு - தொலைவான வழி. செல்லாம் ஆயின் - செல்லேம் ஆயின், செல்லாவிட்டால். இன்று - இன்றி. களைகலம் - களைய மாட்டோம். பெருந்தோட்கு - பெரிய தோள்களை உடைய தலைவிக்கு. வலவோய் - பாகனே! நல்கலான் - அருளியதால்.

99. காக்கைக்குக் கைம்மாறு

தலைவன் பிரிந்து வந்து சேர்ந்ததும், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவியது. தான் பிரிந்திருந்த காலத்தில் தலைவி வருந்தாதவாறு ஆற்றுவித்த உதவிக்காகத் தோழிக்கு அவன் நன்றி செலுத்திப் பாராட்டினான். அதற்குத் தோழி தான் ஆற்றுவிக்க முடியவில்லை என்றும், நாள்தோறும் காக்கை வந்து வீட்டில் கரைந்த (ஒலித்த) காரணத்தால் தலைவி ஆற்றியிருந்தாள் என்றும் கூறினாள். யாரோ புதியவர் வருவதைக் காக்கை அறிவிப்பதால் தலைவன் திரும்பிவரக் கூடும் என்ற நம்பிக்கையே அவளுடைய துயரத்தைத் தணித்தது என்றும், அந்தக் காக்கைக்கு என்ன கைம்மாறு செய்தாலும் தகும் என்றும் கூறினாள்.

"பல பசுக்கள் தந்த நெய்யோடு, தொண்டி என்னும் ஊர் முழுதும் விளைந்த வெண்ணெல்லின் விருப்பமான சோற்றைக் கலந்து ஏழு கலங்களில் கொடுத்தாலும் சிறிய கைம்மாறே ஆகும்; என் தோழியின் பெரிய தோளை நெகிழுமாறு செய்த துன்பத்திற்கு மாற்றாக, விருந்து வரைவதாகக் கரைந்த காக்கைக்கு உரிய பலியாகக் கொடுக்க அது சிறிதே ஆகும்."

பல்ஆ பயந்த நெய்யின் தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழுகலத்து ஏந்தினும் சிறிதுஎன் தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே.*

---

*குறுந். 210 காக்கைபாடினியார் நச்செள்ளையார்.

காக்கையின் உதவியைப் பாடியதால் புலவர் பெயர்க்கு இந்த அடை அமைந்தது.

தொண்டி — ஓர் ஊர். வெஞ்சோறு — விருப்பமான சோறு. ஏந்தினும் — கொடுக்க ஏந்தினாலும். செல்லற்கு — துன்பத்திற்கு. பலி — காக்கைக்கு இடும் சோறு முதலியன.

100. பெய்க மழையே!

தலைவன் மேற்கொண்ட கடமையை முடித்து, கார் காலம் தொடங்கு முன்பே வீட்டிற்குத் திரும்பிவிட்டான். அன்று இரவு மின்னலும் இடியுமாய்ப் பெருமழை பெய்தது. அதைக் கண்ட தலைவன் வியந்தான். தான் ஒரு நாள் கழித்து வந்திருந்தாலும், தலைவி வருந்தியிருப்பாளே என எண்ணினன். மழைக்குமுன் ஊர்க்கு வந்துவிட்டமையால், இனி எவ்வளவு பெருமழை பெய்தாலும் கவலை இல்லை என மகிழ்ந்தான். மழையை வாழ்த்தினன்.

"எங்கும் படிந்த இருள் கெடுமாறு மின்னி, குளிர்ச்சியாக விழும் மழைத்துளிகளை இனியவாய்ச் சிதறி, முறையாகக் கடிப்பால் அடிக்கப்படும் முரசுபோல் முழங்கி இடித்து, இடித்துப் பெய்து இனி வாழ்க! பெருமழையே! யாம் செய்யும் கடமையை முடித்த பெருமித உள்ளத்தோடு இவளிடம் வந்துசேர்ந்து, குவளைமலரின் மணம் கமழும் இவளுடைய கூந்தலாகிய மெல்லிய அணையைப் பெற்றேம்."

தாழ்இருள் துமிய மின்னித் தண்ணென
வீழ்உறை இனிய சிதறி ஊழின்
கடிப்புஇகு முரசின் முழங்கி இடித்திடித்துப்
பெய்துஇனி வாழியோ பெருவான்! யாமே
செய்வினை முடித்த செம்மல் உள்ளமோடு
இவளின் மேவினம் ஆகிக் குவளைக்
குறுந்தாள் நாள்மலர் நாறும்
நறுமென் கூந்தல் மெல்லணை யேமே.*

---

*குறுந். 270. பாண்டியன் பன்னாடு தந்தான்.

தாழ் – படிந்த. துமிய – அழிய. உறை – மழைத்துளி. ஊழின் – முறைப்படி. கடிப்பு - முரசு அடிக்கும் தடி. வான் – மழை. செம்மல் – தலைமை. மேவினம் - பொருந்தினேம்.